Deviyin KANMANI -Tamil Fortnightly JULY -15, 2007. Regd. No. TN/PMG(CCR) 766/06- 08 Registered With RNI Under No.49510/89
Published every 1st and 15th of every month.

## மீண்டும்... நான்!



**வணக்கம்!**

பொங்கல் சிறப்பிதழில் வெளியான ''என் பிரியசகி நாயகி சத்யாவை தங்கள் வீட்டுப் பெண்ணாய் எண்ணி, உருகி, மருகி, கடிதத்திலும், நேரிலும், போனிலும், சண்டையிட்டு, விவாதித்து, சமாதானமடைந்த அன்பு உள்ளங்களுக்கு நன்றி... நன்றி!

இதோ, இந்த நாவல், என்னை பாதித்த நிஜத்தின், கற்பனை விரிவாக்கமே! இதில் வரும் அத்தனை கதாபாத்திரமும் நம்முடன் உலவுகிறவர்கள்தான். இவர்களிடமிருந்து நல்ல விஷயங்களை கிரகித்து, தேவையற்றதை மறந்து விடுங்கள்.

படியுங்கள், விமர்சியுங்கள், சண்டையிடுங்கள்! நானும் ரெடி!

மீண்டும் சந்திப்போம்!
**ஆர்.மணிமாலா.**

தேவியின்
# கண்மணி

**ஆர்.மணிமாலா**

ரூ.8



**சனி பெயர்ச்சி பலன்கள்**

# மயக்கமென்ன... உந்தன் மவுனமென்ன...

# மயக்கமென்ன... உந்தன் மவுனமென்ன...

வீட்டை நெருங்க... நெருங்க வடிவு மனசு பக் பக்கென அடித்துக் கொண்டது.

''மெல்லவே போப்பா... ஒண்ணும் அவசரமில்லே!'' என்றாள் ஆட்டோ டிரைவரிடம்.

இன்னும் இரண்டு மணிநேரத்தில் கதிரவன் மேற்கில் அமிழத் தொடங்கிவிடுவான். பள்ளி முடிந்து குழந்தைகள் ஆட்டோவிலும், ரிக்ஷாவிலும் பிதுங்கி வழிந்து வீடு திரும்பிக் கொண்டிருந்தனர்.

'உதயன் வீட்டிற்கு வந்திருப்பானா? வந்திருப்பான். நான் தான் போன் பண்ணி சொல்லிவிட்டேனே!

''அதோ அந்த தெருவுக்குள்ளே தான்...''

ஆட்டோ தெருவிற்குள் நுழைந்தது.

''இந்த வீடுதான்... நிறுத்திக்கப்பா!''

ஆட்டோ சப்தம் கேட்டு எதிர்வீட்டு தெய்வானை வாசலில் கோலம் போடுவதை நிறுத்திவிட்டு எறிட்டாள்.

'இ...வ...ளா?'

வடிவு மெல்லப்புன்னகைத்தாள்.

பதிலுக்கு சங்கடத்துடன் சிரித்து உள்ளே நகர்ந்து விட்டாள் தெய்வானை.

ஒவ்வொரு வீட்டு வாசலின் முன்பும் திடீர் திடீரென தலைகள் முளைத்து அவளை ஆச்சரியமாய் நோட்டம் விட்டன.

இந்த ஏழு வருடத்தில் வீடுகளில் பெரிதாய் மாற்றமில்லை. மனிதர்களின் விநோத பாவத்தில் தான் பெரிதாய் வித்தியாசம் தெரிந்தது.

பணத்தைக் கொடுக்க ஆட்டோ வட்டமடித்து விரைந்துப்போனது.

சப்தம் கேட்டு வாசலுக்கு வந்த உதயனின் முகத்தில் உணர்ச்சி பிரவாகம்.

-ஆர். மணிமாலா



''அ...ம்...மா!''

''உதயா...''

''வாம்மா... உள்ளே வாம்மா!''

கைப்பற்றி அழைத்துச் சென்றான்.

வெறிச்சோடிப்போயிருந்தது வீடு! தாழ்வாரத்தின் நடுவிலிருந்த துளசிமாடத்தில்... பெண்ணின் கைப்படாததால் வெறும் காய்ந்த குச்சியாய் வீற்றிருந்தது துளசிச்செடி!

சுவற்றின் மூலை, முடுக்குகளில் ஒட்டடை!

'இதோ இந்த அறையில் தானே சைந்தவி' நினைவுப்பெட்டகம் சட்டென திறந்துக் கொள்ள நெஞ்சடைத்தது. வேதனையில் அழுகை முட்டிக் கொண்டு வர... உதயன் ஆதரவாய் அம்மாவை அணைத்துக் கொண்டான்.

''உட்காரும்மா... பால் கொதிக்க வச்சு இறக்கியிருக்கேன். காபி போட்டு எடுத்துட்டு வர்றேன்...''

உனக்கேன்பா சிரமம்? அதான் நான் வந்துட்டேனில்லை?''

ஒருவாரம் நல்லா ரெஸ்ட் எடும்மா! சாப்பாடெல்லாம் ஹோட்டல்லேர்ந்து வரவச்சுக்கலாம்.''

''எம்ப்பா... நான் சொல்றதை...''

''ப்ளீஸ்ம்மா... ரெஸ்ட் எடு!'' என்றவன் சமையலறை சென்று இரண்டே நிமிடத்தில் காபியோடு வந்தான்.

''இந்தாம்மா...''

வாங்கிக் கொண்டாள்.

''ஒரு மாசம் முன்னாடியே நீ வருவேன்னு நான் எதிர்பார்க்கலேம்மா! தாங்க் காட்! அதுவும் இன்னைக்கு தான் போன் பண்ணி சொல்றே நாமே வந்திடறேன். நீ வராதேன்னு தடுத்துட்டே!''

''என்னமோ திடீர்னு அனுப்பிட்டாங்க. எனக்கே காலைலதான் தெரியும். அவ்ளோதூரம் நீ வந்து கஷ்டப்பட வேண்டாம்னுதான் நானே வர்றேன்னுட்டேன். மனசை பிசையுது உதயா பழசெல்லாம் ஞாபகம் வந்து கஷ்டப்படுத்துது. என் மேல எந்த தப்பும் இல்லேப்பா சைந்தவி தான்.''

உடைந்துப்போய் தேம்பினாள் வடிவு!

''அம்மா ப்ளீஸ் எல்லாத்தையும் நீ மறந்தே ஆகணும். நான் உன்னை நம்பறேன் போதுமா?''

''கம்பன் நம்பலையேடா. கடைசிவரை நம்பாமலேயே போய் சேர்ந்துட்டானே...!''

''அம்மா நினைச்சுப் பார்த்தா எல்லாமே கஷ்டமாகத் தான் தெரியும். ஆனா, வேற வழியில்லே. மறந்துதான் ஆகணும்.''

சற்று நேரம் கழித்து... தன்னை தேற்றிக் கொண்டாள்.

''உதயா...''

''சொல்லும்மா!''

''ஒரு அஞ்சு முழம் பூ வாங்கித்தா முடியுமா?''

''எம்மா?''
''என் பாவத்தைப் போக்கிக்க...''
''புரியலேம்மா!''
''வாங்கி வாயேன்...''
''சரி...''

சட்டையை மாட்டிக் கொண்டு புறப்பட்ட உதயன் வடிவின் இரண்டாவது மகன். ஒரு தனியார் கம்பெனியில் நல்ல வேலையில் இருப்பவன். கை நிறைய சம்பளம், கம்பீரமான தோற்றம்.

தெரு தாண்டி மெயின் ரோடு வந்தால் பூக்கடை பைக்கை நிறுத்திவிட்டு, 'அஞ்சு முழம் கதம்பம் குடுங்கம்மா!'' என்றபடி பாக்கெட்டிலிருந்து அம்பது ரூபாய் தாளை எடுத்தான்.

''ஏழு முழம் இருக்கு. அப்படியே வாங்கிக்க தம்பி!''
''சரி... குடுங்க!''
''அம்மா... வந்துட்டாங்களாமே... கேள்விப்பட்டேன்!''
''எவ்வளவு ஆச்சு?''
''நாப்பத்தொம்பது. எப்படியிருந்தக் குடும்பம்? ப்ச்... இனியாவது பார்த்து நடந்துக்கச் சொல்லு! வாழையிலையில் மடித்துக் கொடுத்து, பணத்தை வாங்கிக் கொண்டாள்.

உதயன் பொங்கி வந்த கோபத்தை வலுக்கட்டாயமாய் அடக்கிக் கொண்டான்.

'இதோ... அம்மா வந்து முழுதாய் அரைமணி நேரம் கூட ஆகவில்லை. அதற்குள் வாய்கள் அவலை மெல்ல ஆரம்பித்து விட்டன. என்னிடமே இத்தனை கேள்விகள். சம்பந்தப்பட்ட அம்மாவிடம் எத்தனை அம்புகள் பாயும்? தாங்குவாளா? வாயாலேயே அரைத்து நசுக்கி விடுவார்களோ? புதிதாய் கவலையொன்று அவனைக் கவ்விக் கொண்டது.

வீடு திரும்புவதற்குள் அம்மா வீட்டை சுத்தமாய் பெருக்கி பளிச் என வைத்திருந்தாள்.

பூவை வாங்க நீட்டிய கரம் லேசாய் நடுங்கிற்று.

''பாவம்...அம்மாவுக்கு வயதாகி விட்டது.''

''நான் சாப்பிடறதுக்கு ஏதாவது வாங்கிட்டு வர்றேம்மா! கதவை உள்ளே தாழ் போட்டுக்க!'

''ம்...''

அலுப்பு தீரக்குளித்தாள்.

உடல் லேசானது போலிருந்தது.

ஹாலில் மூவரின் புகைப்படங்களும் மாட்டப்பட்டு அணையா விளக்கு எரிந்துக் கொண்டிருந்தது.

அம்பத்தைந்து வயது தாமோதரன்! அவளின் கணவர். கம்பீரமான புன்னகையோடு...

பக்கத்தில் கம்பனும், சைந்தவியும், திருமணத்தில் எடுத்துக் கொண்ட போட்டோ! கண்களில் பயமும், மிரட்சியும் மீறிய மென்



மையான அழகு! அழகான மனைவி, அதுவும் காதலித்தவளையே கரம் பற்றிவிட்ட தெம்புடன் கம்பன்!

அத்தனை உயிர்களும் இன்று எங்கே?

சொல்ல முடியாத வேதனையோடு பூக்களை சரம் சரமாய் மாட்டி விட்டாள்.

''நானா... சைந்தவி... நானாம்மா காரணம்? உன் சாவுக்கு நானா காரணம்? கம்பன் அப்படித்தானே சொன்னான்? கடைசியாய் அதை தானே சொல்லிவிட்டுப் போனான்!''

வாய்விட்டு அழுதவள் அப்படியே சரிந்து சுவற்றோடு சாய்த்துக் கொண்டாள்.

அந்த வீட்டின் ஒவ்வொரு அடியும் ஒவ்வொரு சம்பவத்தை ஞாபகப்படுத்தியது. அந்த மூவரின் பாதச்சுவடுகளும் அழுத்தமாய் பதிந்திருந்தது.

ஹால் மூலையில் சுவற்றோடு பதிக்கப்பட்டிருந்த மின் விசிறி. அதற்குள் கீழே கட்டில் போன்ற அமைப்புடன் சேர். கம்பன் அப்பாவுக்காக ஸ்பெஷலாய் ஆர்டர் பண்ணி செய்தது. அதில் அமர்ந்தபடி தான் தாமோதரன் பேப்பர்படிப்பது, காபி குடிப்பது, டி.வி. பார்ப்பது எல்லாமே!

இப்போதும் அங்கு தன் கணவர் அமர்ந்திருப்பது போல் பிரமை ஏற்பட்டது.

எழுந்துப்போய் அதன் அருகில் அமர்ந்தாள். தூசிப்படிந்திருந்தது.

அதன் மீது தலை சாய்த்தாள். கணவர் மடியில் தலை வைத்திருப்பதுப் போல் உணர்வு!

''நானா... நானாங்க உங்களை சாகடித்தேன்? ஆமாம்.. இந்தப்பாவிதான் காரணம், நான் தான் காரணம் நான் தான் காரணம்!''

கதறியழுதாள்.

அன்று...

லவ் லெட்டர் கொடுத்திட்டு என் காதலி சத்தியம் வாங்கிகிட்டாள்...

'கை விட மாட்டேன்னு தானே...?

'இந்த லட்டரை அவள் புருஷனிடம் காட்ட மாட்டேன்னு சத்தியம் வாங்கிகிட்டாள்!

-எம்.அசோக்ராஜா, அரவகுறிச்சிப்பட்டி



ஏழு வருடத்திற்கு முன்பு!

படித்து முடித்த தினசரியை மடித்து வைத்து விரல்களை நெட்டி முறித்தார் தாமோதரன். ''வடிவு...'' ''என்னங்க?''

''ஒரு காபி குடேன்!''

''என்னது காபியா? பதினோரு மணிக்குள்ள நாலு காபி குடிச்சாச்சு. இப்படி குடிச்சா உடம்பு என்னத்துக்காகும்? போதும். இதுக்கு மேல ஒரு சொட்டு காபி கூட குடுக்க மாட்டேன்''

''உன் சமையல்ல கொஞ்சம் நல்லாயிருக்கறதுன்னா, அது காபி மட்டும் தான். மரத்துப் போன நாக்குக்கு கொஞ்சம் காபி காட்டேன்டி!''


''திமிர்... திமிர்! சுகர், பி.பி. அது இதுன்னு உடம்பு முழுக்க குத்தகை எடுத்து உட்கார்ந்திருக்க... பார்த்து, பார்த்து சமைச்சுப் போட்டா... ஏன் பேசமாட்டீங்க. மதியம் உங்களுக்கு வெறும் பாவக்காய் பொரியல்தான்!''

''நீ வைக்கற சாம்பாரை விட அது எவ்வளவோ மேல். ஆமா கம்பன் எங்கே? டயர்டாயிருக்குன்னு ஆபிசுக்கு லீவு போட்டானே... ஆளே காணோம்!''

''எட்டு மணிக்கு வெளியே போனான். உங்களுக்கு சுகர் மாத்திரை காலியாயிடுச்சே... வரும் போது வாங்கிட்டு வான்னு சொல்லி அனுப்பினேன்!''

''ரெஸ்ட் எடுக்கலாமில்லே... வெயில்ல ஏன் அலையணும்?''

''யாராவது பிரண்டை பார்க்கப் போயிருப்பான்!'' வாசலில் ஆட்டோ வந்து நிற்கும் சப்தம் கேட்டது. தாமோதரன் ஈஸி சேரை விட்டு எழுந்து வாசலுக்கு போனார்.




''யாருங்க?'' வடிவும் பின்னாலே வந்தாள். ஆட்டோவிலிருந்து மணக்கோலத்தில் வெளிப்பட்டனர் கம்பனும், சைந்தவியும்.

அதிர்ச்சியில் அப்படியே நின்று விட்டார் தாமோதரன்.

''ஐயோ... ஐயோ... அட படுபாவி என்ன காரியம் பண்ணிட்டு வந்து நிக்கறே... நான் என்ன பண்ணுவேன்... ஐயோ...''

வடிவு நெஞ்சில் அறைந்துக் கொண்டு அழுதாள். அவள் போட்ட கூச்சலில் தெருவே கூடிவிட்டது.

''ஏய் அம்சா இங்கே வந்து பாரேன் எதிர்வீட்டுக் கம்பன்... யாரோ ஒரு பெண்ணை இழுத்துட்டு வந்திருக்கான்''

''பொண்ணைப் பார்த்தா பாந்தமா பாவமா இருக்கு வடிவு ஈரைப் பேனாக்கி, பேனை பெருமாளா ஆக்கறவளாச்சே... நசுக்கிட மாட்டாளா?''

''கம்பன் பிள்ளைப் பூச்சியாச்சே... அம்மா கிழிச்ச கோட்டை தாண்ட மாட்டானே... அவனா இப்படி?''



''இந்த காலத்திலே யாரையும் நம்பக் கூடாது''

''வடிவு சேர்த்துப்பான்னு நினைக்கறியா? கண்டிப்பா நடக்காது''

''கம்பன் நல்லாயிருக்கணும்னு நினைச்சா அவன் தனியாப் போயிடறதுதான் நல்லது''

தெருவாசிகள் அவசர அவசரமாய் தங்கள் கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டதுடன் அடுத்து அங்கு நடக்கப்போகும் கூத்துக்களை பார்க்க ஆர்வமுடன் காத்திருந்தனர்.

''அம்மா...'' கம்பன் அருகில் வந்தான்.

''வராதே... கிட்டே வராதே! பெத்தவங்க உயிரோட இருக்கும் போதே இப்படியொரு காரியத்தைப் பண்ணிட்டு வந்து நிக்கறியே... நல்லாயிருப்பியா?''

''உன் வாயால சபிக்காதம்மா தெருவிலே எல்லாரும் வேடிக்கைப் பார்க்கிறாங்க... உள்ளே போய் பேசிக்கலாம்மா...!''

''எவ்வளவு பேராசைடா உனக்கு? பெத்து வளர்க்க, எவ்வளவு கஷ்டப்பட்டிருப்போம்? தனிப்பட்ட விருப்பங்களையெல்லாம் பொசுக்கிட்டு தான் பெத்தவங்க அத்தனைபேரும் பிள்ளைங்களை வளர்த்து ஆளாக்கறாங்க. ஆனா, உங்களுக்குன்னு ஒரு விருப்பம் உண்டாயிட்டா... அப்ப பெத்தவங்களை எவ்வளோ ஈஸியா தூக்கி எறிஞ்சிடறீங்க? எல்லாத்துக்கும் நாங்கவேணும். கல்யாணத்துக்கு நாங்க வேண்டாம் அப்படித்தானே?''

''அம்மா... புரிஞ்சுக்கம்மா... சைந்தவி ரொம்ப நல்லவ. நான் எவ்வளவோ சொல்லியும் நீங்க தான் எங்க காதலை ஏத்துக்க மறுத்துட்டீங்க...''

''எங்களுக்கு விருப்பமில்லேன்னா தூக்கி எறிய வேண்டியது தானே? சின்ன வயசிலேர்ந்தே உனக்குத் தேவையானதை நாங்களே உணர்ந்து வாங்கித் தந்தோமே.. அதையெல்லாம் சந்தோஷமா ஏத்துக்கிட்டியே... இப்ப மட்டும் என்னாச்சு? இவளை விட அழகா நம்ம ஜாதியிலேயே ஆயிரம் பொண்ணுங்க இருக்கு. அதிலே பொறுக்கி எடுத்து உனக்கு கல்யாணம் பண்ணியிருக்க மாட்டோமா?''

''அப்பா... நீங்களாவது அம்மாவுக்கு எடுத்துச் சொல்லுங்கப்பா, சைந்தவி நல்லவப்பா. உங்க மனசறிந்து நடந்துக்குவா!''

''என்னப்பா சொல்லச் சொல்றே? எங்க மனசு குளிர்ற மாதிரி இப்படி ஒரு காரியத்தைப் பண்ணிட்டு, கவுரவத்தை எல்லாம் கப்பல்ல ஏத்திட்டு நிக்கிற உனக்கு... சே... உன் முகத்தைப் பார்க்கவேப் பிடிக்கலே... போ... போய்டு!''

''போக மாட்டேன்ப்பா. எனக்கு என் அம்மா அப்பா வேணும். சைந்தவியும் வேணும். என்னை நம்பி வந்தவளை, மூணு வருஷமா காதலிச்சவளை ஏமாத்த எப்படிப்பா மனசு வரும்? உங்க மனசு மாறி ஏத்துக்கற வரைக்கும்... நாங்க இங்கேயேதான் நிப்போம்!'' என்றான்

உறுதியாக.

''இப்படியே நின்று சமாதியா ஆனாலும் சரி... என் மனசு மாறாது... நீங்க வாங்க உள்ளே!'' கணவரின் கைப்பற்றி உள்ளே திரும்ப...

''வடிவு என்றழைத்தாள் தெய்வானை.

''என்னக்கா?''

''ஆனது ஆச்சு... விட்டுத்தள்ளு. நீ தவமிருந்து பெத்தப் பிள்ளைய தூக்கி எறியலாமா? சேர்த்துக்க... பாவம் சின்னஞ்சிறுசுங்க... அவசரப்பட்டு இப்படி பண்ணிடுச்சுங்க... அதுக்கு உறவே இல்லைன்னு ஆயிடுமா?''

''அவங்கவங்களுக்கு வந்தா தான் தெரியும் வாந்தியும்? பேதியும் உன் பொண்ணு கூடத்தான் ஒரு கிறிஸ்துவப் பையன் கூட சுத்திக்கிட்டிருக்கா. ஆனது ஆச்சுன்னு ரெண்டு பேருக்கும் கல்யாணம் பண்ணி வையேன் பார்ப்போம்!''

''எவடி இவ... நாம ஏதோ நல்லதுக்குச் சொன்னா நம்ம பல்லையே பிடிச்சுப் பதம் பார்க்கிறாளே! எப்படியோ போ எனக்கென்ன வந்தது? அடி சுகந்தி... எங்கேடி இருக்கே! கம்ப்யூட்டர் கிளாஸ்க்கு போறேன்னு இனி வாசப்படி தாண்டினியோ அவ்வளவு தான். அவ அவ கேவலமா பேசற அளவுக்கு வச்சுட்டியே சனியனே...'' வீட்டுக்குள்ளே சென்று கத்த ஆரம்பித்தாள்.

''கட்டின புருஷனை விட்டுட்டு கள்ளப்புருஷனோட ஓடிவந்து குடும்பம் நடத்திட்டிருக்கிறது எல்லாம் எனக்கு அறிவுரை சொல்ற அளவுக்கு வச்சிட்டியே... பெத்தவயிறு எரியுதுடா. மூத்தப் பிள்ளையாச்சேன்னு எவ்ளோ செல்லமா, வளர்த்தேன்? எங்களை எல்லாம் ஒதுக்கிட்டு இவதான் வேணுமின்னுப் போனவன்... திரும்ப எதுக்கு இங்கே வரணும்? போய்டு... அவளோட சந்தோஷமா எங்கேயாவது போய் குடும்பம் நடத்திக்க. உன் வருமானம் எங்களுக்கு வேண்டாம். என் புருஷனோட பென்ஷன் இருக்கு. ருசிக்கு சாப்பிட முடியாட்டாலும், பசிக்கு சாப்பிட்டுக்குவோம்.

இனி உனக்கும் எங்களுக்கும் எந்த சம்பந்தமுமில்லே'' உள்ளே சென்று படீரென கதவைச் சாத்தினாள்.

''அம்மா... நீங்க ரெண்டு பேரும் மனசு மாறுற வரைக்கும் நாங்க இங்கே தான் நிப்போம்!'' கத்தினான் கம்பன்.

மே மாதம் வெயில் சுளீரென சுட்டது.

பட்டுப் புடவையும், கழுத்து மாலையும் வியர்வையை கூட்ட... சரமாயிப் போனாள் சைந்தவி.

கம்பன் அவள் கையைப் பற்றி அழுத்தினான். அதில் ஆயிரம் நம்பிக்கை எதிரொலித்தாலும், கண்கள் அவசரமாய் கலங்கின.

உள்ளே...

''படுபாவி... இப்படியொரு காரியத்தைப் பண்ணிட்டு வந்து நிப்பான்னு நான் கற்பனை கூட செய்யலே. இவனுக்காக... அருமை



பெருமையா, அந்தஸ்தோட ஒரு பொண்ணைப் பார்த்து வச்சிருக்கேனே! அந்த வீட்ல என்ன பதிலை சொல்வேன்?''

தாமோதரன் கண்ணாடியைக் கழற்றி கண்களைத் துடைத்து மாட்டிக் கொண்டு புலம்பிக் கொண்டிருந்த மனைவியை ஏறிட்டார்.

''அழறீங்களா? நான் உங்களோட வாழ்க்கை நடத்தி இருபத்தியேழு வருஷம் ஆகுது. ஒரு நாளும் நீங்க அழுது நான் பார்த்ததில்லே. உங்களையே அழ வச்சிட்டானே... அவன் நல்லாருப்பானா? நாசமாப் போய்டுவான்!''

''வேணாம் வடிவு! உன் வாயால சபிக்காதே!''

''என்னது?''

''பாசமான தாயோட வார்த்தைகள் பலிக்கும் வடிவு! நமக்கு அவன் வேண்டாம். ஆனா, எங்கேயாச்சும் போய் குழந்தை குட்டின்னு வாழட்டும்...

''அவன் மேலே எவ்ளோ பாசம் வச்சிருக்கிங்க! அவன் உங்க மனசை இப்படி உடைச்சிட்டானே...''

''அழாதே வடிவு... போய் ரெஸ்ட் எடு!''

''எப்படிங்க அழாம இருக்க முடியும்? நாளைக்கு உறவுக்காரங்க முகத்துல எப்படி முழிப்பேன்?'

''......?!''

''இவனைப் பார்த்து நாளைக்கு உதயனும் இதே மாதிரி காரியத்தைப் பண்ணுவானோ?''

''ரொம்ப யோசிக்காதே வடிவு... உனக்கு பிரஷர் இருக்கு. உடம்புக்கு முடியாகப் போய்டப்போகுது.''

''இருந்து தான் என்னத்தை வாழ்த்துக் கட்டிக்கிட்டேன்? இதுங்களை பெத்து வளர்த்து, கஷ்டப்பட்டு ஆளாக்கறதை விட, மலடியாவே இருந்து தொலைச்சிருக்கலாம்.''

''.....?!''

''உதயனுக்கு போன் பண்ணி விஷயத்தைச் சொல்லி வரச் சொல்லலாமா?''

ஹீரோவும், ஹீரோயினும் ஹாஸ்பிட்டலில் சந்தித்துக் கொள்கிறார்கள்...

அப்படின்னா 'படுக்கை' காட்சிகள் ஏராளமாக இருக்கும்னு சொல்லுங்க!

-எம் அசோகராஜா, அரவக்குறிச்சிப்பட்டி



''வேணாம்... பரீட்சை நேரம், பரீட்சை முடிஞ்சதும் லீவுல இங்கேதானே வருவான்?''

பெற்றவர்கள் இருவருக்கும் மனசே ஆறவில்லை.

கம்பன், உதயன் என்று இருபிள்ளைகள். தாமோதரன் அரசாங்க உத்தியோகக்காரர். இருப்பது சொந்த வீடு... என்பதைத் தவிர வேறு சொத்து இல்லை. கம்பனின் என்ஜினியரிங் படிப்பிற்கும், அடுத்தவன் படிப்பிற்கும் வி.ஆர்.எஸ். வாங்கிக் கொண்டு கிடைத்தப்பணத்தை பிள்ளைகளின் படிப்பிற்காக வங்கியில் போட்டு விட்டு, பென்ஷனில் சிக்கனமாய் குடும்பத்தை நடத்தினார்.

படிப்பை முடித்த கம்பனுக்கு உடனேயே வேலை கிடைத்தது. முப்பதாயிரம் சம்பளம். உதயன் கோயம்புத்தூரில், ஹாஸ்டலில் தங்கி படித்துக் கொண்டிருக்கிறான்.

கம்பனுக்கு பெரிய வலைவீசி பெண்ணைத் தேடிக் கொண்டிருந்தார் வடிவு. இதற்கு மேல் மறைப்பது உசிதமில்லை என்று தன் காதல் பற்றிப் போட்டுடைத்தான் கம்பன்.

அதைக் கேட்டு பெரிய ஆர்ப்பாட்டமே நடத்தி தீவிரமாய் எதிர்த்தாள் வடிவு. அதன் பலன் இன்று சைந்தவியுடன் மாலையும், கழுத்துமாய் வந்து நின்றுவிட்டான் கம்பன்.

புலம்பி புலம்பி ஓய்ந்துப் போனாள்.

நேரம் வேகமாய் கடந்தது.

பிற்பகல் மூன்று மணியானது. வெளியில் யாரோ கத்தும் சப்தம் கேட்க... வடிவும், தாமோதரனும் கதவைத் திறந்து வெளியில் வர... அதிர்ந்து தான் போயினர்.

ஒதுங்கி நிழலின்றி சுட்டெரித்த வெயிலில் வாடிப் போயிருந்த சைந்தவி, நா வறண்டு மயங்கி சரிந்திருந்தாள். அக்கம் பக்கத்து மனிதர்கள் தண்ணீர் தெளித்து, புகட்டி மயக்கம் தெளிவித்துக் கொண்டிருக்க... வேதனையுடன் அவள் கன்னத்தைத் தட்டிக் கொண்டிருந்தான் கம்பன்.

''சைந்தவி... சைந்தவி... இங்கேப்பார்... கண்ணைத் திற...''

ஏந்தம்பி... உங்கம்மாவைப் பத்திதான் ஊருக்கேத் தெரியுமே... உனக்குத் தெரியாதா? கல்லிலேக் கூட நார் உரிச்சிடலாம். உங்கம்மா மனசுல இரக்கத்தைப் பார்க்க முடியாது. காதல் கல்யாணம் கொலைக் குத்தமா என்ன? பேசாம.... தனியா வீடெடுத்து சந்தோஷமா வாழப் பாருங்க...'' பக்கத்து வீட்டுக்காரர் அறிவுரைத்தார்.

''இல்லீங்க அம்மாவைப் பத்தி எனக்கு நல்லாத்தெரியும். அவங்க மனசு மாறும். அவங்களை விட்டுட்டு தனியாப் போய் வாழணும்ங்கற எண்ணம் எங்களுக்கு துளியும் இல்லே''

இவர்கள் பேசுவதைக் கேட்ட ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.... தாமோதரனும், வடிவும்.



## 3

''இந்தா...!'' கையில் சொம்பு நிறையத் தண்ணீருடன் கூப்பிட்டாள் வடிவு!

ஆச்சரியத்துடன் திரும்பினான் கம்பன். அவன் மட்டுமா? அங்கு சூழ்ந்திருந்த அக்கம் பக்கத்து மனிதர்களின் முகமும் தான்!

அப்போது தான் கண்களைத் திறந்திருந்த சைந்தவியின் முகத்திலும் ஒரு வித நிம்மதி.

''அ... அ...ம்...மா!''

''முகத்தைக் கழுவித் துடைச்சிட்டு உள்ளேக் கூட்டிட்டு வா!'' குபீரென்று மலர்ந்தான்.

''தாங்க்ஸ்ம்மா... ரொம்ப... ரொம்ப தாங்க்ஸ்!''

''ஏன் வடிவு ஆரத்திக் கரைச்சு எடுத்துட்டு வாயேன்!'' என்றாள் ஞானாம்பிகை.

''ஆமா... அது ஒண்ணுதான் குறைச்சல்... இவளுக்கு எல்லாம் இதுபோதும்...!'' நெனாவட்டாய் வந்தது பதில்!

கம்பன் எதைப்பத்தியும் கவலைப்படவில்லை. அம்மா.... அவர்களை ஏற்றுக் கொண்டு விட்டாளே... அதை விடப் பெரிய ஆசீர்வாதம் வேறென்ன இருக்க முடியும்?

''சைந்தவி... எந்திரி... அம்மா மனசு மாறிட்டாங்க... சீக்கிரம் வா!''

பசியும், களைப்பும் நொடியில் விடைபெற... வேகமாய் எழுந்தாள் சைந்தவி.

அவள் கையைப் பற்றி வீட்டிற்குள் நுழைந்தான் கம்பன்.

இப்படியொரு திருப்பம் வந்ததை எதிர்பார்க்காத தெருவாசிகள் அடச்சே...' என்பதுப் போல் கலைந்துப் போயினர்.

கூப்பிட்டு விட்டார்களே ஒழிய பெற்றவர்கள் முகத்தில் மருந்துக்கும் சிரிப்பில்லை.

மனைவிக்கு கண்களால் ஜாடைக் காட்டிவிட்டு அவர்கள் காலில் விழப்போனார்கள்.

''எதுக்குப்பா சீன் காட்டறே? இதெல்லாம் ஒண்ணும் வேணாம். கல்யாணமே நாங்க இல்லாம தானே நடந்தது?''

''அம்மா... ப்ளீஸ்ம்மா!''

''உன்னே கூப்பிட்டுட்டேங்கறதுக்காக உங்களை ஏத்துக்கிட்டதா அர்த்தமில்லே... ஏங்க நைட்டுக்கு உங்களுக்கு சப்பாத்தி செய்யட்டுமா?'' என்றாள் அவர்களை அசட்டை செய்து.

''வேணாம் வடிவு... கோதுமை, ரவை உப்புமா செஞ்சுடேன். அந்த டி.வி. ரிமோட்டை எடு...'' என்றார் அவர் உலகத்தில் நுழைந்தபடி.

வேதனையில் முகம் சுருங்கிய தன் காதல் மனைவியின் கையை அன்பு மிகுதியோடு அழுத்தினான்.

அவ்ளை தன்னறைக்கு அழைத்துச் சென்றான். பதினாலுக்கு பனி ரெண்டு அடியில் இருந்தது அறை! ஒரு பக்கம் கட்டிலும், எதிரே டேபிளுமாய் சுத்தமாகவே வைத்திருந்தான்.

''இதுதான் என்னோட ரூம்! நல்லாயிருக்கா?''

''ம்...!''

''நேத்துவரை கண்றாவியா இருந்துச்சு... இன்னைக்கு நீ வரப்போறன்றதால... க்ளீன் பண்ணினேன்''

''உங்கம்மா சேர்த்துப்பாங்கன்ற நம்பிக்கை இருந்துச்சா?''

''நிறையவே இருந்துச்சு. எங்கம்மா ரொம்ப வித்தியாசமான வங்க. கத்துவாங்க, திட்டுவாங்க, ஆனா, அதைவிட அதிகமா பாசத் தைக் கொட்டுவாங்க!''

''ஆசீர்வாதம் கூட பண்ணலையே!''

''அவங்க நினைச்சது நடக்காத கோபம் இருக்கத்தானே செய்யும்? உங்க வீட்டுக்குப் போனாலும் இதே மாதிரி காட்சிகள் தானே அரங் கேறியிருக்கும்? பெரியவங்க உடனே இறங்கி வந்துட மாட்டாங்க இல்லையா?''

''வாஸ்வதம் தான் ஆனா உங்களுக்கு இத்தனை பிரச்ச னையும் கஷ்டமும் என்னால தானே?''

''காதல்னா சும்மாவா? அதுவும் என் தேவதை... என் மனசுக்குப் பிடிச்ச காதல் தேவதை கிடைக்கணும்னா அவ்ளோ எளிதான விஷயமா? எதிர்ப்பில்லாத காதல்ல என்ன திரில்லிங் இருக்கு? கிட்டத் தட்ட வீட்டுக்கு வெளியே மவு னமா தர்ணாப் பண்ணிட்டு தான் உள்ளே வந்திருக் கோம்னு நினைக்கிறப்ப... ஹாப்பியா இருக்கு. நாளைக்கு நம்ம புள்ளைங்ககிட்டே நெஞ்சு நிமிர்த்தி,'' உங்கம்மா எனக்குக் கிடைக்கணும்ங்கற துக்காக நான் இவ்வளவுப் போராடினேன் பசங் களான்னு'' சொல்லு வேனே...''

''ச்சீ...!''



எப்படி திடீர்னு நீ செருப் புக் கடை வெச்சே...?

என் வீடு கோவிலுக்கு அருகில் இருக்கு. நான் கல் யாண மண்டபத்தில் வேலை பார்க்கிறேன்!

-எம். அசோக்ராஜா. அரவக்குறிச்சிப்பட்டி.



''என்ன ச்சீ? சும்மாவா... நாலு வருஷ காதலை ஜெயிச்சிருக் கோம். அதுக்காக, சில பிரச்சனைகள், வலிகள் வரத்தான் செய்யும். சமாளிப்போம். அடுத்து உங்க வீட்டை கன்வின்ஸ் பண்ணனும்.''

''எங்க வீட்டையா?''

''என் சைந்தவி அலர்றே?''

சைந்தவி சாதாரண நடுத்தர குடும்பத்தைச் சேர்ந்தவள் தான். கட் டுப்பாடுகள் நிறைந்தக் குடும்பம். அப்பா, அம்மா, இரண்டு அண் ணன், ஒரு அக்கா, ஒரு தங்கை என்று சற்றுப் பெரிய குடும்பம். அப்பா பலராம் தனியார் கம்பெனியில் பணிபுரிந்து ஓய்வுப் பெற்று... எப்படியோ ஒரு பெண்ணை கரையேற்றி அனுப்பி விட்டார். அடுத்து இன்னும் இரண்டுப் பெண்கள் இருக்கிறதே! சும்மாயிராமல் பக லெல்லாம் ஒரு பெயிண்ட் கடையில் கணக்கெழுதி இரவில், ஒரு பங் களாவில் செக்யூரிட்டியாக பணிபுரிந்தார். இரண்டு பிள்ளைகளும் படிப்பை முடித்து விட்டு கடந்த ஒரு வருடமாக தான் வேலைக்குச் சென்று கொண்டிருக்கிறார்கள். சைந்தவியும் படிப்பை முடித்து விட்டு கால் சென்டரில் பேக் ஆபீஸில் வேலைக்குப் போய்க் கொண்டிருந் தாள். தங்கைப் படித்துக் கொண்டிருக்கிறாள். சைந்தவி கல்லூரியில் படிக்கும் போது தான் கம்பனுடன் காதல் தொற்றிக் கொண்டது.

இரண்டுப் பெண்களுக்கும் கல்யாணம் முடித்தப் பிறகே இரு பிள்ளைகளின் திருமணம் என்று உறுதியாய் இருந்தனர் பெற்றவர் கள். வீரலுக்கேத்த வீக்கமாய் அவர்களுக்கு ஏற்றாற் போல் ஒரு வரனை சைந்தவிக்காக ஏற்பாடு பண்ணிக் கொண்டிருந்த போது தான் சைந்தவி கம்பனைப் பற்றி, தைரியம் வரவழைத்து சொல்லி விட் டாள்.

அவ்வளவுதான், வீடு ரெண்டானது அன்றிலிருந்து அலுவலகம் செல்லக்கூடாது என்று வீட்டோடு சிறை வைத்தார்கள். பார்த்து வைத் திருந்த வரனுக்கு அவளை திருமணம் செய்வதற்கான ஏற்பாடுகளை மளமளவென செய்தனர்.

எதிர்வீட்டு சவுந்தர்யா... சைந்தவியின் தோழி, இவர்கள் காதல் அறிந்த புறா, கம்பனிடம் தூதாக சென்றாள். சைந்தவியின் இக்கட் டான நிலைமைப் பற்றி எடுத்துரைத்தாள். கம்பனும் தன் வீட்டில் சைந்தவியைப் பற்றி சொல்ல... வடிவின் வயிற்றில் கொழுந்து விட்டு எரிந்தது தீ.

எவ்வளவோ மன்றாடினான். மறுத்ததில் உறுதியாக இருந்தனர் பெற்றோர்.

பெற்றவர்களுக்கு கடமையாற்றும் மகனாக இருப்பது மட்டு மல்ல... நம்பி காதலித்தவளை கரம் பிடிப்பதும் ஒரு ஆண்மகனின் கடமையல்லவா? அதைத் தான் செய்தான் கம்பன்.

சவுந்தர்யா மூலமாக கம்பனின் திட்டம் சைந்தவியைச் சென்ற டைய... வீடு ஏமாந்து உறங்கிய நேரத்தில் கிளம்பி வந்து விட்டாள். கோவிலில் நண்பர்களின் உதவியோடு தாலிக் கட்டி, ரிஜிஸ்தர் ஆபீ

லை பதிவு செய்துக் கொண்டனர்.

''என்ன சைந்தவி ஷாக் ஆகிட்டே?''

''உங்க வீடு எவ்வளவோப் பரவாயில்லைங்க. எங்க வீட்ல அவ்னோ சுலியா யாரும் சமாதானமாக மாட்டாங்க. என்னைக் கொன்னுப் போட்டாலும் போடுவாங்களேத் தவிர...

''சரி... சரி... அந்தப் பேச்சை விடு... குளிக்கறியா ரொம்ப டயர்டாக தெரியறே?'' என்றான் பேச்சை மாற்ற எண்ணி...''

''ம்... ஆனா''

''என்னடா?...''

''டிரஸ் வேற இல்லையே...!''

''மைகாட் எப்படி மறந்துப் போனேன்? இங்கேயே இரு... ஒன் அவர்ல தேவையான டிரஸ்ஸலோட வந்துடறேன்!''

சொன்னது போல் ஒரு மணி நேரத்தில் வந்து விட்டான்.

கைக் கொள்ளா பார்சலுடன் வந்தான்.

பதினைந்து புடவைகள், அதற்கேற்ற ரெடிமேட் பிளவுஸ், இன்னர், எமிட்டு சுடிதார், பத்து நைட்டி என்று வாங்கி வந்தவனை கண்ணீருடன் பார்த்தாள்.

''ஏய்...ஏன் அழறே?''

''அம்மா... அம்மா...''

''என்னடா அம்மா ஞாபகம் வந்துடுச்சா?''

''இல்லீங்க... அவங்க ஞாபகமே வராது ஏன்னா உங்க ரூபத்துல எனக்கு இன்னொரு அம்மா கிடைச்சிட்டாங்க.''

''தாங்க்ஸ்டா... இது தான் எனக்கு வேணும். போய் குளிச்சிட்டு வா!''

நேரம் கடந்து இரவு ஆஜரானது.

வடிவோ, தாமோதரனோ அவர்களைப் பொருட்படுத்தவே இல்லை. அவனாகப் போய் பேசவும் தயக்கமாக இருந்தது.

அவர்கள் மட்டும் சாப்பிட்டு விட்டு படுத்து விட்டனர்.

''ஏ... என்னங்க?''

''சொல்லு சைந்தவி...''

''தா... தாகமா இருக்குங்க...''

''மடையன் நான்... ஒரு நிமிஷம் இரு!''

பிரிட்ஜிலிருந்து ஒரு பாட்டில் தண்ணீரை எடுத்துக் கொடுத்து விட்டு, ''பத்தே நிமிஷத்துல வந்துடறேன்'' என்று மறுபடி வெளியில் போனான்.

ஹோட்டலில் சாப்பாடு வாங்கிக் கொண்டு, ஒரு கவரில் மல்லிகைப் பூவும் வாங்கி வந்தான்.

நல்ல பசி! ஆவலாய் சாப்பிட்டாள்.

பத்து முழ மல்லிகையை அவள் தலையில் சூடி விட்டான்.

''வருத்தமா சைந்தவி!''



''எதுக்குங்க?''

''பஞ்சணையிலே எந்த அலங்காரமும் இல்லே, பால், பழம், ஸ்வீட் எதுவுமில்லாம நம்மளோட பர்ஸ்ட் நைட் நடக்கப் போகுதே...

''இதெல்லாம் அவசியமா என்ன? பூ மாதிரி என் மனசும், பால் மாதிரி உங்க மனசும் இருக்கப்ப இதை விட தகுதியா வேறென்னங்க வேணும்?''

''சை...ந்...த...வி!'' அவளை இழுத்து இதமாய் அணைத்துக் கொண்டான் சம்பன்.

## 4

அதிகாலையில் எழுந்து குளித்து விட்டாள் சைந்தவி. அந்த வீட்டில் வடிவு அதிகமாய் புழங்கும் இடம் சமையல் அறைதான்!

''சைந்தவி...'' படுக்கையிலிருந்து எழ மனமின்றி, முன்னிரவு கிறக்கத்துடன் அவள் கையைப் பற்றி இழுத்தான்.

கொடிப் போன்ற உடல் வனப்பைக் கொண்ட சைந்தவி அந்த இழுப்பிற்கே பொத்தென அவன் மேலே விழுந்தாள்.

விடுவானா? இறுக்கமாய் தன்னுடன் சேர்த்து அணைத்துக் கொண்டான்.

''ஐயோ... விடுங்க...ப்ச்... எந்திரிங்க... முதல்ல குளிங்க...''

''நாங் குளிக்கணும்ன்னா... ரெண்டு விஷயம் வேணுமே!''

''என்ன அது?''

''உம்மாவும், காபியும்''

''உம்மாவா? வாட்... நீங்க அந்த உம்மாவச் சொல்றீங்களா? நோ...நோ...நோ!'' என்றான் லேட்டாய் புரிந்துக் கொண்டு... அவனிடமிருந்து விலகி.

''என்ன என்னடி நோ? நேத்து நைட்டு நான் கொடுத்த அவ்னோ உம்மாவையும் போதும்னு ஒரு வார்த்தைக் கூட சொல்லாம கிறங்கிப் போய் வாங்கிக் கிட்டே இல்லே இப்ப ஒண்ணே ஒண்ணுக் கேக்கறேன் நோவா? மரியாதையா நான் குடுத்ததை எல்லாம் ஒண்ணு பாக்கியில்லாம திருப்பிக்குடு''

''ஓ... கொஞ்சம் கூட வெக்கமில்லாம அசிங்கமாய் பேசறீங்க?'' முகம் சிவந்து சுவற்றோடு ஒண்டிக் கொண்டாள்.

''இதிலென்ன அசிங்கம்? நான் கொடுத்தப்ப மட்டும் கண்ணெல்லாம் சொக்கிப் போய்...''

''ச்சீ...'' அவன் மார்பில் முகம் புதைத்து அழகாய் வெட்கப்பட்டாள்.

''பாரேன்... என் முகத்தை நிமிர்ந்து தான் பாரேன்!''

''ம்ஹூ ஊம்...!''

முகம் சிணுங்கி, செல்லமாய் உதடு துடித்து, வலிய பூமியை நோக்கிய கண்களின் இமைகள் கறுப்பு குடையாய் விரிந்திருக்க, பளபளத்த சருமத்தின் கவர்ச்சியும், சோப்பின் வாசமும், சரடவல் கொண்டையும், படபடப்பில் உதடின் மேற்பரப்பில் துளிர்த்த ஊசித் துளை வியர்வையுமாய்... கம்பனை கவிப்பாட அழைத்தது. கைகள் பரபரத்தது. மோகத்துடன் இறுக அணைத்தான்.

'''பாருங்க இங்கேப் பாருங்க... இப்ப வேண்டாமே! ஏற்கனவே உங்க வீட்ல நம்மளை... நினைச்சுப் பாருங்க... எட்டு மணியாகியும் பூட்டிய கதவு திறக்கலேன்னா... கோபம் வரும். நமக்கு தான் சங்கடம்!''

''ம்ம்...'' விலக்க மனமின்றி விலக்கினான். ''நிஜம் தான் சைந்தவி. நான் தான் அவசரப்படறேன் ஆனா, நீ சூழ்நிலையை நல்லாப் புரிஞ்சு வச்சிருக்கே. வெரிகுட் மைடியர். சரி... முதல்ல எனக்கு மணக்க மணக்க ஒரு கப் காபி போட்டு எடுத்துட்டு வருவியாம். பெட் காபி பேட் ஹாபிட் தான். பட், பழகிப் போச்சுடா... குயிக்... கோ... கோ...!?''

''நீங்க சொல்லும் போதே கற்பனைப் பண்ணிப் பார்க்கவே ஆசையாயிருக்கு. ஆனா, கிச்சன்ல என்னை அனுமதிப்பாங்களா?''

''ஓ... அந்தப் பிரச்சனை வேற இருக்கில்லே மறந்தேப் போய்ட்டேன். ம்... நீ இரு நான் போய் போட்டு எடுத்துட்டு வர்றேன்!''

''நீங்களா?''

''நானே தான்!'' என்ற படி லுங்கியை மடித்துக் கட்டிக் கொண்டு அறையை திறந்துக் கொண்டு வெளியேச் சென்றதும் இறக்கி விட்டுக் கொண்டான்.

கிச்சனில் மும்முரமாய் உப்புமா கிளறிக் கொண்டிருந்தாள் வடிவு.

★★★

அ... அம்மா!''

அவனைப் பார்த்தும் பார்க்காததுப் போல் வேலையில் ஈடுபட்டாள்.

''அம்மா... காபி வேணும்!''

''எம்ப்பா... நீ சம்பளத்துக்கு வச்ச வேலைக்காரியா நான்? அதிகாரமா வந்து கேக்கறே...''

என்னம்மா இப்படி பேசறே? எப்பவும் நீ தானே போட்டுத் தருவே?

''அது என்னை மதிச்சப் பிள்ளைக்கு. நீ... இஷ்டப்பட்டவ பின்னாடி ஓடிப்போவ. பெத்தவங்களை சல்லிக்காசுக்கு கூட மதிக்காம தூக்கியெறிஞ்சிட்ட கல்யாணம் பண்ணிக்கிட்டு வந்த மகராசனாச்சே.



இப்ப நீ குடும்பஸ்தன் உன் குடும்பத்தலைவிய வந்து போடச் சொல்றது தானே?''

நீ கோபமாவே பேசறேம்மா. எல்லாம் மறந்து எங்களை ஏத்துக்கக் கூடாதா?''

''இதோபார்... இந்த வீட்ல கூட உங்களை சேர்த்துக்கிட்டதே இதுபாட்டன் சொத்து, உனக்கும் பங்கிருக்குன்னு தான், மத்தபடி இங்கே என் குடும்பம் வேற உன் குடும்பம் வேற நான் ஒண்ணும் சமையல் காரியில்லே உங்களுக்கு வடிச்சுக் கொட்ட...?

''அம்மா சைந்தவிக்கு சமைக்கத் தெரியாது அதுக்கான சந்தர்ப்பம் இது வரை அமைஞ்சதில்லை நீ தான் அவளுக்கு''

''ஓ... ரொம்ப பெரிய இடமாக்கும் வீட்ல ஏழெட்டு வேலைக்காரங்களோ?'' ஏகத்தும் கேலி தெறித்தது பேச்சில்.

''பத்து பாத்திரம் தேய்க்க வேலைக்காரிய வச்சாச்சே... அப்புறம் ஏன் மூஞ்சிய இழுத்துகிட்டு இருக்கே?''

''பத்து பாத்திரத்துக்கு மேல தேய்க்க மாட்டேங்குறா... மீதிய நானே தேய்க்க வேண்டியிருக்கு!''

சி.சண்முகம், ஈரோடு.



கருண்டுப் போனான் கம்பன். மேற்கொண்டு பேச விரும்பாமல் பாலை காய்ச்சி, சன்ரைஸ் காபித்தூளை கலந்து இரண்டு டம்ளர்களில் எடுத்துச் சென்றான்.

''கன்றாவியா இல்லை எப்படியெல்லாம் வளர்த்திருப்பேன்? ஒரு சுடுதண்ணிக்கூட வைக்கத் தெரியாதுன்னு அலம்பல் பண்ணுவானே எவ்வளவு தான் உடம்புக்கு முடியலேன்னாலும், அப்படியும் பிள்ளையார்சென்னு வாய்க்கு வக்கனையா ஆக்கிப் போட்டேனே இப்பப் பார்த்தீங்களா? பொண்டாட்டிக்கு காபி போட்டு எடுத்துட்டுப் போறான். நல்லா தலை கீழா அவனை மாத்திட்டா பாதகி ''வாய் ஓயாமல் புருஷனிடம் ஆற்றாமையை கொட்டினாள்.

அவ்வளவு பெரிய விசாலமான வீடல்ல அது! எங்கே நின்றுப் பேசினாலும் காதில் நன்றாகவே விழும். அதுவும் வடிவின் வெண்கலக்குரல் தெரு முனை வரை கேட்கும்.

கணவன் வரும் அரவம் கேட்டதும் கண்களைத் துடைத்துக் கொண்டாள் சைந்தவி.

''ஸாரி சைந்தவி அம்மா ஏதோ கோபத்துல'' என்றான் மன்னிப்

புக் கோரியபடி.

அவன் தந்த காபியை வாங்கிக் கொண்டவள், ''அவங்க கோபம் நியாயம் தானே? என்னாலப் புரிஞ்சுக்க முடியுது. எல்லாம் ஒரு நாள் மாறும்ங்கற நம்பிக்கையும் இருக்கு. வெயிட் பான்றேங்க என்னாரிடப்போகுது இப்ப?''

அயர்ந்துப் போனான் கம்பன்.

''நான் ரெம்ப அதிர்ஷ்டக்காரன் சைந்தவி. இந்த வயசுக்கு இந்தப் பொறுமை... ரொம்ப அபூர்வம். என் மனசு பாரமெல்லாம் காணாமல் போய்டுச்சு.''

''காபி ரெம்ப சூப்பர். சீக்கிரமே சமைக்கக் கத்துக்கறேங்க!''

''கொஞ்ச நாள் போகட்டும். போட்டிருக்கிற லீவை ஜாலியா என்ஜாய் பண்ணலாம். அதுக்கப்புறம் கத்துக்க...''

ஒரு வாரம் ஆபீஸிற்கு லீவுப் போட்டிருந்தான் கம்பன்.

ஒவ்வொரு நாளும் சினிமா, ஜநாக்ஸ், கோவில் என அழைத்துச் சென்றவன் ஏற்காடுச் சென்று இரண்டு நாள் தங்கினான். தொடர்ந்து ஹோட்டல் சாப்பாடாய் சாப்பிட்டதில் உடம்பிற்கு முடியாமல் படுத்துவிட்டான். தொடர்ந்து வாந்திவேறு. அதற்கு மேல் பொறுமையாய் இருக்க முடியவில்லை தாயால்.

''என்ன கவுரவம் கெட்டுடப் போவுது? பெத்தவதானே... மறுபடி வந்து கேட்டா சாப்பாடுத் தரமாட்டேனா? ரெண்டு வேளை ஹோட்டல் சாப்பாடு சாப்பிட்டாலே ஆகாதே! ரொம்ப தான் மாறிட்டே இந்தா சாப்பிடு... அவனுக்கென தனித்தனி கிண்ணங்களில் சாப்பாடு, சாம்பார், ரசம், மோர் கூட்டு என தந்தாள். அது ரெண்டு பேருக்கு ரொம்ப தாராளம்.

மனநிறைவுடன், கண்கள் ததும்ப வாங்கிக் கொண்டான் கம்பன்.

''அம்மா ரொம்ப நல்லவங்க சைந்தவி. பத்தே மாசத்தில் ஒரு குழந்தையைப் பெத்துக் குடுத்துடு. அவங்க தெருவில ஒரு குழந்தைய விடமாட்டாங்க. அப்படிபட்டவங்க சொந்தமா பேரப்பிள்ளை கிடைச்சா உன் கால் தரையில பட விடமாட்டாங்க!''

''எனக்கும் மாமியாரோட இணக்கமா, சந்தோஷமா பேசிப் பழகணும்னு ஆசையாயிருக்குங்க. கடவுள் சீக்கிரமே நமக்கொரு குழந்தைய தரட்டும்'' சிலிர்ப்புடன் சொன்னாள்.

ஒருவாரம் லீவு பத்துநாள் வரை நீண்டுவிட அன்று அலுவலகம் கிளம்பி விட்டான்.

''சைந்தவி...''

''என்னங்க...''

''உன் கூச்ச சுபாவத்தை எல்லாம் மூட்டைக் கட்டி வச்சிடு. இத்தனை நாளும் நான் உன் கூடவே இருந்தேன். இனி பொழைப்பை பார்க்கணும். சில நேரங்கள்ல ஓவர்டைமும் செய்ய வேண்டி வரும். அட்ஜஸ்ட் பண்ணிக்கணும். நீயாகப் போய் அப்பாவிடமும், அம்மாவிடமும் பேசணும், புரியுதா?''



''சரிங்க!''

அவன் சென்ற பிறகு சைந்தவியின் பாடு திண்டாட்டமானது. வடிவு தன் திறமையை காட்டத் தொடங்கினாள்.

பேப்பர் படித்துக் கொண்டிருந்த தாமோதரனின் அருகில் தயங்கித் தயங்கி சென்றாள் சைந்தவி

''மா... மாமா!''

நிமிர்ந்து அவளை விநோதமாய் பார்த்தார்.

''உ... உங்களுக்கு ஏதாவது தேவைன்னா... என்... என்கிட்டே சொல்லுங்க மாமா... நான் செய்யறேன்.''

''நீ என்னை மாமான்னு சொல்லாம இருந்தா ரொம்ப சந்தோஷம். அதை விட என்கிட்ட பேசாம இருந்தினா ரொம்ப ரொம்ப சந்தோஷம்!''

மரவட்டையாய் சுருண்டுப் போனாள்.

வடிவு காய்கறிகளை நறுக்கிக் கொண்டிருந்தாள்.

''குடுங்க அத்தை! நான் நறுக்கித் தர்றேன்...''

''நல்லாக் கெட்டுடப் போறேன் போ உன் வேலையப் பார்த்துக்கிட்டு உன்னால என் பிள்ளைய தான் மயக்க முடியும். எங்களையல்ல... போ... போ!''

மறுபடி சுருண்டுப் போனாள்.

நிமிடங்கள் ஊர்ந்தன.

பிற்பகல் மூன்று மணி! பசித்தது.

மாமனாரும், மாமியாரும் பகல் உறக்கத்தில் இருந்தனர்.

கிச்சனில் நுழைந்து தட்டை எடுத்தாள். சமைத்த பாத்திரங்களை திறந்தாள்.

துடைத்து வைக்கப்பட்டிருந்தது. அவளுக்கென்று ஒரு பருக்கைக் கூட இல்லை.




சொல்லி வைத்தாற்போல கம்பனுக்கும் ஏகப்பட்ட வேலை. இடையில் பெங்களூர், ஹைதராபாத் என்று ஓடினான். பின்னிரவில் வீடு திரும்பினால், காலை 10 மணி வரை தூங்கினான். மறுபடி 11 மணிக்கு ஓடுவான். அவன் இருக்கும் நேரங்களில் மட்டும் அவனோடு டிபன் சாப்பிட்டாள்.

மகனுக்காக சமைத்துப் போட்ட வடிவு, மருமகளுக்கு தரமனம் வரவில்லை. தொடர்ந்து பட்டினிக் கிடந்தாள் சைந்தவி.

''சாப்பிட்டியா சைந்தவி?'' என்று கேட்பான் கம்பன்.

''ம்... சாப்பிட்டேங்க'' என்பாள் பொய்யாய்.

''அம்மா நல்லாப் பேசுறாங்களா?''

ரொம்ப இல்லே ஆனா, முன்னைக்கி இப்ப எவ்வளவோப் பர

வாயில்லே! நீங்க எப்ப சீப்ரியாவீங்க ரெஸ்ட்டே இல்லாம உழைக்க நீங்களே

''நல்லப் பேர் வாங்கனுமே..., என் திறமையைக்காட்ட இது தானே சந்தர்ப்பம். என் புரமோஷனுக்கு இந்த உழைப்புதான் அடித்தளம். இன்னும் மூணே நாள்... அட்ஜஸ்ட் பண்ணிக்கடா!''

''சரிங்க'' என்றாள், பசித்த வயிற்றைத் தடவியபடி.

★★★

''கேரட் கால் கிலோ போடு. பீன்ஸ், கோஸ்... அதிலேயும் கால் கிலோ போடு! காய்கறிகளை பொறுக்கிப் போட்டுக் கொண்டிருந்தாள், வடிவு.

''என்ன வடிவு ஒரு காயையும் விடலேப் போலிருக்கே? மருமகளுக்கு பார்த்து பார்த்து சமைச்சுப் போடறே போலிருக்கு'' என்று கூடையுடன் பக்கத்தில் வந்து நின்றாள், சொர்ணம்.

தெருவில் பத்து வீடு தள்ளி இருப்பவள்.

''என்... எனக்கென்ன கொழுப்பா அவளுக்கு ஆக்கிக் கொட்டணும்னு. என் புருஷனுக்கு பிடிக்குமேன்னு வாங்கறேன்.

''ஓ... அவ தனியா சமைக்கிறாளா?''

''நீ வேற.. ஸ்டவ்வைக் கூட பத்த வைக்கத் தெரியாது...''

'' அப்ப எப்படி சாப்பிடறா?''

''பட்டினிதான்! இந்த வடிவோட வயித்தெரிச்சலைக் கொட்டிக்கிட்டு நல்லாயிருந்துட முடியுமா? எம்புள்ளை சுளையா முப்பதாயிரம் சம்பாதிக்கிறான். எப்பேர்பட்ட இடத்துப் பொண்ணை பார்த்து வச்சிருந்தேன் தெரியுமா? அத்தனையும் கனவாப் போச்சு சொர்ணம். நீயே சொல்லு... உன் புள்ளை ஏழாயிரமோ, எட்டாயிரமோ சம்பாதிக்கிறேன். அதுக்கே வசதியான இடத்துல பொண்ணு பார்த்து கட்டி வைக்கலே? அம்பது பவுன் நகை, பைக், கைல ரெண்டு லட்சம், சீர் செனத்தின்னு கொண்டு வந்தாளே உன் மருமக.. நான் ஆசைப்பட்டதிலே மட்டும் என்ன தப்பு?''

''''வேலைக்காரியை ரெண்டு மாதத்துக்கு ஒரு தடவை மாத்திவிடுகிறாயே... ஒருத்தரையே வைத்துக் கொள்ள வேண்டியது தானே?''

''அதை என் கணவர் செய்து விடுவாரோ என்ற பயம் தான்!''

- ஆர்.பிரகாசம். காவேரிப்பாக்கம்.



''நா... அதுக்கு சொல்லலே வடிவு! உன் புள்ளை ஆசைப்பட்டு கட்டிக்கிட்டப் பொண்ணு. இத்தனை நாள் ஆகிப்போச்சு, நாம கோபமாயிருந்து என்ன லாபம்?''

''தைரியமா வந்தா இல்லே... அவளுக்கு நான் யாருன்னுக் காட்ட வேணாமா? என்னைக் கண்டாலே அலறணும்.

நாதியத்த நாய். எவனையாவது இழுத்துக் கிட்டு ஓடட்டும்னு விட்டுட்டாங்க போல, பாரு... யாராவது அவளைத் திட்டறதுக்குன்னு கூட ஒரு காக்கா, கழுகு வந்து எட்டிப்பார்க்கலையே... என்ன கேடு கெட்ட குடும்பமோ? அவளைப் பார்க்க... பார்க்க ஆத்திரமா வருது.

செலவே இல்லாம கல்யாணம் பண்ணிக்கிட்டு என் புள்ளை கிட்ட கொஞ்சி குலாவிட்டு இருக்கா. அதான் கொஞ்சறதுக்குக் கூட தெம்பு இருக்கக் கூடாதுன்னு பட்டினிப்போட்டேன். இந்த வடிவைப் பத்தி அவளுக்குத் தெரியவைக்கணுமே.. இது கொஞ்சம்.. இனி தான் அலறப் போறா...!'' படபடத்த வடிவு சற்று நிதானித்தாள்.

'கொஞ்சம் அதிகமாய் உணர்ச்சிவசப்பட்டு பேசி விட்டேனோ? தவறாய் நினைத்திருப்பாளோ? அட... என்ன இப்ப... மாமியார்னா ஒரு கெத்து வேணாமா? அப்பதான் இவளுகளுக்கும் என் மேல ஒரு பயம் இருக்கும்!'

''நான் வர்றேன் வடிவு! என்று அவளிடமிருந்து விடைபெற்ற சொர்ணம் யம்மாடி... பொம்பளையா இவ... பாவம் அந்தப் பொண்ணு இதுகிட்ட என்னப் பாடுபடப் போகுதோ?' என்று பொருமினாள்.

வடிவு வாயாடி என்றால்... சொர்ணம் டி.வி. என்று சொல்லலாம். நான் சொல்றது ரகசியம் உன் மனசோட வச்சுக்கோ... என்றால் அன்றே அந்த ரகசியம் எல்லாருக்கும் தெரிந்திருக்கும். அப்படிப்பட்ட திறமைசாலி.

★★★

ஏற்கனவே கொடிப் போன்ற உடல்வாகு சைந்தவிக்கு. அகன்ற விழிகளும், கூர்மையான நாசியும், குவிந்த உதடுகளுமாய் வசீகரமாய் இருப்பாள். ஒரு நாளைக்கு ஒரு வேளை தான் உணவென்றால்... எத்தனை நாளைக்குத் தான் தாங்க முடியும்? கண்கள் உள்ளடங்கி, கன்னங்கள் ஒட்டிப்போய் உடல் வாடிப்போனது.

அன்று நடுஹாலில் மயங்கி சரிந்து விழுந்தாள்.

''டி.வி. பார்த்துக் கொண்டிருந்த தாமோதரன் தான் முதலில் பார்த்தார்''

''வடிவு...''

''என்னங்க?'' என்றாள், கிச்சனிலிருந்து.

இந்தப் பொண்ணை வந்துப் பாரேன்.!''

வந்தவள்.. அலறி விட்டாள்.

''ஐயோ.. என்ன இது? கடவுளே... ஏங்க சீக்கிரம் போய் தண்ணீ எடுத்துட்டு வாங்களேன்!''

தண்ணீர் தெளித்துப் புகட்டினாள்.

சொம்பிலிருந்த மொத்தத் தண்ணீரும் ஆவலாய் உள் வாங்கிக் கொண்டதிலிருந்தே புரிந்தது... அது பசிமயக்கம் தான் என்று!

குற்ற உணர்வும், பரிதாபமும் போட்டிப் போட, அவளையேப் பார்த்தாள், வடிவு.

மயக்கம் தெளிந்ததும்... மாமியாரை வெகு அருகில் பார்த்ததும் எழ முயன்றுத் தோற்றாள்.

''என்னடிப் பொண்ணு நீ?''

''அ... அ..த்... தை!...

''படிச்சிட்டா... பெரிய இவளா?''...

''......''

''என் வயித்தெரிச்சல் அப்படித்தான் கத்துவேன், திட்டுவேன். அப்படியே ஒதுங்கி நின்னா... எல்லாம் சரியாயிடுமா?''

''.....''

''பத்து பதினஞ்சு நாளா ஒருத்திப் பட்டினியாக் கிடப்பாளா? கவுரவம் பார்க்கிறயா?''

''இ... இல்லே...''

''நீயா வந்து பசிக்குது அத்தைன்னு கேட்டா குடுக்காம விட்டுருவேனா? நானா இறங்கி வரணும்னு நினைச்சியா? அவ்ளோ திமிரா உனக்கு?''

''இ... இல்லே அத்தை... சத்தியமா இல்லே. பயமாயிருந்துச்சு... அதான்...'' என்றாள், கண்கலங்க?''

'ஏன்... உன் புருஷன்கிட்ட சொன்னா சாப்பாடு வாங்கி வரமாட்டானா? இப்படியா பட்டினி கிடப்பே?''

''நான் இங்கே சாப்பிட்டதா சொன்னேன்... அதான்.''

வடிவு திகைப்புடன் பார்த்தாள். தொண்டையை எதுவோ கவ்விப் பிடித்தது.

''இரு.. வர்றேன்!''

ஐந்தே நிமிடத்தில் பூஸ்ட் கலக்கி, பதமாய் ஆற்றி புகட்டினாள்.

''குடி...

....?!''

''குடின்னு சொல்றேனே... இது பசி அடங்காதுதான். அரைமணி நேரம் பொறுத்துக்கோ... குழம்பும், பொரியலும் முடிச்சிடுவேன்... சாப்பிட்டுக்கலாம்... என்ன?''

புகட்டிய மாமியாரின் கரத்தை தன் இரு கரங்களால் சேர்த்துப்



பிடித்து குடித்தவள் கண்களில் கரகரவென வழிந்தது.

''ஏன் அழறே?''

''ச... சந்தோஷமாயிருக்கு அத்தை...!''

''சரி... சரி... போய் ரெஸ்ட் எடு. நான் சமையலை முடிச்சிட்டு வந்திடறேன்.''

''நா... நான் ஏதாவது ஹெல்ப் பண்ணட்டுமா?'' இப்போதைக்கு மயக்கம் போடாம இருந்தாலே பெரிய உதவிதான். கொஞ்ச நேரத்துல குலையே நடுங்க வச்சிட்டியே... யம்மா...! ரெண்டு, மூன்று நாள் நல்லா சாப்பிட்டு ரெஸ்ட் எடு... உதவி என்ன.. சமைக்கவே சொல்லித் தர்றேன்...''

''சரிங்க அத்தை!'' என்றவள் நிம்மதியாய் மூச்சு விட்டாள்.

வேகமாய் சமையல் செய்து முடித்தவள், கூடவே இரண்டு முட்டையை உடைத்து வெங்காயம், மிளகாய் சேர்த்து ஆம்லெட் போட்டு சைந்தவிக்கு தாராளமாய் பரிமாறினாள்.

மனநிறைவுடன் சாப்பிட்டவள், அசதியுடன் உறங்கி விட்டாள்.

''அம்மாடி வடிவு... நான் இங்கே ஒருத்தன் இருக்கேன். என் பேர் தாமோதரன், உன் புருஷன்னு எல்லாரும் சொல்லிக்கிறாங்க பசிக்குது தாயே... என் வயித்துக்கும் ஏதாவது கொஞ்சம்....

''என்ன கிண்டலா?''

''பின்னே... நடக்கறதையெல்லாம் பார்த்துக்கிட்டு தானே இருக்கேன்? நேத்துவரை ஆகாத மருமகளுக்கு இன்னைக்கு என்ன உபச்சாரம்!''

''பாவம்ங்க... பசிமயக்கத்தில் விழுந்ததை பார்த்தப்புறமும் நான் கல்லுமாதிரி இருக்க முடியுமா? அது மட்டுமில்லே... நான் சாப்பாடு போடததைப் பத்தி கம்பன் கிட்ட ஒரு வார்த்தை கூட சொல்லலே. நல்லப் பொண்ணாத் தெரியறா...''

''.....''

''மருமகள்னு ஆயிட்டா. எத்தனை நாளைக்கு ஒதுக்கி வைக்க முடியும்? இதுவே வேற ஒருத்தியா இருந்தா... புருஷன்கிட்டே ஒண்ணுக்கு ரெண்டா சொல்லி தனிக் குடித்தனம் போயிருப்பா.

இவ அப்படி நடந்துக்கலையே... நாளைக்கு இந்த வீட்டு வாரிசை சுமக்கப் போற வளாச்சே...!''

ஐயோ... ஜால்ரா சத்தம் தாங்கலையே... காது செவிடாகுதே...!'' தாமோரதான் வலிதாங்காமல் அலறுவது போல் நடித்தார்.

''என்னங்க நீங்க?'' வெகு காலத்திற்குப் பிறகு வெட்கப்பட்டாள், வடிவு.

## 6

''அத்தை... குழம்பு கொதிக்குது... இப்ப என்னப் பண்ணட்டும்?'' கரண்டியுடன் கிச்சனிலிருந்து தலையை நீட்டிக் கேட்டாள், சைந்தவி.

ஹாலில் கணவருடன் சேர்ந்து டி.வி. பார்த்துக்

கொண்டிருந்த வடிவு, அங்கிருந்தே குரல் கொடுத்தாள்.

''தேங்காயும், கசகசாவும் சேர்த்து அரைச்சு வச்சிருந்தியே... அதை கொஞ்சம் தண்ணீர் விட்டுக் கரைச்சு குழம்புல ஊத்திடு!''

''அப்புறம்?''

''அது நல்லாக் கொதிச்சப் பிறகு, சோம்பு, பட்டை, லவங்கம் போட்டு தாழிச்சுக் கொட்டிடு அவ்வளவு தான்!''

''சரிங்கத்தை!''

சற்று நேரத்தில் தலைக்கறி குழம்பு கமகமத்தது. கம்பனுக்கும், உதயனுக்கும் தலைக்கறி என்றால் அவ்வளவு இஷ்டம்.

எல்லாம் முடிந்து வீட்டிற்கு வந்திருந்தான், உதயன். அண்ணனின் கல்யாண விஷயமெல்லாம் அம்மா மூலம் போனில் அறிந்திருந்தான்.

அப்போதே அவன் சொன்ன வார்த்தை இது தான். அண்ணன் ரொம்ப நல்லவரும்மா. உன் எதிர்ப்பையும் மீறி கல்யாணம் பண்ணிக்கிட்டார்னா, கண்டிப்பா... அண்ணியும் நல்லவங்களாத்தான் இருப்பாங்க. முரண்டு பிடிக்காம ஒத்துக்கம்மா...''

''என்னது அண்ணியா? அடி செருப்பால! எப்படாப் பார்த்தே அவளை? நல்லவளாமே... உன் கிட்டே சொன்னேன் பாரு... வை... போனை!'' என்றுக் கத்தினாள்.

இன்று வீட்டின் சூழ்நிலை மகிழ்வைத் தந்தது, உதயனுக்கு.

அடக்கமாய், அமைதியாய், பாந்தமாய், சிறு புன்னகையோடு வளையவந்த அண்ணியைப் பார்த்ததுமே பிடித்து விட்டது.

''அண்ணா... குட் செலக்ஷன்!''

''தாங்க்ஸ்டா...''

''அண்ணி சமையல்ல எப்படிண்ணா? ஹாஸ்டல் சாப்பாடு சாப்பிட்டு நாக்கு மரத்துப் போய் வந்திருக்கேன்!''

''அந்த விஷயத்திலே ஏமாந்துப் போய்ட்டேன்டா உதயா!''

பெருமூச்சுடன் விசனமாய் சொன்னான்.

''என்னண்ணா ஆச்சு?''

''சாதம் வடிக்க சொன்னா... நொய் கஞ்சி மாதிரி ஆக்கித்தர்றா. ஆஃப்ட்ரால் ஒரு உப்புமா... அந்த


''இருந்தாலும்... கொஞ்சம் வெட்கமா இருக்கு சார்!''

''எதுக்குமா?''

''நம்ம படம், இன்னு சென்சாருக்குப் போகுது...!''

- சி.சண்முகம், ஈரோடு.





கேடுகெட்ட உப்புமாவை ரவைபாயசமா செஞ்சுத்தராடா-நான் என் னன்னு சொல்லுவேன்... எங்கேப் போய் சொல்லுவேன்?''

''ஏன் அநியாயமாப் பேசறீங்க? நேத்துக் கூட இட்லி செஞ்சுத் தாலே?'' அதற்கு மேல் தாங்கமாட்டாமல் வீராவேசமாய் கணவன் முன் வந்து நின்றாள். சைந்தவி

''இட்லி! அதை நீ எங்கேம்மா செஞ்சே? மாவை ஊத்திவச்சா... அதுபாட்டுக்கு வெந்துடப்போகுது... இது என்ன கம்பசூத்திரமா? அதுக்கொரு சட்னிய அரைக்க வச்சாடா... என்னமோ எள்ளுச் சட்னி யாம். அம்மாகிட்டே ரெஸிப்பி கேட்டு அரைச்சா... பாவக்காய் போட்டு அரைச்ச மாதிரி அவ்ளோ கசப்பு... உவ்வே!

''அது...அது வறுக்கும் போது தீய்ஞ்சு போய்டுச்சு. அவ்வளவு தானே... அதை ஏன் பெரிசா..?''

''அண்ணி... அம்மாக்கிட்டே ரெஸிப்பீ கேட்டு செய்யறாங்களா. அம்மாவே சமையல்ல ரொம்ப வீக்காச்சே?''

''என்னடா பண்றது? நம்ம வீட்டு ஆம்பளைங்க சொத்தையை கெட்டு சாப்பிடணும்னு விதி. யாரால மாத்த முடியும் சொல்லு?'' சிவாஜி ரேஞ்சுக்கு குரலை மாற்றி ஃபீலிங் காட்டினான் கம்பன்.

''இவ்ளோ ஆணப்பின்னால... நான் விடறதாயில்லே இன்னைக்கு மதியம் முழுக்கவே என் சமையல். அதுவும் நான் வெஜ். சாப்பிட்டுப் பார்த்துட்டு அப்புறமா பேசுங்க... அது தான் ஜென்டில்மேனுக்கு அழகு! மூச்சு வாங்கப் பேசியவள் செயலிலும் இறங்கி விட்டாள்.

கணவனோடு வெளியில் சென்றிருந்த பொழுது... சமைக்க கற்றுக் கொள்ள வாங்கியிருந்த செட்டிநாடு சமையல் புத்தகத்தை எடுத்து கண்களில் ஒற்றிக் கொண்டாள்.

மாமியாரிடம் கேட்டு குழம்பு வைத்த பின், கோழிக்கறியை சிக்கன் 65 போட்டு, கொஞ்சம் கிரேவியும் செய்தாள்.

படித்துப், படித்து செய்ததில் நேரமும் அதிகமாகி விட்டது. ஒரு வழியாய் சமைத்து முடித்தாள்.

ஆண்கள் மொத்தமும் சாப்பிட அமர்ந்தனர்.

வாயில் வைத்தவர்கள் முகத்தில் ஈயாட வில்லை. தலைகுனிந்து சாப்பிட்டனர்.

சைந்தவிக்கு ஒன்றுமே புரியவில்லை. அவர்களின் மவுனம் குழப்பத்தைத் தந்தது. ஆனால்...? வைத்ததை எல்லாம் மிச்சம் வைக்காமல் சாப்பிட்டு முடித்தனர்.

வடிவும் சிரிப்புடன் பரிமாறினாள்.

கையைக் கழுவும்போது... தாளமுடியாமல் கேட்டே விட்டாள்.

''இப்படி அமைதியா இருந்தா எப்படி? சமையல் பிடிச்சிருக்கா... பிடிக்கலையா?''

''தாயே... எங்க தோல்வியை ஒப்புக்கறோம்!''

மூவரும் தலைமேல் கைகுவித்தனர்.

''அப்படின்னா...



''சமையல் சூப்பர்!''

''நிஜமாகவா?''

''ஆமாம்மா... உன் மாமியாருக்கும் கொஞ்சம் சொல்லிக் கொடு...!

''என்னது... எனக்கேவா! பத்துமுறை காபிகேட்பீங்கயில்லே... சுடுதண்ணி வச்சித்தரேன்.... வாங்க!''

''நான் சும்மா விளையாட்டுக்குச் சொன்னேன் வடிவு...'' பயந்து அவளிடம் ஓடினார்.

உதயா கையைத் துடைத்தபடி நகர, மெல்ல அவள் இடுப்பில் கைபோட்டு தன் அறைக்கு அழைத்துச் சென்ற கம்பன், அவள் நிணறத்திணற உதட்டில் முத்தமிட்டான்.

''என்னங்க இது? பட்டப்பகல்ல எல்லோரும் இருக்கும் போதே இழுத்துக்கிட்டு வந்த இப்படி...''வெட்கமும், செல்லக் கோபமுமாய் கேட்டாள் சைந்தவி.

''ரொம்ப சந்தோஷமாயிருக்கிறேன்டா செல்லம்! எங்கம்மா மாறுவாங்கன்னுத் தெரியும், ஆனா, இவ்வளவு சீக்கிரம் மனசு மாறி உன்னை ஏத்துப்பாங்கன்னு சத்தியமா நினைக்கலே. அப்புறம், உன்னோட சமையல் எவ்வளவு அருமையா இருந்தது தெரியுமா? எல்லோருக்கும் உன் சமையல் ரொம்ப பிடிச்சப் போச்சு. வீடு கலகலன்னு எவ்வளவு சந்தோஷமா இருக்கு எல்லாம் நீ வந்தப் பிறகு தான்!''

''உங்க பையன் இப்படி பாட்டில் பாட்டிலா குடிக்கிறாளே நீங்க கேட்க கூடாதா?''

''நான் எதுக்கு கேட்கணும்? எனக்கு குடிப்பழக்கமே இல்லையே!''

- எம். அசோக்ராஜா, அரவக்குறிச்சிப்பட்டி



''நான் என்னங்கப் பண்ணிட்டேன்? அத்தைக்கு தான் தாங்க்ஸ் சொல்லணும். அவங்க மட்டும் ஏத்துக்கலேன்னா இந்த சந்தோஷம் எங்கிருந்து வந்திருக்கும்?''

''அது ஒரு சின்னக்காரணமா வேனா இருக்கலாம். பட், உன்னோட அனுசரணையான குணம்தான் எல்லாத்துக்கும் காரணம்னு சொல்வேன். ஆபீஸ்ல எனக்குன்னு தேனாம்பேட்டையில் டபுள் பெட்ரூம் ஃப்ளாட் ஒதுக்கியிருக்காங்க அம்மா கண்டிப்பா இந்த வீட்டை விட்டு வரமாட்டாங்க அப்பாவும் தான்!

அவங்களை விட்டுட்டுப் போக மனசுவரலே. சரி, நீ தனி

யாப் போகறதுக்கு சந்தோஷப்படுவியேன்னு உன்கிட்டே சொன்னேன். ஆனா, நீ என்ன சொன்னே? 'இந்த வீடு அவ்வளவு வசதியில்லே தான். ஆனா, இதிலே உங்கம்மா அப்பாவோட நினைவுகளும், ஆசைகளும் ஏராளமாயிருக்கு, எப்பவும் எதிரெதிரே உறவுகளைப் பார்த்துக்கற வசதி இந்த மாதிரி வசதி குறைவான வீட்டுல தாங்க இருக்கும்.

'உங்களுக்கு ஃப்ளாட் அலாட் பண்ணியிருக்கிற விஷயம் மாமாவுக்கும், அத்தைக்கும் தெரியவேணாம். நாம அவங்களை விட்டு எந்த நேரத்திலேயும் போய்டுவோம்ங்கற எண்ணத்தை உண்டாக்கிட்டா அவங்க நிம்மதிப் போய்டும், கம்பீரம் போய்டும்.

உங்கம்மா ஒரு வித்தியாசமான கேரக்டர், ஐ லைக்ஹர், இந்தப் பேச்சை இத்தோட விட்டுங்கன்னு சொன்னே. இந்த மாதிரி எத்தனைப் பொண்ணுங்க சொல்லுவாங்கன்னு நினைக்கறே... சைந்தவி?''

''இதிலே பாராட்ட ஒண்ணுமே இல்லே. இது என் குடும்பம்... அவ்வளவுதான். பசிக்குது... அத்தையும் நானும் சாப்பிடணும்... போகலாமா?''

மறுபடி கன்னத்தை ஈரப்படுத்தி ''போ'' என்றான்.

லீவில் ஒரு மாத சம்மர் கோர்ஸில் சேர்ந்திருந்த உதயன் மறுபடி ஊருக்குப் போய்விட்டான்.

குடும்பத்தில் சந்தோஷம் குதிபோட்டது. சைந்தவி எல்லா வேலையும் இழுத்துப் போட்டுச் செய்தாள். சமையல் இப்போது அத்துப்படி. புத்தக்மோ, அத்தையோ தேவைப்படவில்லை.

வடிவுக்கு உள்ளூற மருமகள் மீது நிறையப்பாசம் இருந்தாலும், வீம்புக்காக எதையாவது சொல்லித் திட்டிக் கொண்டிருப்பாள். அவளை நன்குப் புரிந்துக் கொண்ட சைந்தவி... அமைதிக் காப்பாள்..

மீனும், கறியும் வாங்கும் போது ''என்ன வடிவு... மருமளுகக்காக பார்த்து, பார்த்து ஆக்கிப் போடறப் போயிருக்கு... என்று யாராவது கேட்டு விட்டால் போதும்.

''ஏன், எனக்கென்ன தலையெழுத்து, கண்ட கழுதைக்கெல்லாம் ஆக்கிப்போடணும்னு. இவ வர்றதுக்கு முன்வாடி இதையெல்லாம் நாங்க சாப்பிட்டதே இல்லையா என்ன? என் புள்ளைக்கும் சரி, புருஷனுக்கும் சரி, தவிச்சி வாசனை இல்லேன்னா சாப்பாடே இறங்காது. எனக்கும் வயித்துக்கு வஞ்சனை பண்ற பழக்கமில்லே''.

என்பாள் அதிரடியாக ஆனால், கூடையில் சைந்தவியின் உடம்பை தேற்றுவதற்கென்று கல்லீரலோ, மண்ணீரலோ வாங்கி வைத்திருப்பாள்..

பூக்கடையில்...

''பூ... எவ்வளவு?''

'' வா... வடிவக்கா... முழம் அஞ்சு ரூபாய்...''



இதுவேணாம்... கூறுகட்டி வச்சிருக்கியே... மல்லிப்பூ... அதைக் கேட்டேன்''...

''மூணு கூறு பத்துரூபா.... யாருக்கு மருமகளுக்கா?

அந்த சனியனுக்கு நான் ஏன் வாங்கித்தரணும்? அவ புருஷன் இல்லே? சாமிக்கு கட்டிப் போடறதுக்கு தான்... எடுத்துப்போடு!''

''சாமிக்குன்னா சாமந்தி எடுத்துக்கக்கா. மாலை மாதிரி கட்டிவிருக்கேன் பார். மரிக்கொழுந்து வச்சி கதம்பமும் கட்டியிருக்கேன்... தரவா?''

''நீ மல்லியப் போடு போதும்!''

பைநிறைய வாங்கி வந்து... நெருக்கமாய் தொடுத்து சைந்தவியிடம் தந்தாள்.

''இந்தா. இதை வச்சுக்க...!''

''இவ்வளவுமா?'' மலைத்தாள்.

''பைத்தியமா உனக்கு? ஒ சுமங்கலிப் பொண்ணு... தலைநிறைய பூ வச்சுக்க வேணாமா? கொடுத்தா... இவ்வளவா, அவ்வளவான்னு கேட்கக் கூடாது காசு குடுத்தா வாங்கினேன்? தெரிஞ்சவங்க குடுத்தாங்க...

''சரிங்க அத்தை!''

அழகான, நீளமான கூந்தல் சைந்தவிக்கு! தலைநிறைய பூச்சூடி வளைய, வளைய வந்த மருமகளை அவளறியாமல் பார்த்து ரசித்தாள், வடிவு.

தாமோதரன் மனைவியைப் பார்த்து தனக்குத் தானே சிரித்துக் கொண்டார்.

## 7

வழக்கம்போல... கடிகாரத்தின் உதவியின்றி டாணென்று ஐந்து மணிக்கு விழிப்பு வந்து விட்டது வடிவுக்கு.

முகம் கழுவி, கலைந்திருந்த முடியை சீர்படுத்தி கொண்டை விட்டுக் கொண்டு, குழாய் தண்ணீர்

''மானேஜருக்கு வயது 50.ஆகுது... அதனால லஞ்சத்தில் 50% தள்ளுபடி பண்ணிக்கிறார்...''

''ஓ இதுதான் பொன் விழாவுக்கான சலுகைன்றதோ!''

- எம்.அசோக்ராஜா, அரவக்குறிச்சிப்பட்டி



அடிப்பதற்காக எழெட்டு குடங்களை பாத்ரூமிற்கு எடுத்துச் சென்றாள்.

பம்பில் தண்ணீர் அடிக்கும் வேலைகளை எல்லாம் சைந்தவியை செய்ய விடுவதில்லை.

அடுத்து வாசல் பெருக்கி கோலம் போட்டுவிட்டு உள்ளே வந்தவளின் கண்களில் அன்றைய புதுநாளின் வெளிச்சத்தில் காலண்டர் பட்டது.

முந்தைய நாள் தேதியைக் கிழித்தவள் அன்றைய தேதியைப் பார்த்ததும் வாய் முணுமுணுத்தது.

'முருகா... இந்த முறையாவது நல்ல செய்தியைச் சொல்லு! இன்றைக்கும் கல்லைத் தூக்கி தலையில் போட்டுடாதே!' ஏக்கமும், ஆசையும், பயமுமாய் வேண்டிக்கொண்டாள்.

ஆனால் அடுத்த அரைமணி நேரத்தில் தலையில் கல்லுதான் விழுந்தது.

எதிர்பட்ட கம்பனிடம், ''உன் பொண்டாட்டி எங்கேடா...பருப்பு ஊறவெச்சிருக்கேன். வெங்காயம், தக்காளி போட்டு குக்கர்ல வச்சிடச் சொல்லு!''

''இல்லேம்மா... நீயே செஞ்சிடு!''

''ஏன்டா?''

''வீட்டுக்கு தூரம்...''

''இந்த மாசமுமா... கடவுளே!''

''அம்மா... என்னம்மாயிது... இதுக்கேன் நீ அழுறே?''

''அழாம சிரிக்கவா முடியும்? கல்யாணமாகி பத்து மாசம் முடிஞ்சுப் போச்சு. ஆனா இதுவரைக்கும் ஒரு புழு, பூச்சி உண்டாகலையேடா!''

''புழு, பூச்சி எல்லாம் மோசமான பாடி கண்டிஷன் உள்ளவங்களுக்குதான் உண்டாகும். சைந்தவிக்கு என்ன குறைச்சல்?''

''கிண்டல் பண்ற விஷயமா இது?''

''நீ சீரியஸா எடுக்கற அளவுக்கு பெரிய விஷயமும் இல்லேம்மா. பத்து மாசம்ங்கறது ரொம்ப லேட்டா என்ன? இருக்கட்டுமே... உண்டாகும்போது உண்டாகட்டுமே. ஃப்ரீயா விடும்மா!''

''கம்பா... நீ என்னதான் சொல்லு... மனசு சமாதானமாகலேப்பா! நம்ம பரம்பரையில யாருக்குமே இவ்வளவு லேட்டானதில்லே. நான் ஒண்ணு சொல்லுவேன்... கேப்பியா?''

''சொல்லு!''

''அந்தப்பொண்ணை டாக்டர்கிட்டே கூட்டிட்டுப்போய் டெஸ்ட் பண்ணிடு...!

''என்னது?''

''கோபப்படாதே கம்பா. சில பொண்ணுங்களுக்கு கர்ப்பபையில அடைப்பு, கட்டினு கோளாறு இருக்கும். அதனாலக்கூட குழந்தை தங்காது. அப்படி எதுவா இருந்ததுன்னா... இப்பவே சரிப்



பண்ணிடலாமே... அதுக்கு தான் சொல்றேன்...!''

''அப்படி எதுவும் இருக்காதும்மா...!''

''அதை டாக்டர் சொல்லட்டும். உன்னை கெஞ்சிக் கேட்டுக்கறேன். எனக்கு பேரனோ, பேத்தியோ கண்டிப்பா வேணும். எவ்வளவு சீக்கிரம் முடியுமோ... அவ்வளவு சீக்கிரம்...''

''சைந்தவி படிச்சப் பொண்ணும்மா... கல்யாணமாகி முழுசா ஒரு வருஷம் கூட ஆகலே. அவங்கவங்க பத்து பதினஞ்சு வருஷம் கூட காத்துக்கிட்டிருக்காங்க. நான் இப்பவே டெஸ்ட் அது இதுன்னு... சொன்னா மனசு கஷ்டப்படாதா?''

''நான் நல்லதுக்குத்தானே சொல்றேன். அவளுக்கும் சீக்கிரம் ஒரு குழந்தையை பெத்துக்கணும்னு ஆசையிருக்காதா?''

''சங்கடப்படுத்தறேம்மா... நான் எப்படி அவகிட்டே இதைப் பத்தி...'' தர்ம சங்கடத்துடன் நகர்ந்தான்.

ஆனால், சைந்தவி அவன் மனக்கலக்கத்தை உடனே அகற்றினாள்.

''எல்லாம் கேட்டுக்கிட்டுத்தான் இருந்தேன். அத்தை சொல்றதுல என்ன தப்பிருக்கு? சப்போஸ், அவங்க சொல்ற மாதிரி சின்னதா ப்ராப்ளம் இருக்கவும் செய்யலாம். இருந்தா... இப்பவே க்யூர் பண்ணிக்கலாமே! எனக்கும் சீக்கிரம் குழந்தைப் பெத்துக்கணும்னு ஆசையிருக்கு. ஃபுல் செக்கப் பண்ணிடலாம்ங்க....

''...?!''

''என்னங்க அப்படிப்பார்க்கறீங்க?''

''உனக்கு கொஞ்சம் கூட வருத்தமாயில்லையா?''

''எங்க வருத்தப்படணும்? நீங்க கண்டதையும் போட்டு குழப்பிக்காம, ஒரு நல்ல டாக்டரா பார்த்து அப்பாய்ன்ட்மென்ட் வாங்கிடுங்க. அட ஆபீஸ்க்கு டைமாய்டுச்சே... இன்னும் குளிக்கக்கூட இல்லே, நீங்க... போங்க... அவன் முதுகில் கை வைத்து செல்லமாய் தள்ளி விட்டாள்.

கம்பன் மனபாரம் அகன்று குளியலறை நோக்கி நடந்தான். ஆனால் அந்த பாரம் அவள் நெஞ்சில் ஏறி கண்கள் கலங்கின.

★★★

கம்பன் அவளை மட்டும் பரிசோதனைக்கு உட்படுத்தவில்லை. அவள் எவ்வளவோ தடுத்தும் அவனும் தன்னை பரிசோதனைக்கு உட்படுத்திக் கொண்டான்.

ரிசல்ட்... இருவருக்கும் சாதகமாகவே வந்தது. இருவருக்குமே எந்தப்பிரச்சனையுமில்லை. ஆரோக்கியமாகவே இருந்தனர்.

வடிவு இப்போது தான் நிம்மதியாய் மூச்சு விட்டாள். பல கடவுள்களுக்கு நேர்ந்துக் கொண்டாள். ஆனாலும்...

அடுத்தடுத்து சைந்தவி ஏமாற்றத்தையே தந்தாள். ஐந்து மாதம் காத்திருந்த வடிவு... அதற்கு மேல் பொறுமையாய் இல்லை.

வெளிப்படையாகவே திட்ட ஆரம்பித்தாள்.

''என்ன உக்காந்துட்டியா? நானெல்லாம் கல்யாணமாகி பத்து மாசம் முடியல.... கையில குழந்தை! எந்த டாக்டரடி சொன்னார் உனக்கு குறையே இல்லேன்னு! பொய் சொல்றானா உன் புருஷன்? என் குடும்பத்துக்குன்னு வந்து வாய்ச்சியே... மலட்டு சனியன்''

அந்த வார்த்தைகளை ஜீரணித்துக் கொள்ள முடியாமல் வாய் விட்டு அழுதாள் சைந்தவி.

நிமிடத்தில் வார்த்தைகளை நெருப்புத்துண்டுகளாய் கக்கி விட்ட அம்மாவை அனலாய் நோக்கினான் கம்பன்.

''அம்மா... என்னம்மா இது... என்ன பேச்சு பேசறே? உன் வயசுக்கு இது தகுமா? மனுஷத்தனமாவா இருக்கு? உனக்கென்னம்மா வந்துச்சு? பிள்ளை இல்லையேன்னு வருத்தப்பட வேண்டியது நான். நானே சும்மாயிருக்கும் போது... உனக்கென்னம்மா வந்துச்சு? எங்களுக்கு இன்னும் வயசிருக்கு, நம்பிக்கை அதை விட அதிகமாய் இருக்கு. தயவு பண்ணி இப்படி பேசிப்பேசியே சாகடிச்சிடாதே! ரொம்ப... ரொம்ப கெஞ்சிக்கேட்டுக்கறேன். ப்ளீஸ்...'' கையெடுத்து கும்பிட்டான்.

''ஆமாம்... பெரிசா சொல்ல வந்துட்டான். வயசிருக்காம், நம்பிக்கை இருக்காம். முதல்ல குழந்தையிருக்கா? வெளியே தலைகாட்ட முடியல. எனக்கென்ன வந்துச்சுன்னா கேக்கறே... உன்னைப்பெத்து தொலைச்சிட்டேனே... எல்லாரும் என்னையில்ல கேட்கறாங்க. சும்மா பேச வந்துட்டான். அவ்வளவும் தலையணை மந்திரம்!''

''அம்மா...ச்சே... சும்மாயிருக்க மாட்டியா?'' நெற்றியில் பட்டென்று அடித்துக் கொண்டான்.

வடிவு முணுமுணுத்துக் கொண்டே வெளியில் சென்றாள்.

''சே... இவ... வாயை மூடிக்கிட்டு சும்மாவே இருக்க மாட்டாளா?' தாமோதரன் தலையில் அடித்துக் கொண்டார்.



''சாப்பாடு போடுற இடத்தில் ரகசிய காமிரா வெச்சிருக்காங்களாம்...

அதனால் என்ன?''

''ரெண்டாவது தடவை சாப்பிடப் போன ரெங்கசாமி மாட்டிக்கிட்டான்!''

-எம் அசோக்ராஜா,
அரவக்குறிச்சிப்பட்டி.



''என்னக்கா மார்க்கெட்டுக்கா?'' என்றாள் பங்கஜம்.

''ஆமாம்... புடலங்காய் கூட்டு வேணும்னு கேட்டார். என் வீட்டுக்காரர்... அதான், புடலங்காய் வாங்கலாம்னு வந்தேன். உங்க வீட்ல விருந்தாளிங்க வந்திருக்காங்க போல...'' என்றாள் வடிவு.

''ஆமாங்க்கா... என் பொண்ணுக்கு இப்ப அஞ்சு மாசம் இல்லே. என் நாத்தனார் வந்திருக்கா... பூ முடிக்கணுமாம். அதான்... சாயந்திரமா வந்திடலாம்னு. ஏழாம் மாசம் வளைகாப்பு பண்ணலாம்னு இருக்கேன். அப்ப நம்ம தெருவில எல்லாரையும் கூப்பிடுவேன்... நீயும் வந்திருக்கா...!''

''சரிம்மா!''

''ஏங்க்கா... ஒரு மாதிரியாருக்கே...!''

''ப்ச்... ஒண்ணுமில்லே.''

''அதை உன் வாய் மட்டும்தானே சொல்லுது. கம்பனுக்கு பிறகு தான் என் பொண்ணுக்கு கல்யாணமாச்சு. இன்னும் உன் மருமக முழுகிட்டே இருக்காளேன்னு தானே வருத்தப்படறே? எல்லாம் நல்லதே நடக்கும்... கவலைப்படாதேக்கா...!''

''மனசுக்கு கஷ்டமாயிருக்குடி பங்கஜம்? ஏதோ வகை தொகை இல்லாம கூட்டிட்டு வந்துட்டானேன்னு பெரிய மனசு பண்ணி அவளை சகிச்சுக்கிட்டு ஏத்துக்கிட்டேன். எது ஒழுங்கா நடக்குதோ இல்லையோ, மாசாமாசம் டாண்ணு உட்கார்ந்துடறதுல குறை வைக்கல. ஒரு மலடிய மடியில கட்டிக்கிட்டு வந்துட்டான். இன்னும் ஒரு வருஷம் பார்ப்பேன். பெக்கலேன்னா... அத்து விட்டுட்டு இன்னொரு பொண்ணை கட்டி வச்சிடுவேன்.''

''ஏன்க்கா ஆவேசப்படறே? சின்னஞ்சிறுசுக தானே?''

''உனக்கென்னம்மா தெரியும்? காது கும்முனு அடைக்கறவளுக்கு தான் பசியோட வேதனை தெரியும். அவளால என் நிம்மதியே போச்சு.

இரண்டே நாளில் அவள் பேசியது தெரு முழுக்க வலம் வந்து தாமோதரன் காதுக்கும் எட்டியது.

இரவு!

''வடிவு...''

''என்னங்க?''

''குழந்தை பிறக்கலேன்னா கம்பனுக்கு ரெண்டாங் கல்யாணம் பண்ணி வைப்பேன்னு வெளியில சொல்லிக்கிட்டு திரியறியா?''

''யார் சொன்னது?''

''எல்லாம் என் காதுக்கும் வந்தது. ஏன் இப்படிப்பேசறே? பிள்ளை பிறக்கறது அவ கையிலா இருக்கு? கடவுள்ன மனசு வைக்கணும்.''

'''எனக்கும் தெரியும்ங்க. அந்த நேரத்துக்கு பேசிடுவேனே தவிர நான் அப்படியெல்லாம் பண்றவளா? அந்தப் பொண்ணு வீட்டை எதிர்த்து கம்பனை நம்பி வந்திருக்கா. பெத்தவங்களும் ஒதுக்கி வச்

இருக்காங்க. தவிர, கம்பன் அவமேல உயிரையே வச்சிருக்கான், நானும் ரெண்டு புள்ளையை பெத்தவ தான். சும்மா மாமியார்ங்கற பந்தாவ காட்டறேன். அவ்வளவு தான்''.

''ஆனாலும், வெளியில உன்னைப்பத்தி தப்பாப் பேசறாங்க. பேச நதை குறைக்கக்க....''

பாத்ரூம் செல்வதற்காக அறையிலிருந்து வெளிப்பட்ட சைந்தவி அவர்கள் பேசுவது அத்தனையும் கேட்டு... ஆனந்தக் கண்ணீர் வடித்தாள்.

## 8

“ஏங்க?''

''என்ன சைந்தவி?''

''சவ்னிங் எத்தனை மணிக்கு வருவீங்க?''

''சொல்ல மறந்துட்டேனே... லேட்டாகும்... பத்துமணியாகும். ஏன் கேக்கறே?''

''இன்னைக்கு மனக்கேல்வரி அம்மன் கோவில்ல சங்காபிஷேகம் இருக்கு. நாம போகலாம்னுதான்...''

''ஸாரிடா... பர்மிஷன் கூட போட்டுட்டு வர முடியாது... முக்கியமான வேலை. ஏன், அம்மாவோட போய்ட்டு வாயேன்...''

''கேட்டேன்ங்க. இன்னைக்கு உங்க மாமா பொண்ணுக்கு ரிசப்ஷனாம். மாமாவும், அத்தையும் போறாங்க.''

''சரி... அப்ப நீ மட்டும் போய்ட்டு வா! பக்கத்திலே தானே கோவில். நடந்து போனா அஞ்சே நிமிஷம்.''

''சரிங்க.''

அன்று மாலை... கோவிலுக்குச் சென்றாள். ஏகப்பட்ட கூட்டம்.

திவ்யமான தரிசனம். மனமுருக வேண்டிக் கொண்டாள். பக்தர்கள் வேண்டுதலாய் சர்க்கரைப் பொங்கல், வெண் பொங்கல் விநியோகம் செய்தனர். எப்போதும் இது மாதிரி விஷயங்களில் கூச்சப்படும் சைந்தவி வரிசையில் நின்று பயபக்தியுடன் பிரசாதம் வாங்கி சாப்பிட்டாள்.

கைகழுவும் இடத்திலும் ஏகப்பட்ட கூட்டம் அங்கே தான் பார்த்தாள் தனவதியை. அவளுடைய தாய்!

எந்தெந்த கோவில்களில் விசேஷமோ, அங்கெல்லாம் தனவதியைப் பார்க்கலாம்.

''அ... அம்மா!''

கழுவிய கையை கர்ச்சீப்பால் துடைத்துக் கொண்டிருந்த தனவதி. திரும்பிப் பார்த்து முகம் மாறினாள்.

''நீ...யா?''

''நல்லாயிருக்கியாம்மா?''

''ஏய்...ஏய்... வாய மூடு... என்னைப்பத்தி விசாரிக்க உனக்கென்ன தகுதியிருக்கு? பெத்தவங்களை ஏமாத்திட்டு, உனக்கடுத்து இருக்கறவ வாழ்க்கையைப் பத்தி கவலைப்படாம எவங்கூடவோ ஓடின ஓடுகாலி தானே நீ?''

''அம்மா...!''

''நான் பெத்ததுல ஒண்ணு செத்துப் போச்சுன்னு... அன்னைக்கே தலை முழுகிட்டேன்டி. என் புருஷன் கம்பீரமா நடப்பாருடி. அவர் ஒடுங்கி ஒய்ஞ்சு போய்ட்டாரினா அதுக்கு யார் காரணம்? உன்னோட நம்பிக்கை துரோகம். என் வீட்டுப்படிய என்னைக்கு தாண்டிப் போனியோ... அன்னைக்கே உனக்கும் எங்களுக்கும் எல்லாமே அத்துப்போச்சு. உன் புருஷன் வீடு எங்கேனு எங்களுக்கும் தெரியும். நீ தேவைன்னு நினைச்சிருந்தா வீடு தேடி வந்து சத்தம் போட்டிருப்போமே!''

''நான் என்னம்மா அவ்வளவு பெரிய தப்புப்பண்ணிட்டேன்?''

''ஆமா... தப்பு தான், மிகப்பெரிய தப்புதான். வயிறு எரியுதுடி. உனக்கு உயிர்கொடுக்க, உணவு கொடுக்க, படிப்பு கொடுக்க நாங்க வேணும். திடீர்னு ஒருத்தனைப் பார்த்து லவ் பண்ணி, எங்களை தூக்கி எறிஞ்சிட்டு ஓடிப்போவே... நாங்க மன்னிச்சு ஏத்துக்கணுமா? இதோப் பார்! இந்த தெய்வ சன்னிதானத்துல இருந்து சொல்றேன். பெத்தவங்க வயிறெரிய நீ நல்லாயிருக்க மாட்டே. மண்ணாப் போவே...!''

ஆத்திரமும், ஆவேசமுமாய் பேசிய தனவதி மகளை முறைத்து விட்டு, மூச்சு வாங்க திரும்பி நடந்தாள்.

தலையில் இடி விழுந்தது போல் திக்பிரமையுடன் நின்றிருந்தாள் சைந்தவி.

''இப்படியே அழுதுக்கிட்டே இருந்தா எப்படிம்மா? கோபம், ஏமாற்றம் பேசத்தான் செய்வாங்க. எங்கம்மா பேசலையா? அது போல் தான்... இதையேன் பெரிசா எடுத்துக்கிட்டு அழறே?'' அவன் முதுகில் தட்டி சமாதானப்படுத்தினான் கம்பன்.

''இல்லீங்க... கோவில்ல வச்சு எனக்கு சாபமாக்குடுத் தாங்க...எ... என்னால தாங்கிக்க முடியலீங்க...''

''சரி... பெத்த தாய் தானே சாபம் குடுத்தாங்க. அது எப்படி பலிக்கும்? எந்த தாயும் மனசறிஞ்சு சாபம் கொடுக்க மாட்டாங்க. எல்லாம் மறந்து தூங்கு. நான் ஆபீசுக்கு பதினஞ்சு நாள் லீவு போட்டாச்சு.''

''எங்க?'' என்றாள் அழுவதை நிறுத்தி.

''அம்மா... நம்ம ரெண்டு பேரையும் எல்லாக் கோவிலுக்கும் போய்ட்டு வரச் சொன்னாங்க. ஸோ, அப்படியே ஹனிமூன் ட்ரிப் பாகவும் மாத்தி... போய்ட்டு வரலாம்.''

''ஹனிமூனா?''

''ம்... திருப்பதி போய்ட்டு, அங்கேர்ந்து விசாகப்பட்டினம் போறோம். அருமையான ஸ்பாட். அங்கே ரெண்டு நாள் ஸ்டே பண்றோம். அப்புறம் கோயம்புத்தூருக்கு போய் மருதமலை போறோம். அப்படியே ஊட்டிக்குப் போய் கொஞ்சி குலாவிட்டு, மதுரை

போறோம். மீனாட்சி அம்மனை தரிசனம் பண்ணிட்டு, திண்டுக்கல் வழியா கொடைக்கானல்! அங்கே உச்சியிலே உட்கார்ந்திட்டிருக்கிற குறிஞ்சி ஆண்டவர்க்கு ஒரு ஹலோ சொல்லிட்டு, ''கார்காலக் குளிரும், மார்கழிப்பனியும், கண்ணே உன் கைசேரக் கனியும்'னு மேகத்தோட மேகமா கலந்து பாடி ஆடலாம். இன்னும் எந்தெந்த பிக்னிக் ஸ்பாட்ல எல்லாம் கோவில், குளம் இருக்குன்னு விசாரிச்சுக்கிட்டு இருக்கேன். எப்படி நம்ம புரோகிராம் ஒக்கேதானே?''

''எனக்கு எல்லா பிக்னிக் ஸ்பாட்டையும் விடவும் நிம்மதி தர்ற ஸ்பாட் இது தான்'' என்றபடி அவன் நெஞ்சில் முகம் புதைத்து கண் மூடினாள். கம்பன் அவள் தலையை இதமாய் வருடிக் கொடுத்தான்.

சொன்னபடி லீவுட் போட்டு விட்டு, அம்மா சொன்னபடி கோவில்களுக்கும், தங்கள் விருப்பப்படி மலைப்பிரதேசங்களுக்கும் சென்றனர். அள்ள அள்ளக் குறையாத சந்தோஷத்துடன் சுற்றித் திரிந்தனர்.

குளிர்பிரதேசம், ஏகாந்த சூழ்நிலை, உறவுகளற்ற தனிமை, அவர்களிடையே இன்னும் நெருக்கத்தையும், காதலையும் அதிகப்படுத்தியிருந்தன.

இருபது நாட்கள் கழித்து ஊர் திரும்பினர். மருமகளுக்கு சத்தான உணவுகளை சமைத்துப் போட்டாள் வடிவு. ஆனாலும் வெளியில் ''என் மருமக... நான் எய்னாலே அலறுவா... அப்படி வச்சிருக்கேன்'' என்று அளப்பாள்.

கணவனின் காதலும், ஊட்டமான உணவும், உறவுகளின் அந்நியோன்யமும், சைந்தவியை ஒரு சுற்று பெருக்க வைத்தது.

அவள் மனதிற்குள் குபீரென்று ஒரு ஊற்று. இனம் புரியாத மகிழ்ச்சி. ஏதோ ஒரு பெரிய இனிய செய்தி தனக்காக காத்திருப்பது போல் ஒரு உணர்வு. வீட்டிற்குள் தோகை விரித்தாடும் மயிலாய் வலம் வந்தாள்.

நாள் நெருங்க... நெருங்க மகிழ்ச்சியை மீறிய பயம்.

இன்னும் இரண்டு நாள்.

ஒரு நாள்.

நாளை...

அன்றிரவு முழுக்க உறக்கமே வரவில்லை. வேண்டாத தெய்வமில்லை.

மறுநாள் விடிந்த போது... அவள் எதிர்பார்த்த பயங்கரம் நிகழவில்லை. ஆனால், வடிவின் உடன் பிறந்த அண்ணன் இறந்த செய்தி வந்தது. வடிவு மருமகளை சுத்தமாய் மறந்து துக்கத்தில் ஆழ்ந்து போனாள். அதே ஏரியாவில் வீடு என்பதால் தினமும் அண்ணிக்கு ஆறுதலாய் அங்கு சென்று விடுவாள்.

சைந்தவி... ரகசியத்தைத் தனக்குள் அடைகாத்த படி நாட்களை எண்ணிக் கொண்டு வந்தாள்.

பத்து...



பதினைந்து...

பத்தொன்பது...

இருபது...

'அது தான்... அதே தான்! இருபது நாள் தள்ளிப் போயிருக்கிறதென்றால்... வேறென்னவாக இருக்க முடியும்? கடவுளே... உனக்கு நன்றி... நன்றி!'

'என் மாமியார் ஆசைப்பட்ட செய்தியை சொல்லப்போகிறேன். எவ்வளவு சந்தோஷப்படுவார்கள். நல்ல மனுஷி. அவளுக்கு என்னால் கிடைக்கிற உபகாரம் இது மட்டும் தானே? குழந்தையை நல்லபடி பெற்று... அவள் கையில் கொடுக்கும் போது, அவள் முகத்தில் தோன்றும் உணர்ச்சிப் பிரவாகத்தை கண்டு களிக்க வேண்டும். அதற்காக இன்னும் பத்து மாதம் காத்திருக்க வேண்டுமா?'

'எப்படி சொல்வது? முதலில் என் ஆருயிர் கம்பனுக்கு அல்லவா சொல்ல வேண்டும். உயிர் கொடுத்த தெய்வமாயிற்றே?'

ஆபீஸில் இருந்த கணவனுக்கு போன் பண்ணினாள்.

''என்ன சைந்தவி?''

''பர்மிஷன் போட்டுட்டு வீட்டுக்கு வர முடியுமா?''

''என்ன விஷயம்?''

''பயப்படற மாதிரி எதுவுமில்லே... நேர்ல வாங்களேன் ப்ளீஸ்...''

''என்ன புதிர் போடறே!''

''ப்ளீஸ்... வாங்களேன்!''

''சரி!''

காலையிலேயே சொல்லியிருக்கலாம் தான். ஆனால், அதில் என்ன த்ரில் இருக்கிறது? இப்படி வரவழைத்து, 'இந்தா, மிகப் பெரிய சந்தோஷம்' என்று கொடுக்கும் போது... ரெட்டிப்பாகிறதல்லவா?

வீட்டிற்குள் நுழைந்த கம்பனை ஆச்சர்யமாய் எதிர்க்கொண்டார் தாமோதரன்.

''என்ன கம்பா... ரெண்டு மணிக்கெல்லாம் வந்துட்டே... உடம்பு சரியில்லையா?''

''இல்லப்பா... சைந்தவி தான் போன் பண்ணி வரச் சொன்னா... எங்கே அவ?''

''உன் ரூம்ல தான் இருக்கா!''

''சைந்தவி வரச் சொன்னாளா... எதுக்கு?'' கையைத் துடைத்த படி

''எங்க தலைவர் பேச ஆரம்பிச்சா நேரம் போறதே தெரியாது!

அப்படியா...?''

''பின்னே! தூங்கறப்போ யாருக்குத் தான் நேரம் தெரியும்?''

- எம். அசோக்ராஜா, அரவக்குறிச்சிப்பட்டி



வடிவும் வந்தாள்.

''தெரியலேம்மா...!''

எல்லோரும் பதைப்புடன் அவள் அறைக்குச் செல்ல... சைந்தவி வெட்கத்துடன் சிரித்தாள்.

''சைந்தவி உனக்கொன்றுமில்லையே...''

''ம்ஹூம்...!''

''பின்னே... ஏன் அவனை போன் பண்ணி வரச் சொன்னே?'' சைந்தவி பதில் பேச முடியாமல் வெட்கத்தில் திக்கு முக்காடினாள்.

''சொல்லு சைந்தவி...!''

''எ... எனக்கு வெட்கமாயிருக்குங்க...!''

வடிவு... லேசாய் புரிந்தவளாய் காலண்டரைப் பார்த்தாள். 'அட... இவ இந்த மாசம் உட்காரவே இல்லையே...!'

''எத்தனை நாளடி தள்ளிப் போயிருக்கு?''

''...?!''

''எ... என்னது... சைந்தவி நிஜமாவா?''

முகம் பிரகாசிக்க கேட்ட கணவனின் முகத்தை நேரிடையாய் பார்க்க முடியாமல், ''ம்...'' என்று தலையாட்டினாள்.

அவ்வளவு தான்... அத்தனை பேர் முகத்திலும் சந்தோஷம் குதி கொண்டது.

## 9

**வீ**டே தலை கீழாய் மாறிப்போனது.

கம்பன் மனைவியின் கையைப்பற்றி அழுத்தினானே ஒழிய வார்த்தைகள் வரவில்லை.

தாமோதரன் கண்களை மூடி பெருமூச்சு விட்டார்.

''முருகா... என் வயித்துல பாலை வார்த்துட்டே...'' தலைமேல் இரு கரங்களையும் கூப்பி நன்றி கூறிய வடிவு ''இப்பத்தான் சைந்தவி என் மனசு குளிர்ந்தது. எவ்வளவு பெரிய விஷயம் சொல்லியிருக்கே. பெரிசாக் கொண்டாட வேணாமா? உனக்கு என்ன ஸ்வீட் பிடிக்கும் சொல்லு... என் கையால சமைச்சு தர்றேன்.''

'அதெல்லாம் ஒண்ணும் வேணாம் அத்தை!''

''அவ அப்படித்தான் சொல்லுவா... நீ செய்ம்மா... ரொம்ப சந்தோஷமாயிருக்கேன்... எனக்கே சாப்பிடணும் போலிருக்கு.''

''அவ பாட்டுக்கு ஏதோ செய்யட்டும். நீ அப்பாவாகப் போறதை நீயில்லே ஸ்வீட் குடுத்து கொண்டாடணும்.''

''இதோ... இதோ வந்துடறேன்ப்பா!'' உற்சாகத்தில் பைக்கில் ஏறிப் பறந்தான்.

''ஐயாவுக்கு சுகர் இருக்கு ஞாபகமிருக்கில்லே... ஸ்வீட்டா கேக்கறீங்க?'' கேட்டாள் வடிவு.

''தாத்தாவா ஆகப்போற சந்தோஷம்... இப்ப போய் சுகரை ஞாப



கப்படுத்தாதே... போ.. போய் ஒரு கை சர்க்கரை அதிகமாகவே போட்டு ஸ்வீட் பண்ணு''

மாமனாரை இதற்கு முன் இவ்வளவு சந்தோஷமாய் பார்த்ததில்லை சைந்தவி. அவரை ஆச்சர்யமாய் பார்த்தாள்.

★ ★ ★

''இந்தா...'' மனைவியிடம் ஒரு பால் கவரை நீட்டினார் தாமோதரன்.

''என்ன இது?''

''ரெண்டு கவர் பால் இருக்கு!''

''எதுக்குங்க... ஏற்கனவே ஃப்ரிட்ஜ்ல ஒரு கவர் பால் இருக்கே!''

''அது நமக்கு இருக்கட்டும். இந்த ரெண்டு கவர் பாலையும் கண்டக் காய்ச்சி குங்குமப்பூ போட்டு நைட்டு படுக்கப்போகும் போது அத்தப் பொண்ணுக்குக் குடு. தினமும் நான் வாங்கித் தர்றேன். என் பேரப்பிள்ளை நல்லா கொழு கொழுன்னு தக்காளிப்பழம் மாதிரி பிறக்கணும்.''

சிரித்தபடி வாங்கிக் கொண்டாள் வடிவு.

ஏகப்பட்ட கோவில்களுக்கு நேர்ந்துக் கொண்ட வடிவு தினம் ஒரு கோவிலுக்குச் சென்று அர்ச்சனை செய்தாள். பால் அபிஷேகம் செய்து, காவடி எடுத்தாள். சைந்தவியின் நெற்றியை குங்குமத் தீற்றலின்றி பார்க்க முடியவில்லை.

ஒரு நாளைக்கு மூன்று முறையாவது ஜூஸ் கொடுப்பாள். வித விதமாய் சமைத்துப் போட்டாள். கீரையும், காய்கறியும், முட்டையும் இல்லாமல் சாப்பாடு தருவதில்லை.

கம்பன் அவளுக்குப் பிடித்ததை எல்லாம் ஆசையாய் வாங்கிக் கொடுத்தான்.

புகுந்த வீடு தன்னை தலை மேல் தூக்கி வைத்து ஆட, சைந்தவிக்குள் ஒரு வித கலக்கம்.

'ஒருவேளை இது கர்ப்பமாய் இல்லாது போனால்? ஐயோ கற்பனையாக் கூட நினைக்க முடியவில்லையே! இல்லை... இது கர்ப்பம் தான்! நிச்சயம் குழந்தை தான். வயிற்றுக்குள் இறுக்கிப் பிடித்தாற் போல் இருக்கிறதே. கருத்தரித்தவர்கள் எல்லோரும் இந்த மாதிரி உணர்வைப் பற்றி தானே சொன்னார்கள்! இது குழந்தையே தான்!' உறுதியாய் நம்பினாள்.

டாக்டரிடம் சென்று உறுதி செய்து கொள்ள நாற்பத்தெட்டு நாள் ஆக வேண்டுமே. இன்னும் ஏழு நாட்கள் இருக்கிறதே!'

தவித்தாள். அவஸ்தைப் பட்டாள்.

நாட்கள் வேகமாய் நகர்ந்தன.

இன்னும் இரண்டே நாட்கள்.

''அம்மா... நாளன்னிக்கு சைந்தவியை டாக்டர்கிட்டே அழைச்

விட்டுப்போகணும். சுமதி ரவிசங்கர்கிட்டேயே போய்டலாம். கைராசியான டாக்டர்னு எல்லாரும் பாராட்டறாங்க!''

''ஆமாம் ....நானும் கேள்விப்பட்டேன். அங்கேயே போய்டலாம். ஆனா நாளன்னிக்கு வேணாம்... நாள் சரியில்லே... நாலு நாள் போகட்டும்.''

''சரிம்மா... கூட ரெண்டு நாள் தானே? வெய்ட் பண்ணுவோம்.''

ஆனால், சைந்தவிக்கு பொறுமையில்லை. ரிசல்ட்டை உடனே தெரிந்து கொள்ளாவிட்டால் உயிரே போய் விடும் போலிருந்தது.

நாற்பத்தெட்டாவது நாள்... அவளுக்குத் தோதாய் அமைந்தது.

காலையிலேயே தாமோதரனும், வடிவும் வெளியில் கிளம்ப தயாராய் இருந்தார்கள்.

''சைந்தவி...''

''சொல்லுங்க அத்தை!''

''நானும், மாமாவும் திருவான்மியூர் வரை போய்ட்டு வந்துடறோம். அங்கே இருக்கிற மருந்தீஸ்வரர் கோவில் ரொம்ப விசேஷம்னு கேள்விப்பட்டோம். போய் அர்ச்சனைப் பண்ணிட்டு வந்துடறோம். இப்ப உன்னை வெளியில அழைச்சிட்டுப் போகக் கூடாது. இல்லேன்னா... கூட்டிட்டுப் போய்டுவோம். டிபன் ரெடியா இருக்கு. சாப்பிட்டு ரெஸ்ட் எடு. பன்னெண்டு மணிக்குள்ள வந்துடுவோம். இருந்தாலும் மதியத்துக்கும் சமைச்சி வச்சிட்டேன். நேரத்துக்கு சாப்பிட்டுக்க. உன் பக்கமா தாழ்ப்பாள் போட்டுக்க. வரட்டுமா?''

''போய்ட்டு வாங்க!''

போய் விட்டனர். கம்பனும் அன்று சீக்கிரமே கிளம்பிப் போய் விட்டான்.

தனித்திருந்த சைந்தவிக்கு சட்டென ஒரு எண்ணம் உதித்தது. தீர்மானத்திற்கு வந்தாள். தன்னைத் தயார்படுத்திக் கொள்ள ஆரம்பித்தாள்.

''அவசியம் இப்ப கோவிலுக்குப் போகணுமா?'' பஸ்ஸ்டாண்டை நோக்கி நடந்து கொண்டிருந்த தாமோதரன் மனைவியிடம் கேட்டார்.

'எங்க டாக்டர்கிட்ட சம்பளம் கூடுதலா வேணுமின்னு கேட்டேன்...''


''என்ன சொன்னார்...?''

''பக்கத்து டாக்டர் கொடுப்பதை விட பத்து ரூபாய் கூடுதலா தருகிறேனே என்றார்!''

- எஸ்.மாரியப்பன,
தேனி.







''ஏன் கேக்கறீங்க?''
டயர்டா இருக்கு...!''
''கோவிலுக்குப் போகும் போது அபசகுனமா அப்படி சொல்லக் கூடாது. அந்த கடையில ஒரு ஜூஸ் சாப்பிடறீங்களா? கிளம்பறப் பக்கூட ரெண்டே ரெண்டு இட்லி தான் சாப்பிட்டீங்க... எப்படிப் போதும்?''
''ப்ச்... வேணாம் வா... பஸ் வர்ற நேரம். ஆமா... நம்ம மருமக உண்டாகியிருக்கிறதை வெளியில யார்கிட்டேயாவது சொன்னியா?''
அந்தளவு மடச்சியா நான்? ஊர் கண்ணிருக்கே... பொல்லாதது. மூணு மாசம் முடிஞ்சப் பிறகு தான் சொல்லணும்னு இருக்கேன்.''
''வெரிகுட்... இந்த விஷயத்துல மட்டும் தான் ஒழுங்கா நடந்திருக்கே...''
''என்னைப்பத்தி கொஞ்சமாவது மட்டமாப்பேசலேன்னா உங்களுக்கு பொழுதே போகாதே... அதோ பஸ் வந்துடுச்சு... வாங்க... வாங்க!''

★ ★ ★

படபடக்கும் இதயத்தோடு, முதல் முறையாக கணவருக்குத் தெரியாமல் ஒரு காரியம் செய்யப்போகும் பயத்துடன் வாசலுக்கு வந்து கதவைப்பூட்டி சாவியை எடுத்துக் கொண்டாள்.
தெருவில் அவரவர் தங்கள் வேலைகளில் ஈடுபட்டிருந்ததால், யாரும் இவளை கவனிக்கவில்லை. இந்த ஏரியாவில் எந்த டாக்டரையும் அவளுக்குத் தெரியாது. வேறு ஏரியாவுக்கு சென்று திரும்ப அவளுக்கு நேரமும் இல்லை. காதில் விழுந்த சுமதி ரவிசங்கரின் பெயர் மட்டும் தான் தெரியும். ஆட்டோ டிரைவரிடம் பெயரைச் சொன்னதும், ''தெரியும்மா... ஏறி உக்காருங்க'' என்றார்.
கங்கா ஹாஸ்பிடல்!
வண்ணாரப்பேட்டையில் இருந்தது.
அரைமணி நேர காத்திருப்புக்குப்பின் உள்ளே அனுமதிக்கப்பட்டாள் சைந்தவி.
டாக்டர் சுமதி ரவிசங்கர் புன்னகையை ஒட்டிக்கொண்ட முகத்துடன் வசீகரமாய் இருந்தார். நாற்பதைத் தாண்டிய வயதென்றால்... நம்பவே முடியாத இளமை.
''என்னப்பா... சொல்லுங்க!'' என்று சிநேகிதமாய் ஆரம்பித்தது... சைந்தவியைக் கவர்ந்தது.
மெல்லச் சொன்னாள்.
''கூட யாரும் வரலையா?''
ஹஸ்பண்ட் வெளியூர் போயிருக்கார். லவ் மேரேஜ்ங்கிறதால எங்க வீட்டோட டச் இல்லை!''
கண்களால் அவளை அளந்தார். தவறான பெண் அல்ல, திருமண



மான பெண் தான் என்று புரிய... சில விளக்கங்களை கேட்டு பரிசோதனைக்கு உட்படுத்தினார்.
ரிசல்ட் வர காத்திருந்த அரை மணி நேரமும் அவள் உயிர் அவளிடம் இல்லை.
இத்தனை நாளும் நிரடிக்கொண்டிருந்த கலக்கத்திற்கும், சந்தேகத்திற்கும் விடை கிடைத்தது.
அந்த விடை அவள் உயிரை உறிஞ்சி நடைப்பிணமாக்கியது.
''ஸாரி சைந்தவி... இது கர்ப்பமில்லை! லேட் பீரியட் தான்'' என்றார் டாக்டர் சிறு சங்கடத்துடன்.
''டா..க்..ட..ர்''
''நோ...நோ... வருத்தப்படாதீங்க சைந்தவி... யூ ஆர் ஸோ யங்! தென் வாட்? இப்போதைக்கு சில விட்டமின் டேப்லட்ஸ் எழுதித் தர்றேன். ஒரு மாசம் தொடர்ந்து சாப்பிட்டு, அடுத்த மாசம் வந்து பாருங்க. ஓக்கே... நம்பிக்கையோட போங்க!''



''டாக்டர்... நேற்று இரவு நான் இறந்து விட்டதாக கனவு கண்டேன்...''
''கனவு தானே..! அதனால் ஒன்றுமில்லை...!''
''ஆனால் அதற்கு முன் என் இரண்டு மகன்கள் சொத்து விஷயமாக சண்டைப் போட்டு, மண்டையை உடைத்து இங்கேயே அட்மிட் ஆகிவிட்டார்கள்!''
...!...!..!
- எஸ்.மாரியப்பன், தேனி

சைந்தவி வீட்டிற்கு எப்படி வந்தாள், எப்போது வந்தாள் என்று அவளுக்கே புரியவில்லை.
அவளால் அந்த ஏமாற்றத்தைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை.
நாற்பத்தெட்டு நாளாய் பொத்திப்பொத்தி பாதுகாத்ததெல்லாம்... இதற்குத்தானா? கண்டக்காய்ச்சிய பாலும், ஜூஸும், சத்தான ஆகாரமுமாய் இந்த வயதானவர்கள் ஊட்டி, ஊட்டி வளர்த்ததெல்லாம் குழந்தைக்கு இல்லையா? இந்த ஏமாற்றத்தை எப்படி தாங்கிக் கொள்வார்கள்? எப்படி நான் சொல்லுவேன்? ஜீரணிக்கத் தான் முடியுமா? எத்தனை கோவில்கள்? பரிகாரங்கள். அதில் ஒரு தெய்வம் கூட கண் திறக்கவில்லையே!
உள்ளங்கையில் வைத்துத் தாங்கினார்களே... உள்ளே எதுவும் இல்லை என்று தெரிந்தால்...? தூக்கி எறிந்து விடுவார்களே! எப்படி இதைச் சொல்லப் போகிறேன்... கடவுளே... என் உயிரை இப்படியே பறித்துக் கொள்ளேன்... அவர்களின் ஏமாற்றத்தைப் பார்க்கும் தைரியம் எனக்கில்லையே... என்ன செய்யப்போகிறேன்?
அழுதழுது தலை வலித்தது. டாக்டர் தந்த ரிப்போர்ட்டையே வெறித்துப் பார்த்தவள், ஆத்திரத்துடன் தீக்குச்சியை உரசி எரித்தாள்.
மன உளைச்சலில்... நாற்பத்தெட்டு நாளாய் ஏமாற்றி வந்த

'பொய் கர்ப்பம்' கலைந்துப்போனது. அடி வயிற்றைப் பிடித்துக் கொண்டு அழுதாள்.

மனபாரம் தாளாமல் கணவனுக்கு போன் பண்ணினாள்.

''என்னடா?'' என்றான் உற்சாகமாய்.

''எ...என்னங்க?''

சொல்லுடா... பையன் இப்பவே உதைக்கிறானா?''

நல்ல மூடில் இருந்தான் கம்பன்.

'ஐயோ... எப்படி சொல்வேன்... தாங்குவானா?'

அழும் குரல் கேட்க... பதறினான்.

''எய்... அழறியா? என்னடா... என்ன ஆச்சு?''

நா... நான்... எ..னக்கு...!''

சொல்லும்மா... பதறுது!''

''பீரியட்ஸ்... ஆயிடுச்சுங்க...!''

''ஓ.. மை காட்!'' அதிர்ச்சியில் போனை வைத்து விட்டான்.

அந்த செய்கை... அவள் உயிரை இன்னும் வதைத்தது.




'அப்ப... என்னைவிட உங்களுக்கு குழந்தைதான் முக்கியமா? எனக்கு ஏமாற்றமில்லையா? வருத்த மில்லையா? ஆறுதலாய் ஒரு வார்த்தை சொல்லக்கூட மனமின்றி... இவ்வளவு தானா நீங்கள்?'

மனம் பேயாட்டம் போட அவசரத்தில் அள்ளித் தெளித்த கோலமாய் ஒரு முடிவெடுத்தாள்.

தன்னை நிதானத்திற்குக் கொண்டு வந்த கம்பன், பாவம்... சைந்தவி... எவ்வளவுப் பெரிய ஏமாற்றத்தை சுமந்துக் கொண்டிருக்கிறாள்? எத்தனை கற்பனை? ஆசை? அத்தனையும் கானல்நீராய் போய் விட்டதே! இந்நேரம் அம்மா அவளை அடிபட்ட வேங்கையாய் மாறி வார்த்தைகளால் கடித்து குதறிக் கொண்டிருப்பாளே...!'

சைந்தவிக்கு போன் பண்ணினான்.

ஹாலில் இருந்தபோன் கதறிக் கொண்டிருக்க சைந்தவி தூக்கில் தன் கடைசி துடிப்பை வெளிப்படுத்தி அமைதியானாள்.

யாரும் போனை எடுக்காதது நெருட அரைநாள் லீவு சொல்லி விட்டு கிளம்பினான்.

★★★

''ப்பா... என்ன வெயில்? எவ்வளவு தண்ணி குடிச்சாலும் தாகம் அடங்கலே. இந்த பொண்ணு நேரத்துக்கு சாப்பிட்டு இருக்குமா தெரியலியே...!''

''.....?!''

''என்னங்க அமைதியா வர்றீங்க?'' என்று கேட்டாள் வடிவு.

''அர்ச்சனைக் கூடையை நீயில்லே பத்திரமா வச்சிருக்கணும்.



பஸ்ஸிலேயே விட்டுட்டு இறங்கிட்டே. அதுக்கு என்னை குறை சொல்லி நடுரோட்லயே நாலுபேர் பார்க்கறமாதிரி கத்தறே?''

''மனசுக்கு சங்கடமா இருந்துச்சுங்க. அதான் கத்திட்டேன் மன்னிச்சிடுங்க''

''உன் வாயைக் கொஞ்சம் கட்டுப்படுத்திக்க இல்லேன்னா அவஸ்தைப்படுவே! எப்பவுமே நான் பொறுமையா இருப்பேன்னு நினைக்காதே!'' கோபமாய்.

''அதான் மன்னிப்புக் கேட்டுட்டேனே...!''

''இதென்ன வாசல் கதவு உள்ளேத் தாழ்போடாம இருக்கு?'' கை வைத்ததும் திறந்து கொண்ட கதவை ஆச்சரியமாய்ப் பார்த்தார்.

''ஆமாங்க... இந்தப் பொண்ணு கொஞ்சம் அஜாக்கிரதைதான்''

''எனக்கு முதல்ல கொஞ்சம் தண்ணி குடு!'' தனது ஈஸிசேரில் அமர்ந்து கண்மூடினார்.

''ஒரேயடியா சாப்பிட்டுக்குங்களேன்!''

''வேணாம் ஒரு அரைமணி நேரம் போகட்டும்''.

''தண்ணீரைக் கொண்டு வந்து கொடுத்தவள், ''என்ன இந்தப் பெண்ணோட சத்தமே காணோம். தூங்கறாளா என்ன?''

''அப்படித்தான் இருக்கும். விடு தூங்கட்டும்.''

கிச்சனுக்கு சென்று பார்த்தவள், ''சமைச்சு வச்சதெல்லாம் அப்படியே இருக்கு இந்த நேரத்துக்கு வேளாவேளைக்கு கரெக்ட்டா சாப்பிட வேண்டாமா? சைந்தவி... சைந்தவி... ஏய் பெண்ணே... சாப்பிடாம போய் தூங்கறியா? உனக்காக தானே அவசர அவசரமா சமைச்சு வச்சிட்டு... ஐயோ...ஐயோ... என்ன அக்கிரமம் இது... இங்கே வாங்களேன்... இவளைப் பாருங்களேன்!'' பேசிக்கொண்டே... தாழிடாத கதவைத் தள்ளி உள்ளேச் சென்றவள் மின் விசிறியில் சேலை மாட்டி தொங்கிக் கொண்டிருந்த சைந்தவியைப் பார்த்து அடிவயிற்றில் சூடி மூச்சதிணுசில் அலறினாள்.

''என்ன... என்னடியாச்சு... ஏன் கத்தறே?'' பதைப்புடன் எழுந்



''நீ கொலை செய்ததை இரண்டு பேர் பார்த்ததாக சாட்சி சொல்கிறார்கள். அதனால் உனக்குத் தூக்கு தண்டனை விதிக்கிறேன்''

''பார்க்காதவர்கள் நிறைய பேர் இருக்கிறார்கள் அவர்கள் சொல்வதை கேட்டு என்னை விடுதலை செய்யக் கூடாதா...?''

- எஸ்.மாரியப்பன், தேனி

தேடி வந்தார் தாமோதரன்.

''தெரியலீங்க... இந்தப் பொண்ணு... இந்தப் பொண்ணு... ஐயோ... பாவி மகளே!''

தாமோதரனும் அந்த காட்சியைப் பார்த்து மூச்சு விட மறந்தார்.

''ஐயோ... ஐயோ... என்ன இது? எதனால... ஐயோ...''

அலறல் சப்தம் கேட்டு தெருவாசிகளும் வீட்டினில் நுழைய ஸ்தம்பித்துப் போயினர்.

''கடவுளே... என்னக் கொடுமையிது?''

''இவகிட்டே எவஇருப்பா? என்ன கொடுமைப் பண்ணாளோ?''

''செய்யறதையெல்லாம் செஞ்சிட்டு தைரியமா நம்மகிட்டேயே சொல்றவனாச்சே?''

''கல்யாணமாகி ரொம்ப நாளாய்டுச்சு இன்னும் கர்ப்பமாகலே ரெண்டாங்கல்யாணம் பண்ண பொண்ணு பார்த்துட்டு இருந்தாளே அதான் மனசுத் தாங்காம தொங்கிட்டிருக்கா''

வந்தவர்கள் ஆளாளுக்கு தங்களுக்குள் கிசு கிசுக்க

''ஐயோ... யாராவது என் மருமகளை கீழே இறங்குங்களேன். அவ செத்திருக்கமாட்டா டாக்டர் கிட்டே கூட்டிட்டுப் போகணும் இறங்குங்களேன்!''

''நாக்கு வெளியேத் தள்ளியிருக்கு செத்து ரொம்ப நேரம் ஆகுதுப் போல போலீஸ் கேஸு யாராவது தொட்டுடப் போறீங்க போலீஸ்ல போய் சொல்லுங்க யாராவது''

''என்னென்னமோப் பேசறாங்களே என்னப் பண்ணுவேன்? எங்க மாமாட்டம் நிக்கறீங்களே கம்பனுக்கு போன் பண்ணுங்க'' அழுதபடி கணவரிடம்.

அதே நேரம்

வாசலில் பைக்கில் வந்திறங்கிய கம்பன் துணுக்குற்றான்.

அங்கிருந்த அசாதாரண சூழ்நிலை, அம்மாவின் கதறல் சப்தம், வாசலில் திரண்டிருந்த கூட்டம்...

திடுமென மனதில் அதிர்ச்சி அறைய கூட்டத்தை விலக்கிக் கொண்டு உள்ளே ஓடினான்.

சகிக்கக்கூட முடியாத அதிர்ச்சி!

''சைந்தவியா? என் சைந்தவியா இது? ஒரு மணி நேரத்துக்கு முன்னாடி போனில் பேசினாளே அவளா இது? என்னாச்சு சைந்தவி? எம்மா இப்படி என்னைத் தனியா விட்டுட்டுப் போனே? நாக்கால் என் காதை எல்லாம் நக்கி கூச்செரூட்டுவாளே அந்த நாக்கா இப்படி கோரமாய் ஐயோ என்னடி ஆச்சு உனக்கு?''

''கம்பா... பார்த்தியாடா இந்தக் கொடுமையை? எதுக்குடா இவ இப்படிப் பண்ணிக்கிட்டா?'' வடிவு மகனை துக்கம் தாளாமல் கட்டிக் கொண்டு அழ...

''எப்படி நடிக்கிறாப் பார் தற்கொலைப் பண்ணிக்கிற அளவுக்கு தூண்டி விட்டுட்டு... சீ...பொம்பளையா இவ...!''



கம்பனுக்கும் காதில் விழவேச் செய்தது. அம்மாவை விலக்கி விட்டு தேம்பலுடன் கண்களால் அறையைத் துழாவினான்.

டேபிளுக்கு அடியில் முக்கால் பகுதி எரிந்து அணைந்திருந்த பேப்பர்... பட்டது.

''என்ன இது? கடிதமா? என் செல்லத்தின் வாக்குமூலமா? யார் எரித்தது... எழுதியதெல்லாம் எரிந்து... வெற்றுத்தாள் மட்டுமே மிச்சமாய்...''

''என்னடா இது?'' மிரட்சியுடன் கேட்டாள் வடிவு. என்ன எழுதியிருந்தா என் பொண்டாட்டி?''

''எ...என்ன...என்ன உளர்றே கம்பா! நானே இப்பதான்... இதை...''

''ஷ்... விளக்கம் தேவையில்லைம்மா. என் சைந்தவி. என்னை விட்டு ஒரேயடியா போய்ட்ற அளவுக்கு என்னம்மா பண்ணீங்க?''

''டேய்... உன்னை மாதிரி எங்களுக்கும் இது பெரிய அடிதான். அதைப் புரிஞ்சுக்காம ஆத்திரத்துல என்னென்னவோ பேசறியே. நாங்க இப்பதான்டா வெளியே போய்விட்டு வந்தோம். வந்து பார்த்தா இவ இப்படி...''

''வேணாம் பேசாதேய்யா. பொண்டாட்டிக்கு ஜால்ரா போட்றவர் தானேய்யா நீயும். ரெண்டு பேரும் சேர்ந்து என் சைந்தவியை என் கிட்டேர்ந்து பிரிச்சிட்டீங்களே'' அப்பாவை மரியாதை குறைத்து பேசியவன் மடேர், மடேர் என்று தலையில் அடித்துக் கொண்டு அழுதான் கம்பன்.

தாமோதரன் ஸ்தம்பித்துப் போனார்.

''உன் பொண்டாட்டிக்கு நான் என்னடா குறைவச்சேன்? பெத்தப் பொண்ணைப் போலவே பார்த்துக் கிட்டேனே!''

''இல்லேம்மா... என் சைந்தவி ஏன் செத்தான்னு எனக்குப் புரிஞ்சுப் போச்சு நீ எந்தளவுக்கு மோசமாப் பேசியிருப்பேன்னு தெரியும். சொன்னாளே சாகறதுக்கு முன்னாடி என் சைந்தவி போன் பண்ணி சொன்னாளே!'' கதறினான் கம்பன்.

''போ... போன் பண்ணி சொன்னாளா? எ... என்ன சொன்னா?''

''எம்மா... எதிர்பார்க்கலையா? அப்படியே மூடி மறைச்சிடலாம்னு நினைச்சியா? ரொம்ப ஆசை வச்சிருந்தேம்மா அவமேலே என்னை அவக்கிட்டேர்ந்து பிரிச்சிட்டீங்களே? அவ இல்லாம எப்படி நான் இருப்பேன்? நீங்க சாகடிக்கறதுக்கா காதலிச்சு, அவங்க வீட்லேர்ந்து பிரிச்சிக் கூட்டிட்டு வந்தேன்? என்னை நம்பி வந்தாளே... என்னை நம்பிக்கை துரோகியா ஆக்கிட்டீங்களே! பருந்துங்க இருக்கிற இடத்துல பச்சைக்கிளியை கொண்டு வந்து வச்சது என் தப்பு!''

''கம்பா... என் ராஜா... அவசரப்பட்டு தப்புத் தப்பா பேசாதேப்பா தாங்க முடியலேடா நெஞ்செல்லாம் அடைக்குதுடா!'' அவன் கைகளைப் பிடித்துக் கொண்டாள்.

''சீ... கைய விடு போதும் உன்னை நம்பி ஏமாந்ததும், வாழ்ந்த

தும்! ஒரு உயிரோட இழப்போட வலி என்னான்னு தெரியுமா உங்களுக்கு? சைந்தவியை என் நெஞ்சுல சுமந்தேன்... நீ என்னை உன் வயித்துல சுமந்தே... ஆனா, இழப்புன்னு வந்தா எல்லா வலியும் ஒண்ணு தானே? பிரிச்சிட்டியே... எங்களைப் பிரிச்சிட்டியே... கத்திக் கொண்டே வெளியே ஓடினான்.

''ஐயோ... யாராவது அவனுக்கு சொல்லுங்களேன்...என் மருமகளை நான் கொல்லல... அம்மாடி...சைந்தவி.... என் தங்கமே... நானாம்மா உன்னை சாகடிச்சேன்? தெய்வத்துக்கே அடுக்காதே... யார் என் புள்ளைக்கு புரிய வைக்கறது?'' தொங்கிக் கொண்டிருந்த சைந்தவியின் கால்களைப் பற்றிக் கொண்டு ஓவென்று கதறி அழுதாள்.

தாமோதரன் நெஞ்சு வெடிக்க குமுறி அழுதார்.

சிறிது நேரத்தில் போலீஸ் வந்தது. சைந்தவியின் உடலை இறக்கி போஸ்ட் மார்ட்டம் செய்ய ஆம்புலன்ஸில் ஏற்றி அனுப்பிய அடுத்த சில நிமிடங்களில் இன்னொரு மோசமான செய்தி வந்தது.

ரெயில்வே ட்ராக்கில் விழுந்து தற்கொலை செய்துக் கொண்டான். கம்பன். தலையும், உடலும் வேறு வேறாய்க் கிடந்தன.

பெற்றவர்கள் மயக்கத்திற்குப் போயினர்.

மயக்கம் தெளிந்தபின், மருமகளை தற்கொலைக்குத் தூண்டியதாக வடிவையும், தாமோரதனையும் ஜீப்பில் ஏற்றினர்.

அதற்கு வடிவைப் பற்றி தெருவாசிகள் சொன்ன வாக்குமூலம் அவளுக்கு எதிராய் இருந்ததும் ஒரு முக்கியக் காரணம்!

## 11

**கை**யால் வீசி எறியப்பட்டதை மீண்டும் ஒருவன் காலால் தான் தேடிக் கண்டுபிடிக்க வேண்டும்.

வடிவு வீண் ஜம்பத்திற்காக தன்னை அல்லி ராணிபோல், பெண் ஹிட்லரைப் போல் பெருமையாய் உருவகப்படுத்தி, பேசி மற்றவர்களை நம்ப வைத்தது பூமராங் மாதிரி அவளுக்கே திரும்பி விட்டது. தன் நிஜமான கேரக்டரை எங்கோ மறைத்துவைத்து விட்டாள். அதை அவளால் தேடத்தான் முடியுமா, மீட்கத்தான் முடியுமா?

அவளின் தாய்மை குணத்தை ருசித்து உணர்ந்தவள் சைந்தவி மட்டும் தானே? அவளா வந்து சொல்லப் போகிறாள். 'மாமியாரின் ஏமாற்றத்தை தாங்கிக் கொள்ள மனமின்றியே தற்கொலை செய்ததை?''

அதுவரை நல்ல தாயாக பரிணமிக்கும் பல பெண்மணிகள், வீட்டிற்குள் மருமகள் என்று ஒருத்தி வந்ததும், தன்னைச் சுற்றி கடுமையான ஒரு திரையை அணிந்து கொள்வது தான் புரியாத புதிராக இருக்கிறது. மாமியார் என்கிற பெரிய ஜாம்பவான்களோடு மோதும் திறனின்றி அல்லது பயந்தே பல பெண்கள் தனிக்குடித்தனம் போய் விடுகின்றனர். இந்தியாவின் தனிச் சிறப்பான அடையாளமான கூட்டுக்



குடும்பம் சிதைந்து வருவதற்கு இது மாதிரியான கண்ணாமூச்சி விளையாட்டும் ஒரு காரணம் தான். மருமகள் தனக்கு இன்னொரு மகள் என்று நினைத்தாலே போதும்... தான் பெற்ற தாயை விட மேலாய் கண் இமைக்குள் வைத்து தாங்கமாட்டார்களா என்ன?

வீண் பழி, இரண்டு மரணங்கள், வடிவை வெகுவாய் பாதித்தது. அவளை விட தாமோதரனின் நிலைமை இன்னும் மோசம்.

பிள்ளைப் பூச்சி, இருக்கிற இடமே தெரியாது. கூச்ச சுபாவம் வேறு! அவர் அதிகப்படியாய் பேசிய வார்த்தையே, கம்பன் சைந்தவியோடு திருமணம் செய்து கொண்டு வந்த போது எதிர்த்து பேசியது தான்.

ஓரிடத்தில் சண்டை என்றால், வேறு வழியாய் சுற்றிக் கொண்டு போவார். சொந்தக் காரர் வீட்டில் காபி சாப்பிடக் கூட தயங்கும் குணம். அப்படிப் பட்டவரை போலீசார் மரியாதைக் குறைவாய் பேசி இழுத்து ஜீப்பில் தள்ளிவிட்ட போதே பாதி உயிர் போய்விட்டது அவருக்கு.

''இல்லை சார்... எங்களுக்கு எதுவும் தெரியாது சார்... சொந்தப் பொண்ணு மாதிரி பார்த்துக் கிட்டோம் சார்... நாங்க மரியாதையான குடும்பத்தை சேர்ந்தவங்க சார்... எங்களை விட்ருங்க...''

''என்னடா பெரிய மரியாதை? அதான் உன் புள்ளையே சொல்லி விட்டு செத்துப் போயிருக்கானே... அந்தப் பொண்ணு செத்துக்கு நீயும், இவளும் தான் காரணம்னு. என்னடாபண்ணே மருமகளை! தப்பா நடந்துக்கப் பார்த்தியா?''

''ஐயோ கடவுளே... அநியாயமாப் பேசாதேய்யா... நல்லாயிருக்க மாட்டீங்க?''

''என்ன சாபம் விடறியா? ஏறுடா... ஏறுடான்னா...'' தாமோதரனின் சட்டையை கொத்தாய் பற்றி ஜீப்பில் தள்ளி விட்டதில் பல் பல் பொத்தி, உதடில் ரத்தம் பொங்கியது.



''ஏண்டா படுபாவிங்களா வயசான வரை போட்டு கொடுமை பண்றீங்க? ரெண்டு ஜீவன்களை இழந்த வேதனை பத்தாதா...தீர விசாரிச்சிட்டு பேசுங்க சட்டம் உங்க கையிலே இருந்தா என்ன வேணும் னாலும் பண்ணுவீங்களா?''

''என்னடி நீலிக்கண்ணீர் வடிக்கிறியா? நடிக்கிறியா? உன்னைப் பத்தி தாண்டி தெருவில் கதை கதையா சொல்றாங்க... எப்படியாவலே அலறுவாளாமே மருமக. என்னப் பண்ணே சொல்லு!''

''நான் சொன்னதெல்லாம் பொய்ங்க. நான் அப்படிப்பட்டவ இல்லே...''

''அடடா... அப்படியா?'' என்று கிண்டலாய் கேட்ட இன்ஸ்பெக்டர், ''சரி சொல்லு... எரிச்சியே... அந்த லெட்டர்ல என்ன எழுதியிருந்தா அந்தப் பொண்ணு!''

''எனக்கொன்னும் தெரியலியே...!''

பளாரென அறை விழுந்தது வடிவுக்கு.

கிறுகிறுத்துப் போனாள். தாமோதரன் கூட, இத்தனை வருட தாம்பத்ய வாழ்க்கையில், அவள் வருத்தமேற்பட்டால், சிலமணிநேரம் பேசுவதை தவிர்ப்பாரே ஒழிய கை நீட்டி அடித்ததில்லை.

ஜனங்கள் மத்தியில் அந்த இன்ஸ்பெக்டர் கை நீட்டி அடித்ததில் அவமானத்தில் உயிரும், உணர்வும் குன்றத் தலைகவிழ்ந்து கண்ணீர் பொங்கினாள்.

''உன்னை இப்படியெல்லாம் கேட்டா சொல்ல மாட்டே! ஸ்டேஷனுக்கு வா! லேடி கான்ஸ்டபிள்ஸ் உன் உடம்புல பொட்டுத் துணியில்லாம உருவிட்டு அடிப்பாங்க பார் அப்ப வரும் உண்மை ஏறுடி ஏறுடின்னா...!''

பேரக்குழந்தைக்காக அதீதமான எதிர்பார்ப்புகளையும், ஆசைகளையும் நெஞ்சில் சுமந்ததன் காரணமாகவே... அந்த வயதான குழந்தைகள் ஏகப்பட்ட பழியை சுமந்து சென்றன.

தெருவாசிகள், யாருமே பரிதாபப்படவில்லை.

''பாவி ஒழிஞ்சா என்ன திமிரா பேசிக்கிட்டு திரிஞ்சா கடவுள் தக்க கூலியைக் கொடுத்துட்டான்.

''அந்தப் பொண்ணு இருக்கற இடமே தெரியாது. அவ்ளோ அடக்கம். அப்படிப்பட்டவளை இல்லாமலே பண்ணிட்டானே!''

''பாவம் கம்பன். அம்மாவை ரொம்ப நம்பினான். அதனால பாரு ஆசைப்பட்டு கட்டிக்கிட்ட பொண்ணையும் இழந்தான். தன் உயிரையும் இழந்தான்''

''இவங்களை எல்லாம் சும்மா விடக்கூடாது. பொட்டைப் புள்ளைங்களை பெத்து வளர்த்து ஆளாக்கி ஒரு இடத்துல கட்டிக் குடுத்திருந்தா... கொஞ்சமாவது அந்த அருமை தெரியும். ரெண்டு பேரையும் தூக்குல போடணும்''

ஸ்டேஷனிலும் கேவலமாய் நடத்தப்பட்டார்கள். அடிக்கப்பட்டார்கள். உயிர்களை இழந்த வலியைவிட, கவுரவத்தை இழந்த



வலியை விட இந்த வலி பெரிதாய் இருக்கவில்லை.

கண்கள் மட்டும் கண்ணீர் உகுத்துக் கொண்டே இருந்தன.

கண்ணீர் ஒரு மொழி. யார் அழுகிறாரோ அவர் மட்டுமே அதைப் புரிந்து கொள்ள முடியும்.

போஸ்ட் மார்ட்டம் ரிப்போர்ட் தற்கொலைதான் என்று சொன்னது.

மருமகள் கர்ப்பமாய் இருந்தாள் என்றும், அவளுக்காக தாங்கள் உள்ளங்கையில் தாங்கியதையும், அன்று கூட அவளுக்காகவே கோவிலுக்குச் சென்றதையும் சொன்னதை யாரும் நம்பத் தயாராய் இல்லை.

சைந்தவி கர்ப்பமாகவே இல்லை. சாகும்போது கூட மாதாந்திர பிரச்சனையோடுதான் இருந்திருக்கிறாள். அவர்கள் கோவிலுக்குச் சென்றதை பார்த்த சாட்சி யாரும் இல்லை. அர்ச்சனைப் பொருட்கள் காணாமல் போனதை சொன்னதும் கூட அதீத கற்பனையாய் எடுத்துக் கொள்ள வேண்டியதாயிற்று. குழந்தைப்பேறு இல்லாத காரணத்தால் கொடுமையாய் பேசி தற்கொலைக்குத் தூண்டியதாய் வழக்குப் பதிவாயிற்று. சைந்தவி எழுதி வைத்த கடித வாக்குமூலத்தை அழித்ததற்கும் தனி கேஸ் பதிவானது.

உதயா அலறி அடித்துக் கொண்டு வந்தான். பணபலமோ, பக்குவமோ இல்லாத அவனால் பெற்றோரை காப்பாற்ற முடியவில்லை.

அண்ணனின் வாக்குமூலம், தெருவாசிகளின் வாக்குமூலம், எரிந்த கடிதம், எல்லாமே இவர்களுக்கு எதிராய், ஸ்ட்ராங்காய் இருந்ததால் ஜெயிலில் தள்ளப்பட்டனர்.

ஏழுவருட தண்டனை!

தெரு, மார்க்கெட், குடும்பம் என்றிருந்த வடிவு பயந்து போனாள். ஒடிந்து போனாள்.

தாமோதரன் நெடு நெடுவான நல்ல உயரம். நிறமும் கூட! அவரின் முன்னோர்கள் கவுரவமான பதவி வகித்தவர்கள். மாஜிஸ்ட்ரேட், தாசில்தார், கவுன்சிலர் என்று பெருமை பெற்றவர்கள். அந்த கம்பீரம் தாமோதரனிடம் நிறைய உண்டு. மடிப்புக்கலையாத உடை உடுத்தியே பழகியவர், சிறைவாசியாய்... துடித்துப் போனார்.

மனிதனுக்கு கவுரவம் தானே முதல் சொத்து. அது கைவிட்டுப் போனாலே பாதி பிணம் தானே!

நடந்து முடிந்த சம்பவங்கள் ஊசியாய் குத்தின. ஸ்லோ பாய்ஸனாய் கொன்றன.

ஏழே நாட்கள் தான் அவர் சிறையில் இருந்தார்.

எட்டாவது நாள்! கடுமையான நெஞ்சு வலி வந்து அரசாங்க ஆஸ்பத்திரிக்கு ஏற்றிச் செல்லும் வழியில்... உயிர் பிரிந்து விட்டது.

அந்த மட்டிலும் அவர் ஆத்மா சாந்தி அடைந்திருக்கும். அவர் கவுரவமாய் அடைகாத்து வைத்திருந்த உயிர் சிறையில் பிரியவில்லையே!

வடிவிற்கு தான் அடி மேல் அடி!

இறுகிப் போனான்!

உதயன் மாதமிருமுறை அம்மாவை வந்து பார்த்து செல்வான்.

கோவையில் படிப்பு முடிந்த பின் சென்னையில் படித்தான்.

அம்மாவின் நகைகளும், அண்ணன் அவன் படிப்பிற்கான வங்கியில் போட்டிருந்த பணமும் சிரமமின்றி படிப்பைத் தொடர முடிந்தது.

ஒரு நல்ல வேலை கிடைத்தது, கை நிறைய சம்பளத்தில்!

வேலைப் பளு முன்பு போல் அடிக்கடி அம்மாவைப் பார்க்க முடியவில்லை. சில சமயம் இரண்டு மாதம், மூன்று மாதம் கூட இடைவெளி விழ வடிவு தான் சமாதானப் படுத்தினாள்.

''பரவாயில்லே உதயா இதிலே சங்கடப்பட என்ன இருக்கு? வேலை முக்கியம். அம்மா எங்கே போயிடப்போறேன்!'' என்று.

ஏழுவருட தண்டனை முடிந்து ஒரு மாதத்துக்கு முன்னதாகவே விடுதலை அளிக்கப்பட்டு அனுப்பப்பட்டாள் வடிவு!

பழைய நினைவுகள் கண்ணீரில் கரைந்தாலும்... நெஞ்சில் இன்னும் பாறாங்கல்லாய் வேதனை அடைத்துக் கொண்டு தான் இருந்தது.

''என் மேல எந்தத் தப்பும் இல்லை கம்பா. சைந்தவி சாவுக்கும் எனக்கும் எந்த சம்பந்தமுமில்லை. பாவிப் பொண்ணு ஏன் செத்தான்னு கூட எனக்கு இன்னைக்கு வரைக்கும் தெரியலேப்பா. ஊரும் உலகமும், பழிகாரின்னு சொன்னதும் கூட வலிக்கலே ராஜா என்னை கொலைகாரின்னு நீ சொல்லிட்டியே அதுதாம்பா வதைக்குது. எத்தனை ஜென்மம் எடுத்தாலும் மாறுமா இந்த வலி? அம்மாவைத் தப்பாவே புரிஞ்சுக்கிட்டு உன் உயிரையும் விட்டுட்டியே என் கம்பா எனக்கு இவ்வளவு பெரிய தண்டனை!'' என் சேரில் முட்டி முட்டி அழுது கொண்டிருந்தவளின் தோளில் ஆறுதலாய் கைவைத்தான் உதயா.

''அம்மா... இத்தனை வருஷமா நீ ரொம்பவே அழுதுட்டே போதும்மா எல்லாத்தையும் மறந்துட்டு இயல்புக்கு வா!''

''எ... என்னை நீ நம்பறே தானே உதயா?''

''உன்னை நம்பாம யாரைம்மா நம்பப் போறேன்? வா ரெண்டு பேரும் சாப்பிடலாம்!'' கைத்தாங்கலாய் அம்மாவைத் தூக்கினான்.

## 12

**நா**ட்கள் சில கடக்கின்றன.

ஆரம்பத்தில் வடிவு, மார்க்கெட், மளிகை கடை, கோவில் என்று வெளியில் சென்றாள்.

ஒரு வாரம் தான்! அதன் பிறகு வீட்டோடு அடைந்து கிடந்தாள். அவசியமாய் ஏதும் தேவைப்பட்டால், இருட்டிய பிறகே வெளியில் சென்றாள்.



உதயன் கவனித்தான்.

''எம்மா... வீட்லேயே அடைஞ்சு கிடக்கிறே? நாலு இடம் போயிட்டு வந்தா உனக்கும் பொழுது போகுமில்லையா?''

''அதனால என்ன உதயா... எனக் கொண்ணும் போர் அடிக்கல்ப்பா...!''

இதைவே பல நாட்கள் வற்புறுத்திய பிறகு வடிவு மனம் வெதும்பிச் சொன்னாள்.




''நான் மறக்க நினைச்சாலும், இந்த ஜனங்க மறக்க விடமாட்டேங்கறாங்க உதயா, தெருவில் என் தலையக் கண்டாலே, எங்கே நான் அவங்கிட்டே பேசிடுவேனோன்னு பயந்து, உள்ளே போயிடறாங்க. கோவிலுக்கோ, மார்க்கெட்டுக்கோ போனா, என்னைப் பார்க்காத மாதிரி, என்னைப் பத்தி மட்டமாய் பேசறாங்கப்பா, நான் செய்யாத தப்புக்கு இன்னும் எத்தனை காலத்துக்கு தண்டனை அனுபவிக்கணும் உதயா''.

உதயன் எதிர்பார்த்ததுதான் ஆனால், அது இத்தனை வீரியமாய் இருக்கும் என்று நினைக்க வில்லை.

''அம்மா... நான் ஒண்ணு சொன்னாக் கேப்பியா?''

''சொல்லுப்பா..!''

''இந்த வீட்டை வித்துட்டு, வேறெங்கேயாவது ஒரு ஃப்ளாட் வாங்கி குடிபோயிடலாம்மா!''

''எ... என்னப்பா சொல்றே? இந்த வீட்டை விக்கறதா? நீ தெளிவாத்தான் பேசறியா?''

''ரொம்பத் தெளிவாத்தாம்மா இருக்கேன்''

''அப்புறம் எப்படிப்பா இந்த வீட்டை விக்கலாம்னு சொல்றே? நீங்கள்லாம் பிறந்து வளர்ந்த வீடு, கம்பன், அப்பான்னு நினைவுகளை சுமந்த வீடு,

''மனசை ரம்பமா அறுக்கிற மூணு உயிர்கள் இல்லாத வீடும் இதுதாம்மா! நல்ல நினைவுகளை எல்லாம் உதிர்த்து விட்டு, வேதனைகளை மட்டுமே சுமந்திட்டிருக்கிற பட்டமரமா நிக்கற வீடு. உன்னையும், என்னையும் அணு அணுவா கொல்ற நினைவுகள் தாம்மா இங்கே குமிஞ்சுக் கிடக்குது. அதோ அதோ அந்த ரூம்லதான் அண்ணி தூக்கிலத் தொங்கினாங்க. ரெண்டா துண்டாகிப் போன அண்ணனை

டெத்தி வச்சதும் இந்த வாசல்லதான். அப்பாவை ஜெயில் லேர்ந்து பிணமாக கொண்டு வந்து படுக்க வச்சதும் இந்த வாசல்லதாம்மா. இருக்கிற மிச்ச காலத்தை நீ சந்தோஷமா இல்லேன்னாலும் நிம்மதியாகவாவது வாழ்ந்து முடிக்கணும்னா... இந்த வீட்டைத் தலை முழுகியே ஆகணும். எனக்கு நீ வேணும்மா! உன்னையும் இழந்து அனாதையாக நான் விரும்பலேம்மா... ப்ளீஸ்!''

வடிவு அரைமனதாய் தலையாட்டி தன் சம்மதத்தை தெரிவித்தாள்.

பத்தே நாளில் அந்த வீட்டை வந்த விலைக்கு விற்று ராயப்பேட்டை பக்கமாய் ஒரு வீட்டை விலைக்கு வாங்கி குடியேறினார்கள்.

கொஞ்சம் சகஜ நிலைமைக்கு திரும்புகிறாள் வடிவு. ஆனாலும், அக்கம் பக்கத்தில் யாரிடமும் பேசுவதில்லை.

இரண்டு பெட்ரூம் கொண்ட தாராளமான வீடு, பெரிய ஹால், கிச்சன் பாத்ரூம், தாழ்வாரம் என்று விசாலமாய் இருந்தது. இரண்டு பேர்களுக்கு அது ரொம்ப... ரொம்ப அதிகம்! உதயன் அலுவலகம் சென்ற பிறகு தனிமை அவளை ரொம்பவே பாதித்தது. தயங்கித் தயங்கி மகனிடம் ஒரு வேண்டுகோள் வைத்தாள் வடிவு.

''உதயா...

என்னம்மா...?

''நான் ஒண்ணு சொன்னா கோபப்பட மாட்டியே!''

''நான் எம்மா கோபப்படப் போறேன். சொல்லு!''

''உனக்கும் வயசாகுது...''

''எனக்கும் வயசாகுது...''

''ம்...''

''உனக்கு ஒரு கல்யாணம் பண்ணி வச்சிட்டா நிம்மதியா மூச்சு விடுவேன் இந்த வீட்டுக்கும் மருமகள் ஒருத்தி வந்தாதான் நிறைவா இருக்கும். என்னப்பா சொல்றே?''

என்ன சொல்லுவான்? அம்மா இந்தப் பேச்சை எப்போதடா எடுப்பாள் என்று காத்திருந்ததையா? ஏழு வருடமாய் மரணங்கள், ஜெயில், விடுதலை, அம்மாவின் அழுகை, மோசமான பழைய நினைவுகள் என்று அவன் வாழ்க்கைப் பயணமே இயந்திரமாய், வேறு எதிலும் மனதை திசைதிருப்பமுடியாமல் இறுக்கமாய் மாறிப் போனான். தனக்கென தனிப்பட்ட ஒரு வாழ்க்கை தனக்கென ஆறுதல் சொல்ல.. நெருக்கமான ஸ்பரிசம் என்று ஏக்கம் எட்டிப்பார்க்கவே செய்தது. அலுவலகம் விட்டால் வீடு, சோகமான அம்மா. எதைப் பேசினாலும் பழைய சம்பவங்களின் நினைவில் கொண்டு போய் நிறுத்தி தூக்கம் பறிபோக வைத்தது வாடிக்கையாயிற்று. அதற்கு சிறந்த மாற்று... தனக்கொரு கல்யாணம் என்பதைத் தவிர வேறென்ன?

''என்ன உதயா அமைதியா இருக்கே?''



''சரிம்மா... நீ சொல்றதும் சரிதான். உனக்கும் பேச்சுத் துணைக்கு ஒரு ஆள் வேணுமே! நீயே பார்த்து யார் கழுத்துல பட்டுச் சொன்னாலும் தாலிக் கட்டுகவேன். போதுமா?''

இது போதும்ப்பா!''

உற்சாகமான வடிவு... மறுநாளே காரியத்தில் இறங்கினாள். உதயனின் ஜாதகத்தை கோவிலில் வைத்து பூஜித்து தரகரிடம் கொடுத்தாள்.

உதயனின் படிப்பு, வேலை, சம்பத்தப்பட்ட ஏகப்பட்ட வரன்கள் வந்தன.

ஆனால், வடிவைப் பற்றி கேள்விப்பட்டு கடைசி நேரத்தில் பெண் தர மறுத்தார்கள். ஒருவர், இருவர் அல்ல பத்து வரன்களாவது இப்படியே தட்டிக் கழிக்க... வடிவு பயந்து போனாள்.

தரகர் ஒருமுறை உதயனிடம் தனியாக ''ரொம்ப விசித்திரமாகிருக்குத் தம்பி. பையன் நடத்தை சரியில்லை. கெட்டப்பழக்கம் எக்கச்சக்கமாயிருக்கு, வரதட்சணை அதிகமாக கேக்கறாங்க, தனிக்குடித்தனம் வர்றதாயிருந்தா சரின்னுதான் எல்லாரும் அவாய்ட் பண்றதுக்கு காரணம் சொல்றாங்க. ஆனா, வரதட்சணையோ, நகையோ, சீரோ எதுவுமே வேண்டாம்னு பெருந்தன்மையா நீங்க சொன்னாலும், அந்தப் பொம்பளையோட புள்ளைக்கா... வேண்டவே வேண்டாம் சாமிங்கறாங்க என்னமோப்பா ''என்றார் வருத்தத்துடன்.

உதயனுக்கும் லேசாய் சலிப்பும், எரிச்சலும் ஏற்பட்டது. ஆனாலும் வெளிப்படுத்திக் கொள்ளவில்லை.

''எம்மா... இப்படியொரு வேண்டுதல், முன்னே மாதிரி ஆரோக்கியமா இல்லையேம்மா நீ! எதுக்காக கீழ் திருப்பதியிலேர்ந்து திருமலை வரை நடந்தே வர்றேன்னு வேண்டிக்கிட்டே?''

''திருப்பதிக்குப் போனா திருப்பம் வரும்னு நம்பறேன் உதயா. அந்தப் பெருமாள் என் மனபாரத்தை எல்லாம் கண்டிப்பா இறக்கி வைப்பார். இந்த வீட்டுக்கு ஒரு மகாலட்சுமிய கூடிய சீக்கிரமே அனுப்பி வைப்பார். நீ வேணாப்பாரேன்...!

என்றவள், சொன்னது போலவே நடந்தே மலை ஏறினாள். மொட்டையடித்துக் கொண்டாள்.

காட்டாற்று வெள்ளமாய் பொங்கிய அன்பை எல்லாம் அவனிடம் கொட்டினாள். அவனுக்காக பார்த்து பார்த்து சமைத்தாள்.

அவனுக்கு எதெல்லாம் பிடிக்குமோ... அதை எல்லாம் சமைத்தாள்.

அவனேக் கூட சில சமயங்களில், அன்னைக்கு சமைச்சியே சிக்கன் பிரேவி... நாளை காலையில் சமைச்சிடு. இட்லி, தோசை இல்லை சப்பாத்தி இருக்கட்டும்! என்பான். இதற்காகவே அதிகாலையில் எழுந்து ஜாபர்கான் பேட்டைக்கு ஓடுவாள். அங்கேதான் நல்ல சிக்கன் கிடைக்குமாம். உதயன் ஏழு, ஏழரைக்கெல்லாம், அலுவலகம் புறப்பட்டு விடுவான் என்பதால் சீக்கிரமே சமைப்பாள்.

ஆவலாய், ரசித்து, ருசித்து சாப்பிடுவான்.

''உன் கைப்பக்குவமே தனிம்மா. விதவிதமா சமைக்கிறே, வித்தியாசமா சமைக்கிறே, ஹோட்டல்ல கூட இந்தளவு வெரைட்டியா, டேஸ்டியா சாப்பிட முடியாதும்மா!'' என்று உச்சிக் குளிர வைப்பான்.

அந்த பாராட்டுதலுக்காகவே, அவளாகவே புதுவிதமாய் முயற்சித்து சமைப்பாள். அதனால் கொஞ்சம் பழைய வலிகளை நினைக்காமலிருக்க முடிந்தது.

அன்றும் அப்படித்தான்,

கேரட், வெங்காயம் புதினா, பச்சை மிளகாய், சாம்பார் பொடி எல்லாம் போட்டு பிசைந்து அற்புதமாய் சப்பாத்தி பண்ணி ஹாட் பேகில் வைத்து மகனுக்காகக் காத்திருந்தாள்.

எப்போதுமே, ஏழு மணிக்கெல்லாம் வந்து விடும் உதயா... அன்று அலுவலகத்தில் ஒரு பிரச்சனை காரணமாக பதினோரு மணிக்கு தான் வந்தான். அன்றைக்குப் பார்த்து ஒரு முக்கியமான அலுவல் மீட்டிங்... அங்கேயே டின்னரையும் முடித்துக் கொண்டுதான் வந்திருந்தான்.

''என்னப்பா லேட்டு?''

''லேட்டாயிடுச்சும்மா!'' என்றான் லுங்கிக்கு மாறி.

''சாப்பிட்டுக்க.. எடுத்து வச்சிருக்கேன்''

''வேணாம்மா... சாப்பிட்டாச்சு''

''என்னப்பா நீ? உனக்காக அருமையா வெஜிடபிள் சாப்பாத்தியும், தக்காளி தொக்கும் சமைச்சு வச்சிருக்கேன்... நீ சாப்பிட்டு வந்துட்டேங்கறே!''

''அப்படியா... ஸாரிம்மா!''

''சரி... கொஞ்சமாவது சாப்பிடேன். உனக்காக சமைச்சேன். என் திருப்திக்காக சாப்பிடேன்!''

''அம்மா... ஒரு முறை சொன்னாப் புரியாதா?''

''ஒன்னேன் ஒன்னு!''

''ஐயோ... ஏன் என் உயிரை வாங்கறே? அதான் பேசிப் பேசியே எல்லாரையும் சாகடிச்சிட்டியே...

இன்னுமா அடங்கலே? வேண்டாம்னா விடேன்!

ஒரு மனுஷன் எவ்வளவு தான் சாப்பிட முடியும்? வயித்தைக் கிழிச்சிக் கொட்டிக்கவா? போம்மா... பேசாம...! எரிந்து விழுந்தான்.

''ஸ்வீட் கடைக்காரர்' ஒரு பையனைத் தன் வளர்ப்பு மகனாக தத்து எடுத்துள்ளார்...''

''அப்ப அவன் 'சுவீட் காரப் பிள்ளை' ன்னு சொல்லு!''

- அரவக்குறிச்சிப்பட்டி,
எம்.அசோக்ராஜா.





உதயன் இம்மாதிரிப் பேசிக் கேட்டறியாத வடிவு... ஆடிப்போனாள்.

## 13

தனிமையில் வடிவு தாங்க மாட்டாமல் அழுதாள்.

'என்ன சொல்லிட்டேன்னு இப்படி பேசறான்? இவனும் என்னை வெறுத்துடுவானோ? என் அதிகப்படியான அன்பு சலிப்பை ஏற்படுத்தி விட்டதா? இவனை விட்டால் எனக்கு யார் இருக்கிறார்கள்?'

யோசித்து யோசித்து தன்னை சமாதானப்படுத்திக் கொண்டாள்.

விடிந்தபோது பக்குவமாய் நடந்துக் கொண்டாள். ''உதயா, டீ போடவா? காபி போடவா?'' எப்போதும் அவனாகவே ஏதாவதொன்றை போட்டுக் கொண்டு வந்து தருவது வழக்கம். அன்று புதிதாய் அப்படிக் கேட்டது உதயனுக்கு சுருக்கென்று தைத்தது.

''எதுவாயிருந்தாலும் சரிதான்ம்மா!''

''டிபன் செய்யணுமா, இல்லே வெளியிலே...''

''செய்ம்மா!''

அமைதியாய் சாப்பிட்டுக் கிளம்பிய மகனின் கையைப் பற்றிக் கொண்டாள்.

''என்னை மன்னிச்சிடுப்பா''

''ஐயோ... என்னம்மா பெரிய வார்த்தையெல்லாம் பேசறே?''

''இல்லேப்பா... தப்பேயில்லே... பாவம். பெரிய ஆபிஸில, பெரிய பொறுப்புல இருக்கே. எவ்வளவு பிரச்சனையை சமாளிக்கணும். ஒருநாள் போல ஒருநாள் இருக்குமா? நான்தான் பார்த்து நடந்துக்கணும். வயசாகுதுல்லியா. இங்கிதம் தெரியல உதயா! நீ எதையும் மனசுல வச்சுக்காதே ராஜா. வண்டியில போற புள்ள பலதையும் யோசிச்சிட்டுப் போகக்கூடாது.''

''ஸாரிம்மா... நான் தான் தப்பு பண்ணிட்டேன். டென்ஷன்ல உன்னை பேசக்கூடாததை பேசிட்டேன்.''

''நீ அப்படியெல்லாம் பேசக்கூடிய பிள்ளை இல்லையே! நான் அப்படி பேச வச்சிட்டேன். அதை அப்பவே மறந்துட்டேன்ப்பா! என் பிள்ளைக்கு என்னைக் கடிந்து பேச உரிமையில்லையா என்ன?''

''இல்லேம்மா... நான் பேசினது தப்பு தான். இனி அப்படி பேச மாட்டேன். எனக்கும் உன்னை விட்டா வேற யாரும்மா இருக்கா? தயவுப்பண்ணி மனசுல வச்சுக்காதேம்மா ப்ளீஸ்...''

''நான் தான் சொல்லிட்டேனே... அதையெல்லாம் அப்பவே மறந்துட்டேன்னு. சந்தோஷமா கிளம்பு!'' என்று மகனை வழியனுப்பி வைத்தாள்.

சல்லடைப் போட்டு தேடியதில் ஒரு வரன் தகைந்தது.

வசதி குறைச்சல் தான்! பேர் சித்ராங்கி. பெயருக்கேற்ற அழகி.



ப்ளஸ்டூ வரை படித்திருக்கிறாள். அதற்கு மேல் படிக்க பொருளாதாரம் இடம் தரவில்லை. அம்மா, அப்பா இல்லை. அண்ணனும், இரண்டு அக்காக்களும் தான். இரண்டு தங்கைகளை கஷ்டப்பட்டு, கடன்பட்டு கல்யாணம் பண்ணிக் கொடுத்த அண்ணன் ரகுபதிக்கு நாற்பது வயதில் தான் திருமணமானது. பொறுப்பும், அக்கறையும் கொண்ட நல்ல மனிதர். இப்போது நாற்பத்தைந்து வயதாகிறது.




நான்கு வயதில் பெண் குழந்தை இருக்கிறது. வாய்த்த மனைவியும் நெஞ்சில் ஈரமுள்ள குணவதியாக இருந்ததில், சித்ராங்கி நிம்மதியாய் இருந்தாள்.

அருமையான வரன். ஆனால் ஜெயிலுக்குச் சென்று வந்த கொடூரமான மாமியார் என்றதும் சித்ராங்கி பின்வாங்கினாள்.

''வேண்டாம்ணே... அந்தம்மாவைப் பத்தி பத்திரிகையில பக்கம் பக்கமாப் போட்டிருந்தாங்களே. பயமாயிருக்குண்ணே!''

''அம்மாடி... இதிலே பயப்பட என்ன இருக்கு. சூடுபட்ட பூனை, ஒதுங்கித்தாம்மா போகும். மாப்பிள்ளைக்கு நல்ல வேலை, கை நிறைய சம்பளம். சொந்தமா வீடு பார்க்கவும், பாந்தமா இருக்கிறார். நாம நினைச்சேப் பார்க்க முடியாத பெரிய இடம். உனக்காக நான் இத்தனை வருஷமா சிறுக சிறுக சேர்த்து வச்சது வெறும் அஞ்சு பவுன் தான். ஆனா, அந்தப்பவுனை மாப்பிள்ளையால தன் ஒரு மாச சம்பளத்துல வாங்கிட முடியும். இதோ பாரும்மா, இதை விட அருமையான மாப்பிள்ளையை என்னால அடுத்த ஜென்மத்துல கூட பார்க்க முடியாது. இப்ப என்ன அந்தம்மா நல்லபடி நடந்தா சேர்ந்து வாழு. இல்லையா, தனிக்குடித்தனம் போயிடு. அம்மா குணம் நல்லா தெரிஞ்சவர். நீ எடுத்துச் சொன்னா புரிஞ்சுப்பார். தினமும் சித்ராங்கிக்கு அண்ணனும், அண்ணியும் உபதேசிக்க ஒரு வாரம் எடுத்துக் கொண்டாள் சம்மதிக்க. அதுவும் பயத்தோடு.

★★★

திருமணம் எளிமையாய் வடிவுடையம்மன் கோவிலில் நடைபெற்றது. ஸ்ரீலேகா ஓட்டலில் விமரிசையாய் ரிஷப்சன்.

ஜோடிப்பொருத்தம் அமர்க்களமாய் இருந்தது. வடிவைத்தான்

கையில் பிடிக்க முடியவில்லை. ரொம்ப வருஷம் கழிச்சி இப்ப தான்யா சந்தோஷமா இருக்கேன். பொண்ணு சித்திரம் மாதிரி அழகா இருக்கா. இந்த வீட்டுக்கு மகாலட்சுமி வந்துட்டா. இனி நிம்மதியா காலை நீட்டி உட்காருவேன். தூங்குவேன். எனக்கு ஓய்வு வேணும் போல் இருக்குய்யா என்றாள் மகனிடம்.

ஆமாம்மா நீ ரொம்பவே ஓய்ஞ்சுப்போயிட்டே. நிம்மதியா ரெஸ்ட் எடும்மா.

நடிகையைப்போன்ற நளினமான உடலமைப்பு சித்ராங்கிக்கு. அழகும், நிறமுமாய்... உதயன் அவளுடன் நடக்கும் போது பெருமிதமாய் உணர்ந்தான். புது மனைவி மீது காதலும், ஆசையுமாய் வளைய வந்தான். இருபது நாள் ஹனிமூன் டிரிப் போய் வந்தான். சமையலிலும் எக்ஸ்பட்டாய் இருந்தாள். வடிவு தன் பங்கிற்கு மகனுக்கு என்னவெல்லாம் பிடிக்கும் என்பதை விளக்கிக் கூறினாள்.

என்றாலும் புதுமனைவியின் சமையலை ருசித்துச் சாப்பிட்ட உதயன் எனது அம்மாவையே தூக்கிச்சாப்பிட்டுட்ட சித்ரா. உனக்கு இண்ட்ரஸ்ட் இருந்தா சொல்லு. ரெஸ்டாரண்ட் வச்சித்தாரேன். பாத்துக்கிரியா.

உன் கைப்பக்குவத்துக்கு கூட்டம் அள்ளும் என்றான்.

ம்ஹூம்... எனக்கு அதெல்லாம் சரிப்பட்டு வராது. உங்களை நல்லா பார்த்துக்கிட்டாலே போதும் எனக்கு.

அவ்ளோ பாசமா என்மேல?

பின்ன. எதேச்சையாய் வடிவின் காதில் இந்த பேச்சு விழ இதயம் கருங்கியது.

அதுக்குள்ள என் சமையல் பிடிக்காம போயிட்டதா?

பெண்களுக்குள் உள்ள இயல்பான பொறாமைக்குணம் உன்னை விட எனக்குத்தான் உரிமை அதிகம் என்ற மனப்பாங்கு தானாகவே ஆஜரானது.

மறுநாளில் இருந்து அதிகாலையிலேயே எழுந்து மகனுக்காக அவனுக்கு பிடித்தமான டிபன் வகைகளை சமைக்க ஆரம்பித்தாள்.

சித்ராங்கி மட்டுமல்ல... உதயனும் அதிர்ந்தான்.

என்னங்க உங்க அம்மா இப்படி பண்றாங்க? என் சமையல் பிடிக்கலையா உங்களுக்கு? என்று கோபித்துக் கொள்ள...

பதறிப்போனான்.

இல்லேடா செல்லம்... நான் அப்படி சொல்வேனா? இரு வரேன் என்று அம்மாவிடம் போனவன் ஏம்மா உன்ன நீயே கஷ்டப்படுத்திக்கிற. இதுவரை பட்ட கஷ்டமே போதும்மா. நீ நல்லா ரெஸ்ட் எடும்மா. சித்ரா சமைக்கட்டும்.

இல்லேப்பா. இத்தனை காலமும் வேலை செஞ்சிட்டு இப்ப சும்மா இருக்கவே பிடிக்கலை. ரெஸ்ட் எடுத்தா உடம்பு தான் வலிக்குது. வயசான காலத்துல கைய, கால அசைச்சிட்டே இருந்தா தான் நல்லது. காலையில டிபன் மட்டும் நான் சமைக்கிறேன். மத்த வேளை



யில சித்ரா சமைக்கட்டும். என்ன இப்ப? என்று வாயடைத்தாள்.

உதயனால் மேற்கொண்டு பேச முடியவில்லை. மனைவியை சமாதானப்படுத்த முயன்றான்.

போகட்டும் விடுடா. உனக்கு நல்லது தானே?

எது நல்லது?... நான் ஆசையா உங்களுக்கு சமைச்சுப்போடுறது தப்பா? ...ம்ஹூம். எதுக்கு அரக்க பறக்க எந்திரிக்க என் கண்ணுக்குட்டி கஷ்டப்பட்டு சமைக்கணுமா? நைட்டெல்லாம் ரொம்ப நேரம் கண்ணு முழிக்க உன்னை கஷ்டப்படுத்துறேனே. காலையில லேட்டா எந்திரி. நல்லா ரெஸ்ட் எடு. மத்த நேரத்துல உன் காதல் அத்தானுக்காக வித விதமா சமைச்சுப்போடு. சரியாடி செல்லம்?

தாவாங்கட்டையை பிடித்து கொஞ்சியதில்... தலைதடவப்பட்ட நாய்க்குட்டியானாள்.

கணவனின் வார்த்தைகளை சிரமேற்கொண்டு அவனை வேலைக்கு அனுப்பி வைத்து விட்டு மறுபடியும் வந்து படுத்து விடுவாள். 10 மணி வரை தூங்கி விட்டு மெல்ல குளித்து டிபன் சாப்பிடுவாள். அதன் பிறகு சமையல், மற்ற வேலைகளை ஆரம்பித்தாள். தினமும் இதே வழக்கமாக முகம் சுருக்கினாள் வடிவு.

கணவன் கிளம்பியதும் படுக்கச் சென்றவளை ஒரு நிமிஷம் நில்லு சித்ரா என்றாள்.

என்னத்தை?

என்ன கெட்ட பழக்கம்? ஒரு சுமங்கலி பொண்ணு புருஷனை வேலைக்கு அனுப்பிட்டு தூங்கலாமா? வீட்டுக்கு ஆகாதும்மா.

...?

உன்னை நீயே கண்ணாடியிலே பார். கொடி மாதிரி இருந்த உன் இடுப்புல சதை போட்டிருக்கிறதை.

போய் குளிச்சிட்டு, சாப்பிட்டுட்டு வேலையப்பாரும்மா.

''டி.வி. சீரியல்களில் நடிப்பவர்களின் சம்பளப் பேச்சு வார்த்தை முடிந்து விட்டதா...?''

''எங்கே,... இழுத்துக் கிட்டே போகுது...''

''அதுவுமா?''

-எம்.அசோக்ராஜா, அரவக்குறிச்சிப்பட்டி.



மறுநாளே அம்மாவிடம் உதயா, அம்மா சித்ரா லேட்டா எழுந்தே பழகினவ. தூங்கட்டும் விடும்மா. துணி துவைக்க, வீடு துடைக்க ஒரு ஆளை ஏற்பாடு பண்ணிடுறேன்.

இல்லேப்பா... நான் என்ன சொல்ல வர்றேன்னா... ப்ச். இதோட விடும்மா. அந்த காலம் வேற, இந்த காலம் வேற. எனக்கு ஆபீசுக்கு டைமாயிடுச்சு வரேம்மா.

முகத்தில் அடிபட்ட உணர்வுடன் குன்றிப்போனாள்.

என்ன தப்பாய் சொல்லி விட்டேன்? எதற்காக அந்தப்பெண் என்ன சொன்னாலும் ஜால்ரா போடுகிறான். என் பிள்ளை என்னை விட்டு கொஞ்சங் கொஞ்சமாய் விலகிப்போகிறானா?

மருகினாள் வடிவு.

## 14

திருமணமாகி ஆறு மாதம் ஓடிப்போனது. சித்ராங்கி மாதம் தவறாமல் உட்கார்ந்தது வடிவை நெருடியது.

'என்னாச்சு என் குடும்பத்துக்கு! என் வம்சம் இப்படியேப் பட்டுப்போய் விடுமா? எந்த தெய்வத்துக்கு குறைவச்சோம்? எங்க பரம்பரையிலே யாருக்கும் குழந்தை இல்லாம இருந்ததில்லையே! ஏன் எங்களுக்கு மட்டும் வேதனைக்கு மேல் வேதனையைத் தருகிறாய்? என் குடும்ப வம்சம் தழைக்கணும். இந்த வீட்ல பிஞ்சு கால்களோட கொலுசு சத்தம் கேட்கணும். ஓடியாடி விளையாடணும். என் உயிரை வேணா எடுத்துக்க கடவுளே... ஆனா, என் பிள்ளைக்கு ஒரு குழந்தையாவது குடு!''

இந்த பித்திலேயே அலைந்த வடிவு மறுபடி கோவில் கோவிலாய் படையெடுத்தாள். பால் அபிஷேகம் பண்ணுவது பொங்கல் வைப்பது என்று திரிந்தாள்.

அன்று... சித்ராங்கியின் நெற்றி நிறைய குங்குமத்தை எடுத்து இட்டவள், கொஞ்சம் வேப்பிலையையும், ஒரு எலுமிச்சை பழத்தையும் கையில் வைத்து அழுத்தினாள்.

''இ..இது... எதுக்கு அத்தை?''

''பெரிய பாளையத்தம்மன் கோவிலுக்கு பொங்கல் வச்சிட்டு வந்தேன். சக்தி உடைய மாரியம்மாளாச்சே. ஐயர் நல்லா பூஜைப் பண்ணி இதைக் கொடுத்தார். வேப்பிலையை மென்று சாப்பிட்டுட்டு, இந்த எலுமிச்சைப்பழத்தை பிழிஞ்சு குடிச்சிடு!''

''ஏ...ஏன் அத்தை?''

''உன் வயித்துல குழந்தை தங்க வேண்டாமா? அதுக்காகதாம்மா! ஆறு மாசமாய்டுச்சு. இன்னும் ஒரு நல்ல செய்திய சொல்லலையே! ஏங்கிப்போயிருக்கேன் சித்ராம்மா. சீக்கிரம் நம்ம வீட்ல குழந்தையோட சத்தம் கேக்கணும். ஓடியாடி விளையாடணும். அதோட மூத்திரத்துல நான் நனையணும். தயவு பண்ணி இதை சாப்பிட்டு சித்ரா!''



சித்ராங்கியினுள் உடல் முழுக்க பயரேகையொன் மின்னலாய் ஊடுருவியது.

இரவு ஏழு மணிக்கு வீடு திரும்பிய உதயன், மனைவியைப் பார்த்து அலறாத குறையாய் பதறினான்.

போர்வைக்குள் காய்ச்சலால் குலுங்கிக் கொண்டிருந்தாள்.

''சித்ரா... சித்து... என்னடா... என்னடா ஆச்சு?'' போர்வையை விலக்கித் தொட்டவன் திடுக்கிட்டான்.

''மை காட்... என்ன இப்படி கொதிக்குது... ஒரு ஒரே நிமிஷம் பொறுத்துக்க... வந்துட்டேன்!''

விரைந்து செயல்பட்டான்.

ஐந்தே நிமிடத்தில் ஆட்டோவை அழைத்து வந்தவன், அவளை குழந்தையைப் போல் கைகளில் ஏந்தி ஆட்டோவில் கிடத்தினான்.

பிரமையினால் லேசாய் மயக்கம் வருவதுப்போல் உணர்ந்த வடிவு அப்படியே படுத்து உறங்கி விட்டிருந்தாள். சித்ராவை உதயன் தூக்கிச் செல்லும் போது தான் பார்த்து திகைத்தாள்.

''உதயா... என்னப்பா ஆச்சு?''

''ஆமா... இப்பக் கேளும்மா... வீட்லேயே இருக்கே... இதைக் கூட பார்த்துக்க முடியாதா? தனியா காய்ச்சல்ல முனகிட்டிருந்தா... நானும் வரலேன்னா...''

''கடவுளே... நான் கவனிக்கலேப்பா!''

அவள் சொல்வதை காதில் வாங்கிக் கொள்ளாத ஆட்டோ விரைந்தது.

''என்ன... இந்தப்புள்ள இப்படி பேசிட்டுப்போகுது? ப்ச்... காலம் மாறுதுல்ல... பாசமும் மாறத்தானே செய்யும்?'' பெருமூச்சு விட்டாள்.

இரவு பத்து மணிக்கு மேலேயே ஆனது அவர்கள் வீடு திரும்ப.

''நானும் கூட வந்திருப்பேனே... அதுக்குள்ளே போய்ட்டே... சித்ராவுக்கு இப்ப எப்படி இருக்கு உதயா?''

''பரவாயில்லேம்மா... இன்னும் கொஞ்சம் விட்டிருந்தால் காய்ச்சல் மூளைக்கு எட்டியிருக்கும். நல்லவேளை நான் வந்துட்டேன்!''

''முருகா... இதென்ன சோதனை? காலையில்கூட நல்லாதானே இருந்தா... அதுக்குள்ளே எப்படி இவ்வளவு காய்ச்சல் வந்தது?''

''உன்னாலதாம்மா...!''

''என்னாலா? என்னடாப்பா புதுசா குண்டைத் தூக்கிப் போடறே?''

''ஆமாம்மா... உன்னாலதான்!'' கோபத்தில் வெடித்தான்.

''......?!''

''எதுக்காக வேப்பிலை, எலுமிச்சைப்பழம்னு குடுத்து சாப்பிடச் சொல்லி பயமுறுத்தறே?''

''.......?!''

''எங்களுக்கு குழந்தை பிறக்கட்டும், பிறக்காமலே போகட்டும்.

உனக்கென்னம்மா வந்தது? நீ ஏன் அதைப்பத்தி பேசறே?''

''உ...உ...த...யா!''

''வா...வா...உன்னோடத் தொல்லையாப் போச்சம்மா. உனக்குக் கொள்ளிப்போட நான் இருக்கேன் இல்லே. அதோட சந்தோஷப்பட்டுக்க. எங்களுக்கு கொள்ளிப்போட பிள்ளை பிறந்தா பிறக்கட்டும். பிறக்காம கூட இருக்கட்டும். நாங்க கவலைப்படப் போறதில்லே. ஒவ்வொண்ணா சொல்லி, ஒவ்வொண்ணா சாப்பிடக் கொடுத்து கஷ்டப்படுத்தறதால தான், அந்த பயத்துலேயே அவளுக்கு குழந்தை தங்க மாட்டேங்குது.

அதை ஏன் புரிஞ்சுக்க மாட்டேங்கறே. உன் டார்ச்சர் தாங்காமத் தான் அண்ணி வாயே திறக்காம போய் சேர்ந்துட்டாங்க. அடுத்த குறி என் பொண்டாட்டியா? உன்னைப் பார்த்தாலே பயப்படறாம்மா. ஏம்மா... ஏம்மா புரிஞ்சுக்காம எங்களை பாடாய் படுத்தறே?''

''...?!''

''என்ன குறை வச்சேன் உனக்கு? சாப்பிட்டோமா, டி.வி.யில சீரியல் பார்த்தோமா, தூங்கினோமான்னு இல்லாம ஏன் டார்ச்சர் பண்றே? பாரு... என்னையே இவ்வளவு தூரம் பேச வச்சிட்டே!''

''...?!''

''அண்ணி செத்தப்ப... அண்ணனும் சேர்ந்து உயிரை விட்டுச்சே... அதே மாதிரி எங்களையும் பார்க்கணும்னு நினைக்கறியா? அது தான் உன் விருப்பம்னா, தாராளமா தொடர்ந்து செய்!''

வெறுப்புடன் தன்னறைக்குச் சென்று பட்டென்று முகத்தில் அறைவது போல் கதவை அறைந்து சாத்தினான்.

விக்கித்துப் போனாள் வடிவு!

★★★

பெற்றவர்கள் உரிமையாய் கண்டிப்பது மயிலிறகாய் அடிப்பது போன்றது. உடன் பிறப்புகளுடன் உரசல் என்பது நீர்க்குமிழி போன்றது. கணவன் அடிப்பது காதலின் வெளிப்பாடு. ஆனால், பெற்ற

''எனக்கும், என் மனைவிக்கும் 'அறவே' ஒத்துக்கலை''

''அதான் 'துறவே' மேல்னு துண்டை உதறி தோளில் போட்டுட்டு வந்துட்டீங்க அப்படித் தானே...''

- சிவ இராமலிங்கம்,
தூத்துக்குடி





பிள்ளை சொற்களால் வதைப்பது கரண்ட்ஷாக் கொடுப்பது போல! அதையாராலுமே தாங்கிக் கொள்ள முடியாது.

அப்படித்தான் தாங்கிக் கொள்ள முடியாமல் படுத்து விட்டாள் வடிவு. இருவரிடமும் பேசவில்லை. சாப்பிடவுமில்லை. மனம் நொந்து அழுதாள்.

உதயனும் அம்மாவைக் கண்டு கொள்ளவில்லை. அலுவலகம் முடிந்து வந்தால் மனைவியை கவனித்துக் கொள்வதிலேயே கண்ணும் கருத்துமாக இருந்தான்.

சித்ரா, மறுநாளே நார்மலுக்கு வந்து விட்டாலும், கொஞ்சம் களைத்துப் போயிருந்தாள்.

அன்றும் வீடுதிரும்பியவன், கண்கள் உள்வாங்கி சோர்ந்து போய் படுத்திருந்த அம்மாவை பார்த்து முகம் மாறினான்.

''பாவம்... ரொம்பவே திட்டி விட்டேனா? சே... நானாவது பேசியிருக்கலாம். ஏன் எனக்கு இவ்வளவு கோபம் வருகிறது?''

அவனும் சித்ராவும் இரவு உணவை சாப்பிடும் போது கேட்டான்.

''அம்மா சாப்பிட்டாங்களா சித்ரா?''

''தெரியாதுங்க''

''இதென்ன பதில்... ஒரே வீட்டில் ரெண்டு பேரும் இருக்கீங்க... மத்தவங்க சாப்பிட்டாங்களான்னு கூட தெரியாதுங்கறே?''

''அன்னைக்கு சாப்பிடச் சொன்னேன்.

''வேணாம்மா... நான் மூச்ச விட்டாக்கூட தப்பா எடுக்கற வீட்ல நான் எதுக்கு சாப்பிடணும்? இப்படியே இருந்து மூச்சை விட்டா... எல்லாருக்கும் நிம்மதின்னு வேண்டாம்னுட்டாங்க!''

''என்னது... சாப்பிடலையா? இது எப்ப நடந்தது?''

''எனக்கு காய்ச்சல் வந்த மறுநாள்!''

''மைகாட்... எங்கம்மா மூணு நாளா சாப்பிடாம இருக்காங்களா? இதை ஏன் அன்னைக்கே என்கிட்டே சொல்லலே!''

''மறந்துட்டேங்க!''

''சீ...'' மனைவியை வெறுப்பாகப் பார்த்தவன் அதற்கு மேல் பேசப் பிடிக்காமல், சாப்பாட்டை உதறி வெளியில் வந்தான்.

''அம்மா... அம்மா...!''

''...?!''

பதில் கூறாமல் எங்கோ வெறித்துப் பார்த்தாள் வடிவு.

''அம்மா... என்னம்மா நீ... மூணு நாளா சாப்பிடாம இருந்திருக்கே... எனக்குத் தெரியாதும்மா... வயசான காலத்திலே இப்படி சாப்பிடாமக் கிடந்தா உடம்பு என்னத்துக்காகும்?''

''...?!''

''ஏம்மா பேசவே மாட்டேங்கறே. ஏதோ அந்த நேரத்தில கோபத்திலே பேசிட்டேன். தப்புதான், மன்னிச்சிடு. இப்ப நினைச்

கப் பார்த்தா எனக்கே அசிங்கமாயிருக்கு''

''...?!''

''எழுந்தும்மா... ரொம்ப விக்காத் தெரியதே. எம்மா கோபத்திலே ரெண்டு வார்த்தை பேச எனக்கு உரிமை இல்லையா?''

வடிவின் கண்களில் மாலை மாலையாக கண்ணீர் வழிந்தது.

''ப்ளீஸ்ம்மா... எந்திரிம்மா... சாப்பிடும்மா. உன் கால்ல விழுந்து மன்னிப்புக் கேட்டுக்கறேன்... சாப்பிடும்மா!'' அம்மாவின் காலை அழுத்தமாய் பற்றிக் கொண்டான்.

அப்போதும் அசையவில்லை.... வடிவு.

''சரிம்மா... இப்படியே இருந்துக்க... உனக்கே அவ்வளவு வீம்புன்னா... நீ பெத்த புள்ள எனக்கு எவ்வளவு இருக்கும்? நீ சாப்பிடற வரை இனி நானும் சாப்பிடப் போறதில்லை. இதுஉன் மேல சத்தியம்!''

அவனைக் கருவில் சுமந்தவயிறு கண்டி விட்டது போல் வலித்தது அந்த வார்த்தையில்....!

எழுந்தமர்ந்தவள் வாய் விட்டு அழுதாள். அதில் சுயவிரக்கமும், மகனின் மீதுள்ள பாசமும் வெளிப்பட... அம்மாவை தன் தோள் மீது சாய்த்து ஆறுதலாய் தட்டிக் கொடுத்து தானும் கண்ணீர் விட்டான்.

## 15

நாட்கள் சில கடந்தன.

சித்ராங்கிக்கு நாட்கள் தள்ளிப் போயிருந்தன. விஷயம் கேள்விப்பட்டவுடன் உதயன் வெகுவாய் மகிழ்ந்தான். அவனை விட அதிகமாய் வடிவு சந்தோஷப்பட்டாள்.

அதுநாள் வரை மருமகளிடம் பேசாமல் இருந்தவள்... அதற்கு மேல் சும்மாயிருக்க முடியவில்லை.

''அம்மாடி..... சித்ரா... என் வயித்துல பாலை வார்த்துட்டே. இதோ பார்.... இனிமே நீ எந்த வேலையும் செய்யக்கூடாது. நானே பார்த்துக்கறேன். உன் உடம்பும் ரொம்பவும் பலகீனமா இருக்கு. நல்லா சமைக்கிறே தான்... இல்லேங்கல.... ஆனா, சத்துள்ள உணவா சமைக்க மாட்டேங்கறியே! நான் உனக்கு சமைச்சு போடுறேன் கண்ணு. இங்கே வந்து ஒருநாளும் நீ கீரை சமைச்சதே இல்லேயே. இப்ப நீ நிறைய சாப்பிடணும், தினமும் சாப்பிடணும் அப்புறம் பார் குழந்தை எப்படிப் பிறக்கிறான்னு!''

சொன்னதோடு நில்லாமல் சைத்வியை கவனித்ததை விட அதிகமாய் தாங்கினாள். கடையில் வாங்கினால் கலப்படமிருக்கும் என்று தானே வெண்ணையை வாங்கி வந்து நெய் உருக்கி எடுத்தாள். அவளுக்கு ஊட்டாதக் குறையாய் பரிமாறினாள்.

மாமியாரின் அதிகப்படியான உபச்சாரமும், பணிவிடையும் சித்



ராங்கியை வெகுவாக பயமுறுத்தின.

'இது கர்ப்பமா... இல்லையான்னே தெரியலே, இதுக்கே இவ்வளவு ஆர்ப்பாட்டம் பண்றாளே இந்தக் கிழவி. இது கர்ப்பமில்லை என்று டாக்டர் சொல்லி விட்டால்? என்னாகும்? என்னையும் மூத்த மருமகளைப் போல் சாகடித்து விடுவாளோ... ஐயோ!''

கணவனிடம் அழுதாள்.

''நான்... எங்கண்ணன் வீட்டுக்குப் போய்டறேங்க''.

''என்னடா.. சித்து திடீர்னு... ஏய்... கண்ணு கலங்குது. அழறியா என்ன?

''எனக்கு இங்கே பயமாயிருக்குங்க...''

''பயமா... எதுக்கு?''

''உங்கம்மா பண்ற அலம்பல் தாங்கலைங்க...''

''.....?!''

''நாள் தள்ளிப் போயிருக்குன்னு சொன்னேன். இது கர்ப்பம் தானான்னு இப்பவே யாரால சொல்ல முடியும்? அதுக்கு இன்னும் இருபத்தஞ்சு நாள் இருக்கு. அதுக்குள்ளே கண்டதையும் சமைச்சுப் போட்டு, சாப்பிட்டே ஆகணும்னு கட்டாயப்படுத்தறாங்க. எனக்கு கீரையும், நெய்யும்னாலே அலர்ஜி. சாப்பிடப்பிடிக்காது. ஆனா, அதை தினமும் வாயிலே திணிக்காதக் குறையா... கட்டாயப்படுத்தறாங்க. இதெல்லாம் அன்பா செய்ய நாங்க தான்.... மறுக்கலே. ஆனா, அவங்க செய்யற ஒவ்வொண்ணும் பயத்தைத் தருது. டென்ஷனா இருக்கு, இந்த டென்ஷன்லேயே எனக்கு ஏதாவது ஆயிடுச்சுன்னா... உங்கம்மா சும்மா விட்டுவாங்களா? நானும்... உங்கண்ணி மாதிரி சாகணும்...''

''ச்சட்... என்ன சித்து இப்படியெல்லாம் பேசிக்கிட்டு... நான் அம்மாக்கிட்டே பேசறேன்.''

''இல்லைங்க... அவங்க சுபாவம் என்னன்னு எனக்குத் தெரியும். அவங்களால் சும்மாயிருக்க முடியாது. நமக்கு.... முக்கியமா எனக்கு என் குழந்தை வேணும். நல்லபடியா பெத்துக்கணும். அதுக்கு எனக்கு நல்ல சூழ்நிலையும், சந்தோஷமும் முக்கியம். தினம் தினம் என்னால செத்துப்பிழைக்க முடியாது. உங்கம்மாவை பத்தி ஊருக்கேத் தெரியும்... அப்புறம் எப்படிங்க பயப்படாம இருக்க முடியும்?''

''நீ சொல்றதும் சரிதாம்மா... அதுக்காக உன்னைப் பிரிஞ்சி இருக்க முடியுமா? பிரசவத்துக்கே கூட உன்னை நான் அண்ணன் வீட்டுக்கு அனுப்ப மாட்டேன்னு ஏற்கனவே சொல்லிட்டேன்! ரெண்டு நர்ஸை வீட்டோடப் போட்டு உன்னை பார்த்துக்கறேன்.

''அது வரைக்கும் என் பிள்ளை வயித்துல தங்கும்னு நம்பிக்கை இல்லைங்க...''

''அபசகுனமாப் பேசாதே! நான் என்னதான் பண்ணட்டும்

சொல்லு!''

''நான் அண்ணன் வீட்டுக்கு போறேன். இல்லேன்னா குழந்தை பிறக்கிற வரைக்கும் உங்கம்மா யாராவது சொந்தக்காரங்க வீட்ல இருக்கட்டும். இங்கே ரெண்டு பேரும் ஒண்ணா இருக்கிறது சாத்தியமில்லை.''

''இப்ப எந்த சொந்தக்காரங்களோடும் டச் இல்லை சித்து. அம்மாவுக்கு சங்கடத்தைத் தர்றாங்கன்னு நாங்களே ஒதுங்கிட்டோம்.''

''அப்ப நான் போய்டறேன்.''

''அவசரப்படாதே... யோசிக்க கொஞ்சம் டைம் கொடு!''

''ம்...!''

★★★

வடிவும் தன் மகன் என்ன முடிவெடுக்கப் போகிறான் என்றறியக் காத்திருந்தாள்.

கணவனும், மனைவியும் பேசுவதை ஒட்டுக் கேட்பது மகா குற்றம் தான். ஆனால், 'அம்மா' என்று அவனைப்பற்றி அறைக்குள்ளேப் பேசுகிறார்கள் என்றறிந்ததும் ஆவல் தாங்காமல் ஒட்டுக் கேட்டு, விஷயத்தின் விபரீதம் அறிந்து மனத்திற்குள் மீண்டும் அடிபட்டாள்.

ஆர்ச் தாண்டி விழும் குற்றால அருவியாய் உள்ளம் பொங்கியது.

'என்னதான் நடக்கிறது இந்த வீட்டில்?'

மகன் மீது பாசம் காட்டுவதும், மருமகள் மீது அக்கறை காட்டுவதும் கொலைக் குற்றமா? நான் என்ன பேயா, பிசாசா? என்னைப் பார்த்து பயப்பட...! சைந்தவி மீது நான் எவ்வளவு அன்புக் காட்டினேன்? அதற்காக ஏங்கினாளே அந்தப் பொண்ணு? இமைக்குள் வச்சுத் தாங்கினேனே. அந்த அன்பை தாங்க முடியாமல் என் மடியில் படுத்து ஒருநாள், ''நீங்க அத்தை இல்லே... அம்மா!'' என்றழுதாளே பாவிப் பொண்ணு ஏன் செத்தா, எதுக்கு செத்தான்னு புரியலே. ஆனா, என் மேல கொலைப்பழி விழுந்து, பிள்ளையையும், புருஷனையும் இழந்து, ஏழு வருஷம் தண்டனை அனுபவிச்சு... அவமானப்பட்டேனே! இவளிடமும் அன்பாக தானே நடந்துக்கறேன். ஏன் பயப்படணும்? என்ன செய்யப் போகிறான் உதயா?'

பெற்ற மனம் தவியாய் தவித்தது.

உதயன் வெகுவாய் யோசித்து ஒரு முடிவுக்கு வந்தான். எப்படி சொல்லுவது என்று தயங்கி, தடுமாறி வேறு வழியில்லை... சொல்லித்தான் ஆக வேண்டும் என்று தைரியத்தை வரவழைத்துக் கொண்டான்.

''அம்மா...''

''என்னப்பா?''

''உன்கிட்டே கொஞ்சம் பேசணும்.''

''தாராளமா... நான் என்ன உன்னை மாதிரி பிஸியாய் வேலை



''எதுக்கு புடவைக்கு பதிலா பாத்திரம் கேக்கறீங்க?''

''உங்க புடவை சாயம் போகுது. பாத்திரம் சாயம் போகாதில்லை''

- ஆர். தங்கராஜ், திருப்பூர்



செய்யறவளா, வெட்டியா வீட்ல உட்கார்ந்துட்டிருக்கிறேன்... என்ன... பேசப்பா...''

''அம்மா...நான் உன்மேல ரொம்ப பாசம் வச்சிருக்கேன்.''

''தெரியுமேப்பா...!''

''சில பிரச்சனைகள் விளக்கிப் பேச விரும்பல... அது எனக்கும் சரி, உனக்கும் சரி வலிக்கும். ஆனா, இதிலே நம்ம குடும்பத்தோட எதிர்காலம், நிம்மதி எல்லாமே அடங்கியிருக்கு. பிரிவு அன்பை உறுதியாக்கும் அதனால தாம்மா இந்த முடிவு!''

''பிரிவா... என்ன பிரிவு... யார், யாரைப் பிரியப் போறோம்?''

''உன் நன்மைக்காகவும் தான் சொல்றேன்ம்மா... தயவுப் பண்ணி என்னைத் தப்பா மட்டும் புரிஞ்சுக்காதே, ஒரே... ஒரு விஷயம் மட்டும்... நீ எங்களைப் பிரிஞ்சிருக்கணும்.''

''உ...த...யா!'' எதிர்பார்த்தது தான். ஆனால், அந்த அடி பலமாகவே இருந்தது.

''ஏம்ப்பா...நான் உனக்கு பாரமாய்ட்டேனா? ஏன் இந்த முடிவு?'' உதடு பிதுக்கி, குழந்தையைப் போல் அழுதாள்.

தாங்க முடியவில்லை மகனால்.

''அம்மா... அழாதேம்மா... உன் கண்ணீர் என்னை அழிச்சிடும். நான் விரும்பி எடுத்த முடிவல்லம்மா இது! இன்னும் ரெண்டு உயிர் சம்பந்தப்பட்டிருப்பதால்... வேறவழியில்லாம எடுத்தது. ஏன், எதுக்குன்னு கேக்காதேம்மா. உன்னை முதியோர் இல்லத்துல... சாதாரண ஹாஸ்டல் இல்லேம்மா... எல்லா வசதியும் இருக்கிற டீலக்ஸ் ஹாஸ்டல். மாசம் அஞ்சாயிரம் ரூபாய் வாடகை. நல்ல சாப்பாடு, பொழுதுபோக்க ஏகப்பட்ட விஷயங்கள் இருக்கு. காலாற நடக்க அருமையான தோட்டம், வாரத்துக்கொரு முறை செக் பண்ண டாக்டர்னு... எல்லா வசதிகளோடும் இருக்கிற இடத்துல தாம்மா சேர்க்கப் போறேன். இங்கே இருக்கறதை விட.... மகாராணி மாதிரி அங்கே இருப்பேம்மா!''

''......?!''

''ஒரே ஒரு வருஷம் தாம்மா. அப்புறம் நாமெல்லாரும் சேர்ந்து வாழலாம்!''

''.....?''

''என்னம்மா சொல்றே?''

''போறேன்ப்பா... போய்டறேன்!''

''வருத்தத்தோடு சொல்றியேம்மா!''

'' இரிக்க முடியலேப்பா... எனக்கு நடிக்க முடியலே!'' மனசும், உடம்பும் தளர்ந்துப் போய், ஆயாசத்துடன் தன்னறைக்குச் சென்று கதவை சாத்திக் கொண்டான்.

''மன்னிச்சிடும்மா... எனக்கு வேற வழி தெரியல...' கண்களில் நீர்முட்ட வெகுநேரம் சாத்திய கதவையேப் பார்த்துக் கொண்டிருந்தான் உதயன்.

முகத்தில் சுருக்கங்கள் விழலாம். ஆனால் இதயத்தில் விழக்கூடாது. அடி....அடி.....அடி..... மேலும் மேலும் அடி விழுந்ததில் சுருண்டு போனாள் வடிவு.

ஜெயிலும், முதியோர் இல்லமும் வேறு வேறா என்ன? சட்டத்தின் முன் குற்றவாளியாக்கப்பட்டு ஜெயிலில் போட்டார்கள். இன்று மருமகளால் குற்றவாளியாக்கப்பட்டு முதியோர் இல்லத்திற்கு அனுப்பப்படுகிறேன்.

அப்பவும் சரி, இப்பவும் சரி நான் நிரபராதி தானே?

என் சித்ரா அம்மாளை சிறுவயதிலேயே இழந்தகாளா? என்னோட தாய் அன்பு உனக்கு பயமாய் இருக்கிறதா? வேணாம்மா நீங்க எல்லாம் இனம் குருத்துங்க. என்னால் உங்களுக்கு எந்த கஷ்டமும் வாவேண்டாம்.

ஆசைப்படுறதுக்கு தகுதியுள்ளவங்கனு கடவுளால் விதிக்கப்பட்டவங்க சில பேர் இருக்காங்க போல. நான் எதுக்கும் ஆசைப்பட தகுதியில்லை. மகன் மருமகள், பேரக்குழந்தைகள்னு அவங்களோட சேர்ந்து வாழ எனக்கு தகுதியில்லே. என்னா நான் ஜெயிலுக்கு போய் வந்தவ.

உதயா.... எவ்வளவு பெரிய தண்டனைப்பா கொடுத்திட்ட எனக்கு? டீலக்ஸ் ஹாஸ்டல் அது, இதுனு என்னை சமாதானப்படுத்துறீயா? பிள்ளையை பெத்து வளர்க்க ஒரு தாய் எவ்வளவு கஷ்டப்படுறா? ஒவ்வொரு பிரசவமும் மறு ஜென்மம் மாதிரி. எவ்வளவோ தியாகம் பண்ணித்தான் வளர்க்கிறா ஒவ்வொருத்தியும். அதைஎன் பிள்ளைங்க நினைக்க பார்க்கிறதே இல்லை? கருப்பையிலே சுமந்தவளை... சுமையா நினைச்சு முதியோர் இல்லத்திற்கு அனுப்புறது எந்தவிதத்தில் நியாயம்.

வேணாம் உதயா.... அந்த பாவத்தை நீ செய்யாதே. உன் சந்ததி நல்லாயிருக்கனும். நம்ம பரம்பரை வளரனும், நீ என்னை அனுப்பாதே. நானே போயிடுறேன்பா. இனி உன் பொண்டாட்டி எப்பவும் பயப்பட தேவையில்ல. போறேன்பா.... போறேன்.... இரவெல்லாம் உறங்காமல் அழுது கொண்டே இருந்தாள் வடிவு.



## 16

மறுநாள் விடிந்தபோது... வீட்டில் வடிவு இல்லை!

உதயன் மட்டுமல்ல சித்ராங்கியும் அதிர்ந்துதான் போனாள்.

குற்ற உணர்வுடன் உதயன் எங்கெங்கோ தேடினான்.

''தப்புப் பண்ணிட்டேன்மா! எவ்வளவு வேதனைப் பட்டிருந்தால் என்னை விட்டுப் போயிருப்பாய். எனக்கு பிள்ளை வேண்டும் என்பதற்காக உன்னை வீட்டை விட்டு போகச் சொன்னது தப்புதாம்மா. ஏற்கனவே பட்ட அடியிலிருந்து இப்போது தான் கொஞ்சம் கொஞ்சமாய் மீண்டு வந்தாய். மறுபடி நானே உன்னை தண்டித்து விட்டேனே! எனக்கு குழந்தையே பிறக்கலேன்னாக்கூட பரவாயில்லேம்மா... எனக்கு நீ வேணும்... வந்துடும்மா ப்ளீஸ்...!'' தேடிய நேரங்கள் போக, மருகினான், துடித்தான், அழுதான்.

வடிவு கிடைக்கவேயில்லை. போலீஸில் புகார் செய்வது தான் புத்திசாலித்தனம் என்று கருதியவன் சித்ராங்கியிடம் கேட்டான்.

''சித்ரா... அம்மா காணாமல் போன அன்னைக்கு என்ன கலர் புடவை கட்டிட்டு இருந்தாங்கன்னு தெரியுமா?''

''தெரியாதுங்க... அவங்கதான்... விடியறதுக்கு முன்னாடியே நமக்குத் தெரியாம போய்ட்டாங்களே!''

போட்டோவைத் தவிர வேறெந்த அடையாளமும் சொல்ல முடியவில்லை.

போலீசார் அப்படியொன்றும் சிரத்தையாய் தேடியது போல் தெரியவில்லை.

ஒரு மாதம் கழித்து போலீஸ் ஸ்டேஷனிலிருந்து அழைப்பு வந்தது.

போரூர் தாண்டி, ஒரு குட்டையில் அறுபது வயது மதிக்கத்தக்க பெண்மணியின் பிணம் ஒன்று அழுகிப்போய் கிடந்தது. இறந்து ஒரு மாதத்திற்கு மேல் ஆகியிருந்தது. சேறும், சகதியுமாய், புழுக்கள் நெளிந்து கோரமாய்... ஆனாலும் அதையெல்லாம் மீறி தெரிந்த சாயல் வடிவைப் போலவே இருக்க... தலையில் மடேர் மடேர் என்று அடித்துக் கொண்டு அழுதான்.

''கொன்னுட்டேன்மா... பொண்டாட்டி பேச்சைக் கேட்டு உன்னை நான் பறிகொடுத்துட்டேம்மா...!''

அந்தக் குற்ற உணர்ச்சி நிரந்தர வடுவாய் அவனுள் தங்கி விட்டது.

மூன்றரை வருடம் ஓடிப் போனது.

ஆதித்யா! உதயனின் மூன்று வயது பையனின் கள்ளமில்லாச் சிரிப்பிலும், துறு துறு ஓட்டத்திலும், மென்மையான ஸ்பரிசத்திலும் வேதனைகளை மறந்து கொண்டிருந்தான்.

சித்ராங்கி மறுபடியும் உண்டாகியிருந்தாள். இது ஐந்தாவது மாதம். வயிறு மேடிட்டிருந்தது.

அன்று... விடியற்காலையில்... வந்த கனவில், திடுக்கிட்டு எழுந்தமர்ந்தான் உதயன்.

இன்னும் காதில் முட்டிமோதிக்கொண்டிருந்தது அப்பா தாமோதரனின் குரல்!

''தப்புப் பண்ணிட்டே உதயா... பெரிய தப்புப் பண்ணிட்டே.... உங்கம்மா மனசை சாந்தப்படுத்து. முதியோர்களுக்கு அன்னதானம் செய்! உனக்கு அதிர்ஷ்டமிருந்தா உங்கம்மா உன்னை மன்னிப்பா!'

கலக்கத்துடன் யோசித்தான்.

'என்ன அர்த்தம் இதற்கு?'

அந்த வாரத்திலேயே வந்த ஆதித்யாவின் மூன்றாவது பிறந்த நாளுக்கு, பிறர் உதவியால் இயங்கிக் கொண்டிருந்த முதியோர் இல்லத்தை தேர்ந்தெடுத்து அன்னதானம் செய்ய முடிவெடுத்தான்.

அறுசுவையுடன் உணவு! உதயன் ஒரு பக்கமும், சித்ராங்கி ஒரு பக்கமுமாய் அவர்கள் கையாலேயே உணவு பரிமாறினர். உதயன் ஒவ்வொருவரையும் தன் அம்மாவாக நினைத்து கலங்கிய கண்களுடன் பாசமாய் பரிமாறினான்.

சித்ராங்கி குனிந்து, குனிந்து பரிமாறியதில் மூச்சு வாங்கினாள். இன்னும் பத்துப் பேருக்கு பரிமாறினால் முடிந்தது. வேகமாக பரிமாறியவள், அடுத்த இலையில் அமர்ந்திருந்தவளைப் பார்த்து... தூக்கி வாரிப்போட, நெஞ்சில் கை வைத்து திடுக்கிட்டாள்.


தேவியின் கண்மணி
சந்தா விவரம்

ஓர் ஆண்டு ரூ. 140/-

6 மாதம் ரூ. 70/-

வெளிநாடு ரூ. 750/-

அனுப்ப வேண்டிய முகவரி:

நிர்வாகி

தேவியின் கண்மணி

246, அண்ணாசாலை,

ஆயிரம் விளக்கு,

சென்னை-600 006.


அந்தக் கூட்டத்தில் ஒருத்தியாக வடிவு அமர்ந்திருந்தாள். வயது கூடி சோர்ந்து, தேகம் ஒடுங்கி, ஒல்லியாக, பரிதாபமான தோற்றத்துடன்! கண்களில் இனம்புரியாத ஏக்கம்!

வடிவும் மருமகளை.எவ்வித உணர்வுமின்றி வெறித்துப் பார்த்தாள்.

'என்ன செய்வது இப்போது?' சித்ராங்கி திரும்பி கணவனைப் பார்த்தாள்.

அவன் மும்முரமாய் பரிமாறிக் கொண்டிருந்தான். அவன் கூடவே ஆதித்யாவும் வடை



வைத்துக் கொண்டிருந்தான்.

ஒரு கணம் யோசித்த சித்ராங்கி, ஒன்றும் தெரியாதவள் போல் அடுத்த இலைக்குப் போனாள்.

விரக்தியுடன் சிரித்தாள் வடிவு.

அவசர அவசரமாய் அந்த வரிசையில் பரிமாறி முடித்தவள், கணவனிடம் சென்றாள்.

''அந்தக் கரண்டிய இப்படிக் குடுங்க!''

''ஏன் சித்து... நானேப் பரிமாறுறேனே...!''

''ப்ச்... சொன்னாக்கேளுங்க... ஆதி கையெல்லாம் எண்ணெய், டிரஸ்ல பட்டா கறை போகாது. அவனைத் தூக்கிட்டு அந்தப்பக்கம் போய்டுங்க!'' புத்திசாலித்தனமாய் கணவனை அகற்றினாள்.

எந்தப் பேரனை பார்ப்பதற்காக... இன்று இந்த இடத்தில் வந்திருக்கிறாளோ... அந்த இடத்திற்கு இதோ அவள் ஆசைப் பேரனும், அன்பு மகனும்!

போகும் அவர்களை... ஆசையுடன் பார்த்து... நெஞ்சில் நிரப்பிக் கொண்டாள்.

'போதும் ஆண்டவா! என் பேரனை கண்ல காட்டிட்டியே... இந்த ஜென்மத்துக்கு இது போதும்பா!' பெருமூச்சுடன் தன் இலையில் இருந்த சாப்பாடை பக்கத்தில் இருந்த பத்மாவின் இலையில் கொட்டினாள்.

''நீ சாப்பிடலையா வடிவு?''

''மனசு நிறைஞ்சு போச்சு பத்மா... இது வேணாம்!''

சித்ராங்கி, ஓரக்கண்ணால், பயத்துடன் பார்த்துவிட்டு, கணவனிடம் எதையோ பேசி... அங்கிருந்து அழைத்துச் சென்று விட்டாள்.

''என்னமோ தெரியலே சித்ரா... இங்கே எதையோ இழந்துட்டுப் போறமாதிரி கஷ்டமாயிருக்கு!''

''அந்த கனவையே நினைச்சிட்டிருந்தா... அப்படித்தான். மறக்க முயற்சிப் பண்ணுங்க. முடியறப்ப... இந்த மாதிரி இல்லத்துக்கு பண உதவி செய்யுங்க. போற வழியிலே அப்படியே கோவிலுக்குப் போயிட்டு போவோம்!'' என்றாள். அவள் மனசும் தப்பு செய்து விட்டதால், குறு குறுத்துக் கொண்டிருந்தது. அதற்கு பரிகாரமாய் கோவிலுக்குச் செல்ல நினைத்தாள்.

உதயனும் கோவிலை நோக்கி காரை செலுத்தினான்.

கடவுளை நெருங்கிச் செல்வதற்கு மலையேற வேண்டிய அவசியமில்லை. உள்ளத்தை அன்புடனும், கருணையுடனும் வைத்துக் கொண்டாலே போதும்!''

-முற்றும்-